தமிழரசு

மலர் : 52 இதழ் : 6

டிசம்பர் 2021
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் தமிழறிஞர் புலவர் செ. இராசு, மறைந்த தமிழறிஞர்களான சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன் மற்றும் புலவர் இளங்குமரனார் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத் தொகையாக அவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.15 இலட்சத்திற்கான காசோலையும், திரு. முருகேச பாகவதர் மற்றும் திரு. சங்கரவள்ளி நாயகம் ஆகியோரது குடும்பத்தினருக்குத் தலா ரூ.10 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கினார்.

டிசம்பர் 7 : கொடிநாள்

பிறந்த நாட்டின் பெருமையைக் காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் நாள்

பெற்ற தாயையும், பெற்றெடுத்த செல்வங்களையும், உற்ற மனைவியையும், உறவினர்களையும் பிரிந்து, பிறந்த நாட்டின் பெருமை காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் திருநாள் இக்கொடிநாளாகும்.

நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க, கொட்டும் மழையிலும், குளிரிலும் நின்று தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது இந்தியத் திருநாட்டின் புகழைக் காக்கும் முப்படை வீரர்களின் தியாகத்தைப் போற்றுவதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு நல்வாழ்வு அமைத்துத் தருதலும் நமது கடமையன்றோ!

அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிவீசக் கொடிநாளின் கொடி விற்பனைக்கு மனமுவந்து பெருமளவில் நிதி அளிப்போம். அந்த நிதி அவர்களின் குடும்பத்தினருக்குப் பல்வேறு வகையிலும் பயன் தரும்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் தன்னலம் கருதாத அந்தத் தியாக வீரர்களுக்கான கொடிநாள் நிதிக்குத் தொகை அளிப்பதில் தமிழ்நாடு எப்போதும் தனி இடத்தைப் பெற்று வருகிறது. எனவே, இவ்வாண்டும் பெரும் அளவில் நிதி வழங்கி முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நம் வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கை ஆக்குவோம்.

– திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடிநாளையொட்டி, கொடிநாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 2021
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 6

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (குறள் : 543)

ஓர் அரசின் செங்கோன்மைதான் அறவோர் நூல்களுக்கும் அறவழிச் செயல்களுக்கும் அடிப்படையாக அமையும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ “முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு” (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.11.2021 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை) 5

★ உயர்தர ரக “வலிமை” சிமெண்ட் அறிமுகம் 9

★ வ.உ.சி.பன்னூல் திரட்டு, வ.உ.சி.திருக்குறள் உரை வெளியீடு 11

★ தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021 12

★ கோயம்புத்தூரில் 25,123 பயனாளிகளுக்கு ரூ.647 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள் 13

★ திருப்பூர் அரசு விழாவில் 4,335 பயனாளிகளுக்கு ரூ.55.61 கோடியில் நலத்திட்ட உதவிகள் 18

★ தகவல் தொழில்நுட்பத்துறையில், இந்தியாவிலேயே முன்னணி மாநிலம் தமிழ்நாடு (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.11.2021 அன்று தகவல் தொடர்பு தொழில்நுட்பத்திற்கான சர்வதேசக் கருத்தரங்கு மாநாட்டில் ஆற்றிய உரை) 32

★ முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டம் 45

★ கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் களப்பணிகள் 64

★ மகாகவியின் புகழ்பாடும் ஓராண்டுத் தொடர் நிகழ்ச்சிகள் 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 23.11.2021 அன்று கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் தொழில் துறை சார்பில் நடைபெற்ற **“முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு”** என்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

"முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு"

கோயம்புத்தூரில் முதலீட்டாளர்கள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தொழில் துறை சார்பில் "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" என்ற முதலீட்டாளர்கள் மாநாடு, 23.11.2021 அன்று, கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. இம்மாநாட்டின் வாயிலாக மொத்தம் 82 திட்டங்களின் மூலம் ரூ. 52,549 கோடி முதலீட்டில் 92,420 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றம்

இந்நிகழ்ச்சியில், ரூ. 34,723 கோடி முதலீட்டில் 74,835 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 52 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ரூ.485 கோடி முதலீடு மற்றும் 1,960 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 7 வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையில் உதிரிப் பாகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஆக மொத்தம், ரூ.35,208 கோடி முதலீட்டில், 76,795 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடும், 59 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறைக்கான கையேடு

டிட்கோ நிறுவனம் தயாரித்துள்ள மாநிலத்தில் உள்ள வான்வெளி மற்றும் பாதுகாப்புச் சார்ந்த தொழில் நிறுவனங்களின் கையேட்டினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். ஒவ்வொரு நிறுவனத்தின் உற்பத்தித் திறன், தொடர்பு விவரங்கள், உற்பத்திப் பொருட்களின் விவரம், சோதனைக்கான வசதிகள், ஆராய்ச்சி நிலையங்கள், முதற்கட்ட தொழில் பாதுகாப்புப் பூங்காக்கள், அரசு வழங்கும் மானியங்கள் போன்ற விவரங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்புத் தொழில் வழித்தடத்தில் தங்களது வாய்ப்புகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் இக்கையேடு முதலாம் மற்றும் இரண்டாம் அடுக்கு நிறுவனங்களுக்கும், OEM நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டு, விநியோகச் சங்கிலி பலப்படுத்திட உதவிடும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்களுக்கான திறன்மிகு மையம்

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறைகளுக்கான உற்பத்தியை மேம்படுத்த ஒரு திறன்மிகு மையத்தினை டிட்கோ நிறுவனம், திருவாளர் டசோ சிஸ்டம்ஸ் (M/s Dassault Systemes) நிறுவனத்துடன் இணைந்து நிறுவ உள்ளது. ரூ.212 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள, இத்திறன்மிகு மையம், பொருள் வடிவமைப்பு, உற்பத்தி மேம்பாடு, புரோட்டோ டைப்பிங், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மேம்பாடு போன்ற செயல் திறன்களை வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழிலகங்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் வழங்கும். மேலும், இதன் மூலமாக, தமிழகத்தில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறையில் புதிய தொழில்முனைவோர்களை உருவாக்குவதுடன், ஏற்கெனவே இயங்கி வரும் சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கும் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தப் பயனுள்ளதாக இருக்கும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிமாற்றப்பட்டது.

புதிய திட்டங்களுக்கு அடிக்கல்

நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.13,413 கோடி முதலீட்டில் 11,681 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் பின்வரும் 13 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

திட்டங்கள் துவக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.3,928 கோடி முதலீட்டில் 3,944 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 10 திட்டங்களின் வணிக உற்பத்தியினைத் துவக்கி வைத்தார்.

மொத்தம், 82 திட்டங்களின் மூலம் ரூ.52,549 கோடி முதலீட்டில் 92,420 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கிட வகை செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 22 மாவட்டங்களில் முதலீடுகள் பரவலாக மேற்கொள்ளப்பட உள்ளன.

தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021 வெளியீடு

2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநுட்பத்துறை வளர்ச்சிக்கு ஏதுவாகவும், மேம்பட்ட நிதிநுட்ப (Fintech) நிறுவனங்களின் முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்திடும் வகையிலும் ‘‘தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021’’ யை வெளியிட்டார்.

மேலும், சென்னையில் நிதிநுட்ப நகரம் (Fin Tech City). இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களில், நியோ டைடல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (Neo - TIDEL Parks) அமைத்தல் போன்ற பல சிறப்பம்சங்கள் இக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

ஒற்றைச்சாளர இணையம் 2.0இன் கைப்பேசி செயலி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளம் 2.0வின் கைப்பேசி செயலியைத் துவக்கிவைத்தார். தற்போது உள்ள முதலீட்டாளர்களுக்கு மட்டுமின்றி, புதிய முதலீட்டாளர்களுக்கும் உதவிடும் வகையில், இக்கைப்பேசி செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மேற்கொள்ளுதல், அனுமதிகள் பற்றிய தகவல்கள், அனுமதிகளின் நிலைதனைக் கண்காணித்தல், தெளிவுகள், சந்தேகங்கள் எழுப்புதல் போன்ற சிறப்பம்சங்கள் இந்தச் செயலியில் இடம் பெற்றுள்ளன.

மேலும், கொடிசியா அமைப்பின் பொன்விழா நிறைவையொட்டி காலப்பேழை புத்தகத்தை (Coffee Table Book) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். பின்னர், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை,**

அன்புள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே, TVS சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. வேணு சீனிவாசன் அவர்களே, பண்ணாரியம்மன் குழுமத்தின் தலைவர் அவர்களே, GRG நிறுவனங்களின் (PSG Group) அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர் மற்றும் நிருவாகிகளே, நிறுவன அறங்காவலர் திருமதி நந்தினி ரங்கசாமி அவர்களே, Daicel நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.யோஷிஃபூமி டகாசே (Yoshifumi Takase) அவர்களே, கொடிசியாவின் தலைவர் திரு. ரமேஷ் பாபு அவர்களே, தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தொழில்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல் அவர்களே, நிறைவாக நன்றி உரை ஆற்றவிருக்கக்கூடிய தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்னி அவர்களே மற்றும் இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சமீரன் அவர்களே, அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகளே, அனுபவம் மிக்க தொழில் தலைவர்களே, தமிழக அரசின் மூத்த அதிகாரிகளே, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை உலக நண்பர்களே, அன்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

எல்லோரும் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள், குறிப்பாக, திரு. வேணு சீனிவாசன் அவர்கள் பேசும்போது, ஐந்து வருடத்தில் சாதிக்க வேண்டியதை இந்த ஐந்தாறு மாதத்தில் சாதித்திருக்கக்கூடிய அரசாகப் பெருமையோடு அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆட்சிக்கு வந்தது முதல் இந்த அரசு பல்வேறு சவால்களை எதிர்கொண்டது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும், அவரே சொன்னார். முதலில் கொரோனா – அதை எதிர்கொண்டு, இன்னும் முழுமையாகக்கூட வெற்றி பெறவில்லை, ஆனாலும் ஓரளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம். அதைத் தொடர்ந்து இப்போது மழை, அதனால் ஏற்படக்கூடிய வெள்ளம். இயற்கை சூழலை எதிர்கொள்ளக்கூடிய நிலை இந்த அரசுக்கு இருக்கிறது, அதைச் செய்துகொண்டு இருக்கிறோம். அதுவும் துரிதமான, துல்லியமான நடவடிக்கைகளின் மூலமாகத் தமிழக அரசு எதிர்கொண்ட காரணத்தால்தான் அதில் ஓரளவுக்கு நாம் வெற்றிபெற முடிந்திருக்கிறது.

மக்களைக் காக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, அரசாங்கத்தினுடைய ஒவ்வொரு உறுப்பினர்களும் செயல்பட்டால்தான் இந்த வெற்றி உறுதி செய்யப்படும், நிச்சயமானதாக அமைந்துவிட முடியும். இக்கூட்டத்தின் வாயிலாக, முன்களப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதைப் போல, மக்கள் இல்லாமல் அரசோ ஆட்சியோ இயங்கிட முடியாது. அந்த மக்களைக் காப்பதுதான் ஒரு அரசாங்கத்தினுடைய மகத்தான பணி. அதில் இந்த அரசு மாபெரும் வெற்றியைப்

பெற்றுள்ளது. அடுத்ததாக ஒவ்வொரு துறைக்கும் தேவையான திட்டங்களைத் தீட்டி அதற்காகப் பல செயல்வடிவங்கள், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதன் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சியில் நான் இப்போது கலந்து கொண்டிருக்கிறேன்.

இத்தகைய சோதனையான காலத்திலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்து, ஆறு மாத காலத்தில் இது மூன்றாவது முதலீட்டாளர்கள் மாநாடு, மூன்றாவது முறையாக நடக்கின்ற மாநாடு.

மாநாடு என்றால் கூட்டத்தைக் கூட்டுவது, பேசுவது, கோரிக்கை வைப்பது என்பதோடு நிறுத்தப்படுவது, அதுதான் மாநாடு என்று சொல்வோம். ஆனால் இந்த மாநாட்டில் என்ன வித்தியாசம் என்றால், ஒப்பந்தங்கள் கையெழுத்துப் போடக்கூடிய மாநாடாக இந்த மாநாடு நடந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு மீது இத்தகைய நம்பிக்கை வைத்து, அனைத்துத் தொழிலதிபர்களும், தொழில் நிறுவனங்களும் இன்றைக்கு முன்வந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று. அதற்காக முதலில் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மே மாதத்தில் ஆட்சிக்கு வந்தோம். ஜூலை மாதத்தில் ஒரு முதலீட்டாளர் மாநாட்டை நடத்தினோம். செப்டம்பர் மாதத்தில் ஒரு ஏற்றுமதியாளர் மாநாட்டை நடத்தினோம். இதோ நவம்பரில் அடுத்த முதலீட்டாளர் மாநாட்டுக்கு வந்திருக்கிறேன். இரண்டு மாதங்களுக்கு ஒரு மாநாடு நடந்திருக்கிறது. இதே வேகத்தில் போனால் – இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம், நிச்சயமாகப் பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

நான் பல நேரங்களில், பல நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். பல மாநில முதலமைச்சர்களை எல்லாம் ஒப்பிட்டு ஒரு கணக்கீடு எடுத்து ஒரு கருத்துக் கணிப்பு வெளியிட்டார்கள். அதில் இன்றைக்கு நம்பர் 1 முதலமைச்சராக என் பெயரை அறிவித்திருக்கிறார்கள். இது எனக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, எங்களுடைய அமைச்சரவைக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, இந்த அரசுக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கக்கூடிய பெருமையாகத்தான் நான் கருதுகிறேன். இதைப்பற்றி நான் குறிப்பிட்டு நேற்றைக்குக்கூட கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகிறபோது சொன்னேன், திருப்பூரில் நடந்த அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகிறபோது நான் சொன்னேன், என் பெயரைச் சொல்லி நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்வதைவிட, நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலையை உருவாக்குவதுதான் என்னுடைய இலட்சியம் என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

அதை நோக்கித்தான் இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். இன்று மட்டும் ரூ.35,208 கோடி முதலீடு மற்றும் 76,795 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி என்று நான் கூறியிருந்தேன். அதற்கேற்ப 22 மாவட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் அனைத்து மாவட்ட இளைஞர்களுக்கும் அவர்களது ஊர்களுக்கு அருகிலேயே வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

தொழில் நிறுவனங்கள் நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கு 'நிலம்' கையிருப்பு மிகப் பெரிய பங்காற்றுகிறது. அண்மையில் வெளிவந்த ஒன்றிய அரசினுடைய மாநிலங்களுக்கான IPRS (Industrial Park Rating System) தரவரிசையில், தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக அறிவித்திருக்கிறது. இது நமக்கெல்லாம் பெருமை; நாம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலட்சிய இலக்கினை அடைவது வெகுதொலைவில் இல்லை என்ற அந்த நம்பிக்கையை எல்லோருக்கும் அளித்துக் கொண்டிருக்கிறது.

2021–2022ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த வரவுசெலவுத் திட்ட உரையில், தமிழ்நாட்டில், நிதிநுட்ப நகரம், அதாவது Fintech City அமையப் பெறும் என்று நாம் அறிவித்திருந்தோம். 2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை நிதிநுட்ப நிறுவனங்களின் உலக மையமாக மாற்றக்கூடிய வகையிலே, இன்று நான்–''தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை'' (Tamil Nadu Fintech Policy) 2021 என்ற சிறப்புக் கொள்கையை வெளியிட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் நிதிநுட்ப நிறுவனங்களுக்காக, 10 இலட்சம் சதுரஅடியில், பணியிடம் உள்ள நிதிநுட்ப நகரம் (Fintech City) ஒன்று உருவாக்கப்படும். அந்நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி மேம்பட்ட சேவைகளை வழங்கக்கூடிய வகையில் தொழில்துறை வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு பிரத்தியேக – ''நிதிநுட்பப்பிரிவு'' ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சென்னையில் டைடல் பார்க் திறந்துவைக்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இதனை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் தமிழ்நாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களில் நியோ டைடல் பார்க்குகள் அமைக்கப்படும்.

நமது நாட்டில் வார்ப்புத் தொழிலில் கோவை மாவட்டம் முன்னிலை வகித்து வரக்கூடிய நிலையில், நவீனத் தொழில்நுட்பங்களை இந்தத் தொழிற்சாலைகளுக்கு அளித்திருக்கக்கூடிய வகையில் ஒரு 'Centre of Excellence' அமைக்கப்படும்.

ஐம்பதாயிரம் பேருக்குக் கோவையில் வேலைவாய்ப்பு அளித்துவரும் நகைத் தொழிலை மேலும் மேம்படுத்திட, சிறு நகைத் தொழிற்குழுமங்கள் அரசின் மானிய உதவியோடு வழங்கப்படும், அது விரைவிலே நிறுவப்படும்.

பொள்ளாச்சி வட்டத்தில் ரூ.21 கோடி செலவில் தென்னை நார் பதப்படுத்தும் தொழில்களுக்கான குழுமம் அமைக்கப்படும்.

தொழில் துறையினுடைய மிக முக்கியமான தூண் என்றால் அது கோவை மாவட்டம்தான். அதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் கிடையாது. அதை மெய்ப்பிக்கக்கூடிய வகையில், சென்னைக்கு அடுத்ததாக கோவையில் இந்த மாநாடு நடந்துகொண்டிருக்கிறது. தென்னிந்தியாவின் மான்செஸ்டர், Pump City of India எனப் பல்வேறு பெருமைகளையும் கொண்டிருக்கக்கூடிய கோவையில் இந்த மாநாடு நடைபெறுவது மிகப்பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஒரு தொழிலுக்கு முக்கியத்துவம் என்று இல்லாமல் பல்வேறு தொழில்களின் மையமாக இந்தக் கோவை அமைந்திருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால்,

நெசவாலைகள், பின்னலாடைகள், கோழிப்பண்ணைகள், தென்னை வளர்ப்பு, வேளாண்மை, சிறுதொழில்கள், குறுதொழில்கள் எனக் கோவையில் தொடாத தொழில்களே இல்லை. அதுமட்டுமல்ல, தொட்டுத் துலங்காத தொழில்களும் இல்லை. ஆகவே, இப்படிச் சொல்லத்தக்க, பாராட்டத்தக்க மாவட்டமாக இந்த மாவட்டம் அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய இரண்டாவது பெரிய நகரமாகவும், தென்னிந்தியாவில் ஐந்தாவது பெரிய நகரமாகவும் கோவை இருக்கிறது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்திருப்பது கோவை மாவட்டம் ஆகும்.

இத்தகைய புகழோடு நீங்கள் மனநிறைவு அடைந்துவிடக் கூடாது என்று சொல்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். இன்னும் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. அதிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வான்வெளி, பாதுகாப்புத்துறை தொடர்பான பொருட்கள் உற்பத்தியில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் தொடர்பான பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, நமது மாநிலத்தில் கோவையை ஒரு முனையமாக வைத்து, வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் பெருவழித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் 10 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு முதலீடுகள் மற்றும் 1 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடக்கூடிய வகையில், இந்தத் துறையில் உலக அளவில் வலுப்பெறும் முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

L&T, LMW, TVS போன்ற பெரிய நிறுவனங்கள் இத்துறையில் தங்களுடைய முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது. விமானம் மற்றும் வானூர்தி உதிரிப்பாகங்கள் உற்பத்திக்காகப் பிரத்தியேகமாகக் கோவையில் ஒரு தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதன் தொடர்ச்சியாக, சூலூரில் ஒரு தொழிற்பேட்டைப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. இதனைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

❖ பின்னலாடைகள், ஜவுளித் தொழில்களும் நவீனப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலகளவில் நாம் ஏற்றுமதி செய்தாலும், நமக்கு மற்ற நாடுகளின் போட்டியும் அதிகம் இருக்கிறது. அந்தப் போட்டியை வெல்லக்கூடிய சக்தியாக நம்முடைய தயாரிப்புகள் இருந்திட வேண்டும்.

❖ தொழில்நுட்ப ஜவுளிகள், மருத்துவ ஜவுளிகள், தொழிலகங்களுக்கான ஜவுளிகள், விளையாட்டுத் துறைக்கான ஜவுளிகள் என்று தரம் பிரித்து உற்பத்தியை அதிகப்படுத்தவும், நவீனப்படுத்தவும் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

❖ மின்னணுவியல் துறையில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்தியாவின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 25% பங்களித்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

❖ காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் போல கோவையும் மின்னணுவியல் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

❖ இதுபோன்ற துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டு, அடுத்தகட்ட வளர்ச்சிக்கு தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

❖ கோவை என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது இங்குள்ள மக்களுடைய விருந்தோம்பலும் புதுமையான கண்டுபிடிப்புகளும்தான் நம்முடைய நினைவுக்கு வருகிறது.

❖ உங்களுடைய கண்டுபிடிப்புகளான மோட்டார் பம்புகள், வெட் கிரைண்டர்கள் உலக நாடுகளை வியக்க வைத்திருக்கிறது. இதனை முன்னுதாரணமாகக் கொண்டு, ஏழை, எளிய மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் மேலும் பல அரிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொண்டு வரவேண்டும். இதன் மூலமாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை மேலும் மேலும் வளப்படுத்துங்கள்!

இங்கு வருகை புரிந்திருக்கக்கூடிய அனைத்து முதலீட்டாளர்களுக்கும், துவக்கவிழா மற்றும் அடிக்கல் நாட்டு விழா நடத்திட்ட அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய திட்டங்கள் அமோக வெற்றி பெற்றிட என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்தர ரக “வலிமை” சிமெண்ட் அறிமுகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தின் உயர்தர ரக சிமெண்ட் “வலிமை”யை அறிமுகப்படுத்தி, விற்பனையைத் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தின்கீழ்ச் செயல்பட்டுவரும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தொடர்ந்து, தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால், அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் ஒரு ஆலையும், 10 இலட்சம் மெட்ரிக் டன் திறன் கொண்ட மற்றொரு புதிய சிமெண்ட் ஆலையும் நிறுவப்பட்டது. இந்த மூன்று ஆலைகளின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 17 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகம் ‘‘அரசு’’ என்ற பெயரில் சிமெண்டை விற்பனை செய்து வருகிறது.

2021–2022ஆம் ஆண்டு தொழில்துறை மானியக் கோரிக்கையின்போது, ‘‘வலிமை’’ என்ற பெயரில் ஒரு புதிய ரக சிமெண்ட் அறிமுகப்படுத்தப்படும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்.

அதன்படி, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தின் உயர்தர ‘‘வலிமை’’ சிமெண்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய ரக ‘‘வலிமை’’ சிமெண்ட், அதிக உறுதியும் (Greater Compression Strength), விரைவான உலரும் தன்மையும் (Quick Setting), அதிக வெப்பத்தைத் தாங்கும் தன்மையும் (Heat Resistant) கொண்டது.



தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்தப் பசுமைப் போர்வைக்கான இயக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்தப் பசுமைப் போர்வைக்கான இயக்கம்" என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தினை (Agro forest) ரூ.11.14 கோடி மதிப்பீட்டில் 73 இலட்சம் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதன் துவக்கமாக விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

இத்திட்டத்தின்கீழ் நடவு செய்யப்படும் மரக்கன்றுகள் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு ஒரு நிரந்தர வருமானம் கிடைக்க வழிவகுப்பதோடு மண் வளம் அதிகரித்து, மாநிலத்தின் ஒட்டுமொத்த பசுமைப் பரப்பும், சுற்றுப்புறச் சூழலும் மேம்படும்.

விவசாயிகளின் நலனுக்காகப் பல்வேறுச் சிறப்புத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு வகுத்து, செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, மானாவாரி நிலத் தொகுப்புகளில் பயன்தரும் மரக்கன்றுகளை வளர்க்கும் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின்கீழ், ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானமும், வேலைவாய்ப்பும் கிடைக்கும் நோக்கத்துடன், "தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்தப் பசுமைப் போர்வைக்கான இயக்கம்" (Tamil Nadu Mission on Sustainable Green Cover in Farm Lands) என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தினை 2021–2022ஆம் ஆண்டில் ரூ.11.14 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தேக்கு, ஈட்டி, மகோகனி, மருது, வேம்பு, மலை வேம்பு, நாவல், பெருநெல்லி, செம்மரம், புங்கன், வேங்கை, சந்தனம் போன்ற பல்வேறு தரமான மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். நடப்பாண்டில், முதற்கட்டமாக 73 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு வனத்துறையின் நாற்றங்கால்களில் ரூ.15 மதிப்புள்ள தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

இம்மரக்கன்றுகளை விவசாயிகள் தங்கள் நிலங்களின் வரப்புகளிலோ அல்லது குறைந்த செறிவில் விவசாய நிலங்களிலோ நடவு செய்யலாம். வரப்பில் நடவு செய்வதாக இருந்தால், ஏக்கருக்கு 50 மரக்கன்றுகளுக்கு மிகாமலும், விவசாய நிலங்களில் குறைந்த செறிவில் நடவு செய்வதாக இருந்தால் ஏக்கருக்கு 160 மரக்கன்றுகளுக்கு மிகாமலும் வழங்கப்படும்.

மேலும், நடவு செய்த 2ஆம் ஆண்டு முதல் 4ஆம் ஆண்டு வரை நல்ல முறையில் பராமரிக்கப்படும் கன்று ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.21 ஊக்கத்தொகையாக வழங்கப்படும். இம்மரக்கன்றுகள் நன்கு வளர்ந்து அறுவடை செய்யும்போது, வனத்துறையின் அனுமதியை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில், நடவுசெய்த மரக்கன்றுகள் அனைத்தும் வருவாய்த்துறையின் அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையத்திலோ அல்லது உழவன் செயலி வாயிலாகவோ தங்கள் பெயரைப் பதிவு செய்து உரிய அலுவலரின் பரிந்துரையின்படி தேவையான மரக்கன்றுகளை அருகிலுள்ள தமிழ்நாடு வனத்துறையின் நாற்றங்காலில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வ.உ.சி.பன்னூல் திரட்டு, வ.உ.சி. திருக்குறள் உரை வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சி. அவர்களின் 150ஆவது ஆண்டு பிறந்தநாள் கொண்டாட்டத்தின் முன்னெடுப்பாகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள வ.உ.சி. பன்னூல் திரட்டு – முதல் தொகுதி, வ.உ.சி. திருக்குறள் உரை – இரண்டாம் தொகுதி ஆகிய நூல்களை வெளியிட்டார்.

வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150ஆவது பிறந்தநாள் விழாவினையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14 வகையான அறிவிப்புகளைச் சட்டமன்றத்தில் அறிவித்தார். அவற்றுள் "வ.உ.சிதம்பரனார் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டுத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாகக் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்'' என்பதும் ஒன்றாகும்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்கள், எழுதி வெளிவராத படைப்புகள் மற்றும் அச்சில் இல்லாத படைப்புகளை வ.உ.சி. நூற்களஞ்சியமாக நான்கு நூல் திரட்டுகளாக (4 Volumes) பதிப்பிக்கலாம் என்று அறிவுறுத்தினார்.

அதன்படி, விடுதலைப் போராட்ட வீரரும், கப்பலோட்டிய தமிழரும், பழம்பெரும் நூல்களைத் தேடிப் பதிப்பித்து உரை எழுதியவருமான வ.உ.சிதம்பரனார் அவர்களின் எழுத்துக்கள் வ.உ.சி. நூல் களஞ்சியமாகத் தொகுக்கப்பட்டு, அவரது 150ஆம் பிறந்த ஆண்டான இந்த ஆண்டு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால், குறைந்த விலையில் வெளியிடப்படுகிறது.

முதல் கட்டமாக, வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதி வெளிவராதப் படைப்புகள் மற்றும் அச்சில் இல்லாத படைப்புகளைத் தொகுத்து, முதல் தொகுதி – வ.உ.சி. பன்னூல் திரட்டு எனும் தலைப்பிலும், இரண்டாம் தொகுதி – வ.உ.சி. திருக்குறள் உரை எனும் தலைப்பிலும் இரண்டு தொகுதிகள் வெளியிடப்படுகிறது.

முதல் தொகுதியில் வ.உ.சி. எழுதிய தன் வரலாறு, மெய்யறிவு, மெய்யறம் ஆகிய நூல்களும் 1927ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அவர் ஆற்றிய அரசியல் பெருஞ்சொல் என்ற உரை, வ.உ.சி. கண்ட பாரதி என்ற நூல், வ.உ.சி.யின் பாடல் திரட்டு, வ.உ.சி. கட்டுரைகள் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும், இத்தொகுதியில் வ.உ.சி பதிப்பித்த திருக்குறள் (அறத்துப்பால்) மணக்குடவர் உரை சேர்க்கப்பட்டுள்ளது. வ.உ.சி. எழுதிய இன்னிலை விருத்தி உரையும் சிவஞான போதம் உரையும் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு வ.உ.சி. மொழிபெயர்த்த ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்களான 'மனம்போல் வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' 'சாந்திக்கு மார்க்கம்', ஆகியவையும் உள்ளன. இவை தவிர வ.உ.சி.யின் வேறு சில கட்டுரைகளும் பின்னிணைப்பாக இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் தொகுதி வ.உ.சி. திருக்குறளுக்கு எழுதிய உரையாகும். வ.உ.சி.யின் தேசப்பணி, தியாகம், தொழிற்சங்கத் தொண்டு ஆகியவற்றுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல வ.உ.சி.யின் இலக்கியப்பணி. தன் வாழ்வைத் திருக்குறள் நெறிப்படி அமைத்துக்கொண்ட வ.உ.சி. திருக்குறளுக்கான மணக்குடவர் உரையைத் தேடிப் பதிப்பித்தார். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் நூலாகத் திருக்குறள் திகழ்வதற்கு முதன்மையான காரணங்களில் ஒன்று மணக்குடவர் உரையை அடிப்படையாகக் கொண்டு வ.உ.சி. எழுதிய புதிய உரையாகும். தனது திருக்குறள் உரையில் 11ஆம் நூற்றாண்டில் எழுந்த அவைதீக உரையான மணக்குடவர் உரையிலிருந்து 13ஆம் நூற்றாண்டில் எழுந்த வைதீக உரையான பரிமேலழகர் உரை எவ்வாறு மாறுபடுகிறது என்பதை விளக்கியுள்ளார். பரிமேலழகர் உரையிலிருந்து தான் வேறுபடும் இடங்களையும், ஒன்றுபடும் இடங்களையும் சுட்டிக்காட்டி இருப்பதோடு, குறளுக்குப் பொருள்கொள்வதில் வாசகனுக்கு உள்ள சுதந்திரத்தையும் எடுத்துக்காட்டிருப்பதை இந்த நூலை வாசிப்பவர்கள் உணரலாம்.

வ.உ.சி. எழுத்துக்களை ஆய்வு செய்து வெளிவராத படைப்புகளைச் சேகரிப்பதில் புலமை பெற்றுள்ள சென்னைப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் வீ.அரசு அவர்கள் பதிப்பாசிரியராக இருந்து இப்பெருந்திரட்டுகளைத் தொகுத்துள்ளார். புகழ்பெற்ற ஓவியர் திரு.டிராட்ஸ்கி மருது அவர்கள் அட்டைப்படம் வடிவமைத்துள்ளார்.

தமிழ்நாடு மாநில
குழந்தைகளுக்கான கொள்கை 2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் உரிமைகள் பெறவும் தனித்துவம் வாய்ந்த "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வெளியிட்டார். மேலும், நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 1,148 குழந்தைகளுக்கு நிதியுதவியும், கருணை அடிப்படையில் 15 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெறவும், குழந்தைகளின் உரிமைகள் எவ்விதத் தடையுமின்றி கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் மாநில அளவில் குழந்தைகளுக்கான கொள்கையை வடிவமைத்தல் இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளுக்கான இலக்கினை அடைந்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி, மருத்துவம், பாலியல் பாகுபாடின்மை, பாதுகாப்பு இவை அனைத்திற்குமான தனித்துவம் வாய்ந்த கொள்கையாக "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

குழந்தைகளின் மேல் மாறாத அன்பும் அவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கோவிட்–19 நோய் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, பெற்றோர்களை இழந்த 256 குழந்தைகளுக்கு ரூ.12.80 கோடி மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 6,493 குழந்தைகளுக்கு ரூ.194.79 கோடி என மொத்தம் 6,749 குழந்தைகளுக்கு ரூ.207.59 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நிதி ஆதரவுத் திட்டத்தின்கீழ், 1,148 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு மாநில அரசின் முழு பங்களிப்புடன் நிதியுதவி வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, நடப்பு நிதி ஆண்டில் ரூ.1,37,76,000 நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டு, 10 குழந்தைகளுக்கு நிதியுதவிகளையும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் சமூகநல இயக்குநரகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



கோயம்புத்தூரில் 25,123 பயனாளிகளுக்கு ரூ.647 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.587.91 கோடி மதிப்பீட்டில் 70 முடிவுற்றத் திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.89.73 கோடி மதிப்பீட்டிலான 128 புதியத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25,123 பயனாளிகளுக்கு ரூ.646.61 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முடிவுற்றத் திட்டப் பணிகள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொதுப்பணித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, கூட்டுறவுத்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.587.91 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள 70 திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்.

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கூட்டுறவுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.89.73 கோடி மதிப்பீட்டிலான 128 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அரசு நலத்திட்ட உதவிகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வனத்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய

துறைகளின் சார்பில் 25,123 பயனாளிகளுக்கு ரூ.646.61 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களே! மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே! மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்களே! மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களே! மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்களே!

இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கு முழுக் காரணமாக அமைந்திருக்கக் கூடியவரும், கோவை மாவட்டத்தினுடைய வளர்ச்சிப் பணிகள், அரசால் வழங்கக்கூடிய நலத்திட்டங்கள் ஆகியவற்றை, முறையாக மக்கள் விரும்புகிற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா என்று அவ்வப்போது ஆய்வு செய்து அந்தப் பணிகளை முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கக் கூடியவருமான மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்களே! மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே! மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களே! சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர்களான, முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு.ஆ.இராசா அவர்களே! திரு.பி.ஆர்.நடராஜன் அவர்களே! திரு.அந்தியூர் செல்வராஜ் அவர்களே! திரு.சண்முக சுந்தரம் அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! மாநகராட்சி ஆணையர் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே! அலுவலர்களே! மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்திருக்கக் கூடிய மதிப்பிற்குரிய தாய்மார்களே! சகோதரிகளே! பெரியோர்களே! தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

காலையில் 9.30 மணியளவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு நீதியரசர் அவர்களின் பதவி ஏற்பு விழாவில் முதலமைச்சர் என்கிற முறையில் நானும் கலந்துகொண்டேன். அதைத் தொடர்ந்து உடனடியாக விமானத்தைப் பிடித்துச் சரியாக 11.30 மணியளவில் நான் கோவை விமான நிலையத்திற்கு வந்துசேர்ந்தாலும், அங்கிருந்து இந்த இடத்திற்கு வருவதற்கு ஏறக்குறைய இரண்டரை மணி நேரம், மூன்று மணி நேரம் ஆகியிருக்கிறது. காரணம், வருகிற வழியெல்லாம் சாலையில் இருமருங்கிலும் பொதுமக்கள், தாய்மார்கள், பெரியோர்கள், நண்பர்கள், தொழிலாளத்

தோழர்கள் மிகுந்த ஆர்வத்தோடு எங்களை வரவேற்றனர். அதையெல்லாம் முடித்துவிட்டுக் குறித்த நேரத்திற்கு இந்த நிகழ்ச்சிக்கு வரமுடியாமல், ஆனால், கொஞ்சம் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வந்திருக்கிறேன். அந்த நிலையில் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு பல்வேறு அரசு நலத்திட்டங்களைத் தொடங்கி வைக்கவும், நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், நிதி உதவிகளைச் செய்திடவும் நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நடத்திடவேண்டும் என்று முடிவு செய்து, 22ஆம் தேதி காலையில் நான் கோவைக்கு வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி அவர்கள் என்னிடம் தேதி கேட்டார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். அவர் நிகழ்ச்சியைத்தான் நடத்தப் போகிறேன் என்று என்னிடத்தில் சொன்னார். ஆனால் இன்றைக்கு நடப்பது நிகழ்ச்சியல்ல, ஒரு மாநாடே நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் இது அமைந்திருக்கிறது. அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சாதாரணமாக நிகழ்ச்சி என்று சொன்னாலே அது மாநாடுதான். ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குப் பல நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. கோடிக்கணக்கானவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுகிறது என்று சொன்னாலும், ஒட்டுமொத்தமாக இந்த நிகழ்ச்சியில் நான் பங்கேற்பதில் எனக்கு மகிழ்ச்சி அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், இதை ஏற்பாடு செய்து வெற்றி கண்டிருக்கக்கூடிய, வெறும் வெற்றியல்ல, முழு வெற்றி கண்டிருக்கக்கூடிய திரு. செந்தில் பாலாஜி அவர்களை, அதேபோல் அவருக்குத் துணை நின்று கொண்டிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை, அரசு அலுவலர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை, அனைத்து மாவட்டங்களிலும் நமக்குப் பெருவாரியான வெற்றி கிடைத்திருந்தாலும், இந்தக் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் நினைத்த அளவிற்கு வெற்றிபெற முடியவில்லை. அதையெல்லாம் இங்கே விரிவாகப் பேசி இதை அரசியலாக்க நான் தயாராக இல்லை, காரணம் இது அரசு விழா. வெற்றி வாய்ப்பைத் தவறவிட்ட மாவட்டமாக கோவை இருந்தாலும், கோவையில்தான் இத்தகைய மாபெரும் மாநாடு போன்ற மக்களைச் சந்திக்கக்கூடிய நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன் என்பதுதான் முக்கியம்.

ஆட்சிக்கு வந்தவுடனேயே நான் சொன்னேன், என்னுடையத் தொகுதியில் நான் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை லயோலா கல்லூரிக்கு நேரடியாகச் சென்று, ஓட்டு எண்ணக்கூடிய இடத்தில் அந்தச் சான்றிதழை வாங்கிக் கொண்டு, நான் சென்ற முதல் இடம் நம்முடைய கலைஞர் அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அவருடைய நினைவிடம்தான். அங்கு மரியாதை செய்துவிட்டு, வணக்கம் செலுத்திவிட்டு, வெளியில் செல்கின்றபோது பத்திரிகை நிருபர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு, "பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறீர்கள், உங்கள் செய்தி என்ன?" என்று என்னிடத்தில் கேட்டார்கள். அப்போது நான் சொன்னேன், வெற்றி தந்த மக்களுக்கு என்னுடைய நன்றி, நாங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற உணர்வோடு ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டுமல்ல, எங்களை எதிர்த்து ஓட்டுப் போட்டிருப்பவர்கள், ஓட்டுப் போடாதவர்களுக்கும் சேர்த்துப் பணியாற்றுவதுதான் என்னுடைய வெற்றி, அதில் உறுதியாக இருப்பேன் என்று நான் சொன்னேன். எந்த வேறுபாடும் நாங்கள் பார்க்கமாட்டோம் என்று நான் சொன்னதைத்தான் இன்று வரையில் அல்ல, தொடர்ந்து அப்படித்தான் கடைப்பிடிப்பேன்; நம்முடைய ஆட்சி இருக்கின்றவரை அப்படித்தான் கடைப்பிடிப்பேன்; அதில் எந்த மாற்றமும் கிடையாது.

அப்படித்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் எங்களை வளர்த்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தக் கோவை மாவட்டத்து வளர்ச்சிப் பணிகளைப் பார்ப்பதற்காக, கவனித்து அவ்வப்போது அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை இந்த மாவட்டத்திற்குப் பொறுப்பாளராக நான் நியமித்திருக்கிறேன்.

எந்தெந்த மாவட்டத்துக்கு அமைச்சர் பிரதிநிதிகள் இல்லையோ, அந்தந்த மாவட்டங்களுக்கு இதுபோல் அமைச்சர்களை நாங்கள் பொறுப்பேற்றுப் பணியாற்ற வேண்டுமென்று கட்டளையிட்டு அவர்களை நியமித்திருக்கிறோம்.

அனைத்து மாவட்ட மக்களும் என்னுடைய மக்கள்தான் என்ற உணர்வோடு நான் இத்தகைய நியமனத்தைச் செய்திருக்கிறேன்.

அப்படி நியமிக்கப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள், கடந்த ஒருவார காலமாக இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்கள் பிரதிநிதிகளோடு கலந்துபேசி, அரசு அதிகாரிகளோடு ஆய்வு நடத்தி, அந்த அடிப்படையில் இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அதனை நிறைவேற்றித் தருவதற்குத் தயாராகிக்கொண்டு இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரை, ஒரு மனுவைக் கொடுத்தால், அந்த மனு மீது நிச்சயம் நடவடிக்கை இருக்கும். முடிந்த பணிகளை முடிந்தது என்று சொல்லுவோம். சில சட்டச் சிக்கல், நீதிமன்றத்தின் தலையீடு போன்று பல பிரச்சினைகள் சில திட்டங்களுக்கு, சில பணிகளுக்கு வந்துவிடும். சில பணிகள் காலதாமதமாக முடிவடையக்கூடிய நிலைக்கும் வந்துவிடும். எனவே, இந்தக் கூட்டத்தின் வாயிலாக நான் உறுதியளிப்பது என்னவென்று கேட்டால், உறுதி அளிப்பதற்கு எனக்கு முழுத்தகுதி இருக்கிறது.

காரணம், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிக்கும் சென்று மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்றேன். வாங்கிய மனுக்களை எல்லாம் மக்கள் முன்னால் பெட்டியில் வைத்துப் பூட்டினேன். நான் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாக இந்தப் பெட்டியைத்தான் திறப்பேன். அனைத்து மனுக்களையும் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னேன். 'ஸ்டாலினால் இந்தப் பெட்டியைத் திறக்க முடியாது, அவர் மக்களை ஏமாற்றுகிறார்' என்று அரசியல் நோக்கத்தோடு அரசியல்வாதிகள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள், யார், எப்படி அப்படி என்ற விளக்கமெல்லாம் தேவையில்லை. நான் அப்போதும் சொன்னேன், '**சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்**' இதைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் தாரக மந்திரமாக எங்கள் உள்ளத்திலே பதிய வைத்திருக்கிறார்.

அதேபோல் ஆட்சி அமைத்த அன்றைக்கே உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற தனித் துறையை நாங்கள் உருவாக்கினோம். அனைத்துப் பெட்டிகளையும் திறந்தோம். இலட்சக்கணக்கான மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஊடகங்களில் தொடர்ந்து பார்த்தீர்கள் என்றால் தெரிந்துகொண்டிருக்க முடியும். மக்களிடத்திலே போய் பேட்டிக் கேட்கின்றபோது அவர்களே சொல்கிறார்கள், ‘ஸ்டாலினிடம் நான் மனு கொடுத்தேன், 100 நாட்களில் அதனைத் தீர்த்து வைத்துவிட்டார்’ என்று பேட்டி கொடுக்கக்கூடிய அந்தக் காட்சிகளெல்லாம், அந்த நிகழ்ச்சிகளெல்லாம் தொடர்ந்து தொலைக்காட்சியில் வந்து கொண்டிருக்கிறது.

அதே நேரத்திலே நிறைவேற்ற இயலாத கோரிக்கையாக இருந்தாலும், அதுதொடர்பாக மனு கொடுத்தவருக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறோம். அத்தகைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிடம் இப்போதும் பலர் மனு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வரும் வழியில் எல்லாம் வரவேற்பு ஒரு பக்கம் இருந்தாலும், ஆங்காங்கே சில தோழர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் மனுக்களை அளிக்கும்போது, அங்கு நான் நின்று அவர்களிடமிருந்து நான் வாங்கிவிட்டுதான் வந்திருக்கிறேன். இவை அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை மீண்டும் இந்த விழாவின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மிகப்பெரிய திட்டங்களை – பல கோடி மதிப்பிலான திட்டங்களை நாங்கள் போட்டாலும், இதுபோல் ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் கேட்டு நிறைவேற்றுவதுதான் முக்கியம். அப்படி நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் அமைச்சர்களுக்கெல்லாம் தொடர்ந்து உத்தரவிட்டுக் கொண்டிருக்கிறேன், தொடர்ந்து அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனின் கவலையையும் தீர்க்கும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மக்கள் மாநாட்டின் வாயிலாக கோவை மாவட்டத்துக்கு ஏராளமான திட்டங்களைத் தொடங்கி வைப்பதில், அதை அறிவிப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

- கடந்த 10 ஆண்டுகளாக நிலுவையிலிருந்த கோவை விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.1,132 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டு இந்தப் பணிகள் விரைவில் துவங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
- மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்த அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.
- கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சீராகக் குடிநீர் வழங்குவதற்கானத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- பத்து ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கோவை மாநகரப் பகுதியில் திட்டச் சாலைகள் அமைக்கப்பட்டன. கடந்த ஆட்சிக் காலத்தில் எந்தவொரு திட்டச் சாலைப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை.
- இப்போது மீண்டும் தி.மு.க. ஆட்சியில் அந்தப் பணிகளை முடுக்கிவிட உத்தரவிட்டிருக்கிறேன். ஐந்து திட்டச் சாலைகளைச் செயல்படுத்துவதற்கும், கோவையில் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும் ரூ.200 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- கோவை மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்ட வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அதற்கு ரூ.309 கோடி செலவில் செயல்படுத்தப்படவிருக்கிறது.
- கோவை மாநகராட்சியின் மையப் பகுதியில் இருக்கக்கூடிய சிறைச்சாலை, அது நகரின் வெளியே கொண்டு செல்லப்படும்.
- காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக ரூ.200 கோடி செலவில் அமைக்கப்படவிருக்கிறது.
- கோவை மாநகரப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை முறையை மேலும் மேம்படுத்துவதற்காக ரூ.11 கோடி செலவில் கூடுதல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

- கோவை மாநகர மக்களுக்குச் சிறப்பாக மருத்துவ வசதிகளை அளித்திடும் வகையில் ரூ.16 கோடி செலவில், 63 நலவாழ்வு மையங்கள் மற்றும் மூன்று மருத்துவ ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட இருக்கிறது.
- கோவை மாநகரப் பகுதியில் சாலை விளக்கு வசதிகள் இல்லாத பகுதிகளில் ரூ.20 கோடி செலவில் புதிய தெரு விளக்குகள் அமைக்கக்கூடிய பணி செயல்படுத்தப்படவிருக்கிறது.

இப்பணிகளுக்கான அரசு ஆணைகளை விரைவில் வெளியிட்டு, அதற்கான நிதியை விரைந்து ஒதுக்கித் திட்டப்பணிகளை விரைந்து முடித்து நிச்சயமாக அதை மக்களிடத்தில் நாங்கள் ஒப்படைக்க இருக்கிறோம் என்ற உறுதியை உங்களையெல்லாம் வைத்துக்கொண்டு நான் பெருமையோடு இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை மாநகரப் பகுதி போன்றே, கோவை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. கோவை மாநகரத்தின் வளர்ச்சியை முறைப்படுத்துவதற்காக கோவை நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். அதன் அடிப்படையில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏதோ அறிவித்தோம், போனோம் என்று இல்லாமல், திட்டங்கள் குறித்து இதையெல்லாம் ஆய்வு நடத்தி இதை விரைவுபடுத்துவதற்காகத்தான் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களிடம் ஒப்படைத்து, இன்றைக்கு அந்தப் பணிகளை அவர் மேற்கொண்டிருக்கிறார். அவரும் பல நேரங்களில் ஓய்வெடுக்காமல் உழைக்கக் கூடியவர்தான். அப்படி உழைக்கக் கூடிய ஒருவரைத்தான் இந்த மாவட்டத்திற்குத் தேர்ந்தெடுத்து, உங்களிடத்தில் நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். அந்த வகையில் கோவை மாவட்டத்தைச் சிறந்த மாவட்டமாக, அனைத்து உட்கட்டமைப்புக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக ஆக்க உறுதி எடுத்திருக்கிறோம்.

கோவையைப் பொறுத்தவரையில் வளம் கொண்ட தொழில் மாவட்டம் ஆகும். பெரிய தொழில்கள் மட்டுமல்ல, சிறு, குறு தொழில்களும் இந்த மாவட்டத்தில் அதிகம். தொழில்கள் மூலமாகத் தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதி வருவாய் தரக்கூடிய மாவட்டம் இதுதான். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம். இவை அனைத்துக்கும் மேலாக இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய மாவட்டமும் இந்தக் கோவை மாவட்டம்தான். இதுபோன்ற தொழில் வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களிலும் பரவ வேண்டும் என்பதுதான் உங்களுடைய ஆசை மட்டுமல்ல என்னுடைய ஆசையும் அதுதான். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு விதமான சிறப்பான தொழில்கள் உண்டு. அத்தகையத் தொழில்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, சீர்தூக்கி எல்லாவிதப் பணிகளிலும் ஈடுபடுவது என்று அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவிலேயே தொழில் துறையில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை வளர்த்தெடுக்க வேண்டும். இந்தியாவின் முதல் தொழில் முகவரியாக தமிழ்நாடு மாற வேண்டும்.

நாளை காலை கோவையில் தொழிலதிபர்கள் மாநாடு நடைபெற இருக்கிறது. அப்படி நடைபெறுகிற அந்த மாநாட்டில் பல்வேறு ஒப்பந்தங்களில் (MoU) கையெழுத்திட இருக்கிறோம். கோடிக்கணக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. அதன்மூலமாக இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக இருக்கிறது.

இதுபோன்ற தொழில் அமைப்புகளின் மாநாடுகள் தொடர்ந்து நடக்க இருக்கின்றன. தொழில் துறையை வளர்ப்பதன் மூலமாக மக்களை வளர்க்க முடியும்! மக்களது வளர்ச்சியில்தான் நாட்டின் வளர்ச்சி அமைந்துள்ளது.

இந்தியாவின் முன்னணி தொழில் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டுவோம். அப்படி மாற்றுகிற நேரத்தில் அதில் முதலிடம் கோவைக்குத்தான் உண்டு என்பதைப் பெருமையுடன் நான் சொல்ல விரும்புகிறேன்.

திட்டங்களைப் பற்றித்தான், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய நிதி ஆதாரத்தைப் பற்றித்தான், அது என்னென்ன கட்டங்களில் நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்வதற்காகத்தான் நான் இவ்வளவு சொன்னேனே தவிர, நான் எப்பொழுதுமே அதிகம் பேசமாட்டேன். செயலில் என்னுடையப் பணிகள் இருக்கும். பேச்சைக் குறைத்துச் செயலில் நம்முடைய திறமையைக் காட்டு என்ற பழமொழிக்கேற்ப நிச்சயமாக இந்த மாவட்டம் தமிழகத்திலேயே தலைசிறந்த மாவட்டமாக, எல்லாவற்றிலும் தலைசிறந்த மாவட்டமாக இருக்கிறது என்ற அந்தப் பெருமையைப் பெறுவதற்கு நாங்கள் பணியாற்றத் தொடங்கிவிட்டோம். அப்படி ஆற்றக்கூடிய பணிகளுக்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும், ஆதரவுத் தரவேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

முன்னதாக, கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

திருப்பூர் அரசு விழாவில் 4,335 பயனாளிகளுக்கு ரூ.55.61 கோடியில் நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.11.2021 அன்று திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.28.17 கோடி மதிப்பீட்டில் 20 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.41.24 இலட்சம் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 4,335 பயனாளிகளுக்கு ரூ.55.61 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை.

அரசின் நலத்திட்டங்கள் வழங்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்றுள்ள தமிழகத்தின் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களே! விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களே! மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களே! மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன் அவர்களே! மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களே! நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. ஆ.இராசா அவர்களே! திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.சுப்பராயன் அவர்களே! ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்களே! பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சண்முகசுந்தரம் அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்களே! சட்டப்பேரவை உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! அலுவலர்களே! பத்திரிகை, ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக் கூடிய நண்பர்களே! சகோதரர்களே! மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்திருக்கக் கூடிய அன்பிற்கினிய தாய்மார்களே! சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலையில் கோவையில் நடைபெற்ற அரசு விழா, அதைத் தொடர்ந்து இந்தத் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு விழாவில் பங்கேற்று உரையாற்றுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

திருப்பூருக்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு, பெருமைகள் உண்டு. வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய பெருமைகளையெல்லாம் தொடர்ந்து நாம் எடுத்துச் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம். நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா, பேரறிஞர் அண்ணா அவர்களை ஆளாக்கிய தந்தை பெரியார், இந்த இருபெரும் தலைவர்களும் முதன்முதலில் சந்தித்தப் பகுதி எந்தப் பகுதி என்று கேட்டால், இந்தத் திருப்பூர் பகுதிதான். அப்படிப்பட்ட வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய இந்தத் திருப்பூரில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்தித்து நலத்திட்ட உதவிகளைத் தொடங்கிவைத்து, அதைத் தொடர்ந்து, உரையாடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவதற்காக நான் திருப்பூருக்கு வந்திருக்கிறேன். சாதாரணமாக அல்ல, பூரிப்போடு, முக மலர்ச்சியோடு, பெருமையோடு எப்படி நீங்கள் வந்திருக்கிறீர்களோ அதேபால நானும் வந்திருக்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதை இன்றைக்கு இந்தத் திருப்பூரிலே நேரடியாக, உங்கள் மூலமாக அந்தச் சிரிப்பை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

4,335 பயனாளிகளுக்கு ரூ.55.61 கோடி நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. அதாவது 4,335 பயனாளிகள் என்று சொன்னால் 4,335 குடும்பங்கள் பயன் அடைகிறது என்பதை நீங்கள் உணர்ந்திட வேண்டும்.

இன்னொன்றைச் சொல்லியாக வேண்டும். இந்த நிகழ்ச்சி நடத்தவேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்தான் முடிவெடுத்தோம். ஏற்கெனவே கோவையில் நிகழ்ச்சிக்குத் தேதி வழங்கி அந்த நிகழ்ச்சி நடப்பதற்கானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர்கள் திரு. சாமிநாதன் அவர்களும், திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களும் என்னைச் சந்தித்து, கோவைக்கு வருகிற நீங்கள் மாலையில் திருப்பூருக்கு வந்தால், நாங்கள் அரசின் சார்பில் நிகழ்ச்சி நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்புதான் சொன்னார்கள். இரண்டு நாட்களில் முடியுமா? அது சாத்தியப்படுமா என்று நான் கேட்டபோது, நீங்கள் தேதியைத் தாருங்கள், நாங்கள் அதை முடித்துக் காட்டுகிறோம் என்று சொன்னார்கள். முடித்தது மட்டுமல்ல, வெற்றியோடு இந்த நிகழ்ச்சியை நடத்தக்கூடிய வாய்ப்பை அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் உங்கள் அனைவரின் சார்பில், அரசின் சார்பில், முதலமைச்சர் என்ற முறையில் அமைச்சர்களாக இருக்கக்கூடிய திரு. சாமிநாதன் அவர்களுக்கும், திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை, பாராட்டுக்களை, நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தம் 18 அரசுத் துறைகளின் சார்பில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

❖ அடுக்குமாடிக் குடியிருப்பு ஆணையைப் பெற்றிருக்கிறார்கள்.

❖ சிறு, குறு தொழில் செய்யக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ பெண் குழந்தைகள் பாதுகாப்புப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ வீட்டுமனைப் பட்டா தரப்பட்டுள்ளது.

❖ முதியோர் உதவித்தொகை, கைம்பெண் உதவித்தொகை தரப்பட்டுள்ளது.

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளது.

❖ குடும்ப அட்டைகள், மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் தரப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தபோது, உங்களால் இந்த ஆட்சி எங்களிடத்தில் ஒப்படைத்தபோது நான் சொன்னேன் "**ஒரு கட்சியின் அரசாக இது இருக்காது. ஓர் இனத்தின் அரசாக இது வெற்றி நடைபோடும்**" என்று நான் அப்போதே எடுத்துச் சொன்னேன்.

அப்படித் தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறுத் தரப்பினருக்கும் இந்த மேடையில் உதவிகள் தரப்பட இருக்கிறது. அனைத்துத்தரப்புத் தமிழர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தக்கூடிய நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பயனாளிகளுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். 660 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25 கோடி அளவில் கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்கும்போது, இந்த மேடையில் நான் நின்றுகொண்டிருக்கும்போது எனது நினைவுகள் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு செல்கின்றன. அப்போது நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தேன். துணை முதலமைச்சராக இருந்தேன். அப்போதும், இதேபோல்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏராளமான நிதி உதவிகளை, அது மானியத் தொகையாக இருந்தாலும், கடனாக இருந்தாலும், சுழல் நிதியாக இருந்தாலும் அன்றைக்கு வழங்கிய அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு அரசு நிகழ்ச்சி என்று சொன்னால், அந்த அரசு நிகழ்ச்சிக்கு அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளோ வந்து அந்த நிகழ்ச்சிகளில்

கலந்து கொள்வது உண்டு. ஒரு 500 நபர்களுக்கு அந்த உதவிகள் போய்ச் சேரவேண்டும். ஆனால் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளக்கூடிய அமைச்சர்களாக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், அல்லது மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும், அடையாளத்திற்கு 10 நபர்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதம் உள்ளவற்றை அதிகாரிகள் வீடு தேடி வந்து கொடுப்பார்கள் அல்லது நீங்கள் அலுவலகத்திற்குச் சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்று விடுவார்கள். அதுதான் ஏற்கெனவே நடைமுறையிலிருந்து கொண்டிருந்த ஒன்று.

ஆனால், மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் பொறுத்தவரை நான் எப்படி மாற்றினேன் என்றால், ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி இருந்தபோது, நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது, துணை முதலமைச்சராக இருந்தபோது, 5 நபர்கள், 10 நபர்களுக்கு எல்லாம் நான் கொடுக்க வரமாட்டேன். எத்தனை நபர்கள் அதை வாங்குவதற்காக வந்திருக்கிறார்களோ, அது 500 நபர்களாக இருந்தாலும், 5,000 நபர்களாக இருந்தாலும், 10,000 நபர்களாக இருந்தாலும் அனைவருக்கும் நான் கொடுத்துவிட்டுத்தான் செல்வேன் என்று சொல்லி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதை முறைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஒவ்வொருவருக்கும் நம்பர் கொடுத்து வரிசையாக உட்கார வைத்து, வரிசையாக அதைப் பெற்றுக்கொண்டு செல்வார்கள், அதைத்தான் நினைத்துப் பார்க்கிறேன். காலையில் 10 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கினால் இரண்டு, மூன்று மணிக்குக் கூட முடிந்திருக்கிறது. என் அருகிலிருக்கும் அமைச்சர்களுக்கெல்லாம் கால் வலி வந்துவிடும். இடையில் அவர்கள் தண்ணீரோ, காபியோ அல்லது தேநீரோ அருந்திவிட்டுச் சிறிது ஓய்வு எடுத்துவிட்டு வருவார்கள். ஆனால் நான் அப்படியில்லை. எப்போது நிற்கத் தொடங்கிக் கொடுக்க ஆரம்பிக்கிறேனோ அந்த 5,000 பேருக்கும் கொடுத்து முடிக்கும் வரைக்கும் அதே மேடையில் இருந்தேன். நான் பெருமைக்காகச் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். அது அவர்களுக்கு முழுமையாகச் சேரவேண்டும். 10 நபர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டால், மீதமுள்ளவர்களுக்குச் சில நேரங்களில் சேராமல் போய்விடுகிறது. எனவே, முழுமையாகச் சென்று சேரவேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் கொள்கையை நான் மனதில் பதியவைத்து, அனைவருக்கும் நான் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறேன்.

அதைப் பெற்றுக்கொள்ள வரக்கூடிய தாய்மார்கள் என்னிடத்தில் உரிமையோடு கேட்பார்கள், நாங்களாவது உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நீ கூப்பிடும்போதுதான் மேடைக்கு வந்து வாங்கிக் கொண்டு சென்றுவிடுகிறோம். ஆனால் கொடுக்கின்ற நீ 10 மணியிலிருந்து நின்றுகொண்டு இரண்டு மணிவரைக்கும், மூன்று மணிவரைக்கும் நின்று கொண்டேயிருக்கின்றாயே, உனக்குக் கால் எல்லாம் வலிக்காதா என்று உரிமையோடு சில தாய்மார்கள் கேட்பார்கள், அப்போது நான் சொல்வேன், நான் அதைக் கொடுக்கின்றபோது உங்கள் முகத்தைப் பார்க்கிறேன், உங்கள் முக மலர்ச்சியைப் பார்த்த பிறகு என் கால்வலி தானாகப் பறந்து சென்றுவிடுகிறது என்று நான் சொல்வேன். அதைத்தான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

ஏராளமான நிதி உதவிகளைப் பெறுவதற்காக, கடன் உதவிகளை நாம் வழங்கிக்கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மகத்தான எத்தனையோ திட்டங்களை இந்த நாட்டுக்குக் கொடுத்திருக்கக்கூடிய ஒரு இயக்கம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றாலே உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திய ஆட்சி என்று அன்றைக்குப் பெயர் எடுத்தோம். ஆனால், அது கடந்த காலத்தில் எப்படிப் போனது என்று உங்களுக்குத் தெரியும். நான் அதையெல்லாம் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை, அரசியல் பேசுவதற்கு நான் தயாராக இல்லை, அதற்குத் தனி மேடை இருக்கிறது. எனவே, அதை நான் விரிவுபடுத்தி, விமர்சித்துப் பேச நான் தயாராக இல்லை.

நாம் ஆட்சியில் ஏற்கெனவே இருந்தபோது, நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தந்தை பெரியார் பெயரில் சமத்துவபுரங்கள், கான்கிரீட் வீடுகள், கான்கிரீட் சாலைகள், மினிபஸ்கள், கிராமப்புற ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது, கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 108 என்கிற ஆம்புலென்ஸ், மகப்பேறு நிதியுதவித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், இதயம் காப்போம் பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டம், கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், கைம்பெண் மறுமண நிதியுதவித் திட்டம், கைம்பெண் தாய்மார்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டம், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவிநலத் திட்டம், திருநங்கைகள் நலவாரியம் இப்படி ஏராளமானத் திட்டங்களை நாம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். இந்த வரிசையில் சொல்லக் கூடிய ஒரு சிறப்பானத் திட்டம்தான் மகளிர் சுயஉதவிக் குழுத் திட்டம். 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது சொன்னார், பெண்கள்

தன்மானத்தோடு வாழவேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது, தன்னம்பிக்கையோடு அவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மகளிர் சுயஉதவிக் குழு என்கின்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள் என்று. இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் திராவிட இயக்கத்தைத் தந்தை பெரியார் அவர்கள் தொடங்கினார்கள். அந்த இலட்சிய அடித்தளத்தில் உருவான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, பெண்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

ஆனால் கடந்த காலத்தில், குறிப்பாக, கடந்த பத்து ஆண்டுக்கால ஆட்சியில் அந்த மகளிர் சுயஉதவிக் குழு எந்த அளவிற்கு மோசமான நிலைக்குப் போனது என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் ஆட்சியிலிருந்தபொழுது வங்கிக்குச் சென்று கடன் உதவி கேட்கும்பொழுது உட்கார வைத்து, காபி கொடுத்து அவர்கள் கேட்பதைக் கொடுத்து அனுப்புவார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுக் காலத்திலே மகளிர் சுயஉதவிக் குழு சின்னாபின்னம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அதனை மீண்டும் முழுமையாகப் புதுப்பிக்கத் திட்டமிட்டு, இன்றைய நாள் ரூ.25 கோடி மதிப்பிலான கடனுதவிகள் இந்த நிகழ்ச்சியின் மூலமாக வழங்கப்படவிருக்கிறது. ஏற்கெனவே, கடந்த ஆறுமாத காலத்தில் திருப்பூர் மாவட்டத்தில் ரூ.230 கோடிக் கடனாக 5,420 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சி மலர்ந்ததும், முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன் ஐந்து முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டேன். அதில் முக்கியமானது.

மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம். அதேபோல, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடன் முழுவதும் நான் ஆட்சிக்கு வந்தவுடன் ரத்து செய்திருக்கிறேன். இது மகளிர் சமுதாயம் மீது இந்த ஆட்சி வைத்திருக்கக்கூடிய அக்கறையினுடைய வெளிப்பாடு. இதுபோன்று ஏராளமான திட்டங்களை மகளிருக்காக நிறைவேற்றியது மட்டுமல்ல, இன்னும் நிறைவேற்றப் போகிறோம்.

இந்த விழாவில் ஏராளமான கட்டடங்கள் திறப்பு விழாவை நடத்தி இருக்கிறோம்.

❖ திருப்பூர் புதுராமகிருஷ்ணாபுரம் ஆரம்பச் சுகாதார நிலையம்

❖ திருப்பூர் மாவட்டத்தில் 11 அரசுத் துறைகளின் சார்பில் ரூ.2,381 இலட்சம் மதிப்பிலான திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖ குண்டடம் வட்டாரம் கொழுமங்குழி ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டுவதற்கும், மாம்பாடி ஊராட்சி புளியம்பட்டிக் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இது விரைவில் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖ திருப்பூர் மாவட்டம் என்பது ஒரு தொழில் மாவட்டம். அதிலும் குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் களஞ்சியமாக இந்த மாவட்டம் விளங்கிக் கொண்டு இருக்கிறது. கொரோனா காலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவிடவும் அவற்றின் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளைச் செய்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

❖ குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2,239 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.179.19 கோடி முதலீட்டு மானியமாகத் தரப்பட்டது.

❖ வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கடன் பெறக்கூடிய நேர்வுகளில் சொத்து ஆவணங்களை இணைய வழியாகப் பதிவுசெய்ய வகைசெய்யக்கூடிய சட்டம் சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறோம்.

❖ மாநிலக் கடன் உத்தரவாத நிதியம் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.100 கோடி வைப்பு நிதியுடன் அது விரைவில் செயல்படத் தொடங்கும். சென்னை மாநகரப் பகுதி போன்றே கோவை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்காக, கோவை நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தும் என்று காலையில் நடந்த நிகழ்வில் ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டேன். சென்னை, கோவை மட்டுமல்ல, நமது திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சியையும் மனதில் வைத்துத் திருப்பூர் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் அமைக்கப்படுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த வேளையில் உங்களிடம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖ புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய உச்சவரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி ஏராளமாக இருக்கிறது.

இதைச் சொல்வதற்குக் காரணம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாடு அடைவதன் மூலமாகத்தான் ஏழை, எளிய நடுத்தர மக்கள் உயர்வடைய முடியும். அவர்களை நெஞ்சில் வைத்து ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசு தீட்டி வருகிறது.

ஆட்சிக்கு வந்து 6 மாத காலம்தான் ஆகியிருக்கிறது. இன்னும் நான்கரை வருடம் இருக்கிறது. 6 மாதத்தில் இப்படிப் பணிகளைச் செய்திருக்கிறோம் என்றால் நான்கரை ஆண்டிற்கு இன்னும் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை நீங்களே உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் ஓராண்டு, ஈராண்டு அளவுக்குச் சாதனைகளை இந்த 6 மாதத்தில் செய்து முடித்திருக்கிறோம். இந்தச் சாதனைகளைத் தமிழ்நாடு மட்டுமல்ல, இங்கே கூட திரு. ஆ.இராசா அவர்கள் பேசினார்கள். மற்றவர்களும் தொடர்ந்து பேசியிருக்கிறார்கள். அகில இந்தியப் பத்திரிகைகள் பாராட்டுகிறது. அடுத்த மாநிலங்களின் பாராட்டுதல்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்துகூட பாராட்டுகள் வந்து குவிகிறது. எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கேரளாவைச் சேர்ந்த ஊடகங்களில் நம்முடைய அரசின் செயல்பாட்டைப் பாராட்டித் தொடர்ந்து அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒளிபரப்பி வருகிறார்கள்.

இவற்றையெல்லாம், தனிப்பட்ட இந்த ஸ்டாலினுக்குக் கிடைத்த பாராட்டாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டாகத்தான் நினைக்கிறேன். ஆகவே, பல்வேறு மாநிலத்தினுடைய முதலமைச்சர் பட்டியல்களை எல்லாம் வெளியிட்டு இதில் நம்பர் 1 ஸ்டாலின், நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்கிறார்கள். பெருமைதான், மகிழ்ச்சிதான். எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். நம்பர் 1 முதலமைச்சர் ஸ்டாலின் என்று சொல்வதைவிட நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

ஆகவே, ‘உங்களுக்காக உழைக்கக் காத்திருக்கிறோம் – எங்களுக்கு நீங்கள் உத்தரவிடுங்கள்’ – அதை முடிக்கத் தயாராக இருக்கிறோம் எங்கள் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் வாக்களித்தீர்கள். வாக்களித்த மக்களுக்கு மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஐந்து மாதங்கள் மட்டுமல்ல, இந்த ஐந்து ஆண்டுகளும் தி.மு.க. ஆட்சி இப்படித்தான் செயல்படும், பணியாற்றும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்து,

பாட்டாளிகள், தொழிலாளிகள், உழவர்கள், ஏழை, எளிய நடுத்தர மக்கள், பட்டியலினப் பழங்குடி மக்கள், சிறுபான்மையினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர்கள் என அனைவரின் பிரதிநிதியாகத்தான் நான் இந்த முதலமைச்சர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறேன். ஆகவே அவர்களுக்கு நன்மைகள் செய்வதற்காகத்தான் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறேன். உங்களில் ஒருவனாக இருந்து ஆட்சி நடத்த நான் தயார். நீங்களும் துணைநிற்க, எங்களுக்கு ஆதரவு தர தொடர்ந்து எங்களை உற்சாகப்படுத்துங்கள், எங்களை

ஊக்கப்படுத்துங்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

அதனைத் தொடர்ந்து, எரிசக்தித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.28.17 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள 20 திட்டப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின்கீழ்ச் செயல்படும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் குண்டடம் வட்டாரம், கொழுமங்குழியில் ரூ.24.78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் மற்றும் தாராபுரம் வட்டம், மாம்பாடி ஊராட்சி, புளியம்பட்டிக் கிராமத்தில் ரூ.16.46 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் என மொத்தம் ரூ.41.24 இலட்சம் மதிப்பீட்டிலான 2 புதியத் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில், 4,335 பயனாளிகளுக்கு ரூ.55.61 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, திருப்பூர், சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரி வளாகத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

ரூ.184 கோடியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்குப் புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.147.78 கோடியில் கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்குகள், ஏலக்கூடங்கள், சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் கூடங்கள், விவசாயிகளுக்கான ஓய்வு அறைகள் மற்றும் விற்பனை அலுவலகங்கள், ரூ.22.60 கோடியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ்ச் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்களில் ரூ.12.35 கோடியில் கட்டப்பட்டுள்ள கல்விக் கட்டடங்கள் மற்றும் ரூ.1 கோடியில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

வேளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழக வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை கடந்த 14.08.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு, உழவர்களின் நலனைப் பேணும் வகையில் வேளாண்மைத்துறை என்ற பெயரினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகரச் சாகுபடிப் பரப்பான 60 விழுக்காடு என்பதை 75 விழுக்காடாக உயர்த்தும் இலக்கினை அடைந்திடவும், வேளாண் பெருமக்களின் வருவாயினைப் பன்மடங்காக உயர்த்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு மாநில விற்பனை வாரியம் மூலம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டம்; கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு மற்றும் செஞ்சேரி, தொண்டாமுத்தூர்; கடலூர் மாவட்டம், பண்ருட்டி மற்றும் சேத்தியாதோப்பு; கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை; திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல், வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம் மற்றும் வடமதுரை (அய்யலூர்); ஈரோடு மாவட்டம், நாதிபாளையம்; காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர்; கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் மற்றும் தியாகதுருகம்; மதுரை மாவட்டம், மேலூர்; நாகப்பட்டினம் மாவட்டம், செம்பணார்கோயில் மற்றும் திருப்பூண்டி; புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் அறந்தாங்கி; இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் இராசசிங்கமங்கலம்; சேலம் மாவட்டம், கருமந்துறை; சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, தேவக்கோட்டை மற்றும் காரைக்குடி; தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர்; திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், திருத்தணி மற்றும் ஊத்துக்கோட்டை; திருப்பூர் மாவட்டம், அவினாசி, காங்கேயம் மற்றும் பெதப்பம்பட்டி; திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி; தேனி மாவட்டம், தேனி; திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, சேத்துப்பட்டு, செய்யார், கண்ணமங்கலம், மங்களமாமண்டூர், வந்தவாசி மற்றும் வேட்டவலம்; தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம்; விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, இராஜபாளையம் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.147.78 கோடியில் கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்குகள், ஏலக்கூடங்கள், சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் கூடங்கள், விவசாயிகளுக்கான ஓய்வு அறைகள் மற்றும் விற்பனை அலுவலகங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர்; திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர்; வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு; மதுரை மாவட்டம், சேடப்பட்டி; புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் மற்றும் திருமயம்; கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை; விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை; திருவண்ணாமலை மாவட்டம், செங்கம்; திண்டுக்கல் மாவட்டம், நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ரூ.22.60 கோடியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ்ச் செயல்படும் திருச்சிராப்பள்ளி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.4.96 கோடியில் கட்டப்பட்டுள்ள முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கான மையம், புதுக்கோட்டை மாவட்டம், வம்பன், தேசிய பயறு ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.5.45 கோடியில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், ஆய்வகங்களுடன் கூடிய நிருவாகக் கட்டடம் மற்றும் மாணவர்கள் படிப்பு மையம், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.94 கோடியில் கட்டப்பட்டுள்ள மாணவியர் படிப்பு மையம், விரிவுரை அரங்கம் மற்றும் தேர்வு அறை; விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில் ரூ.1 கோடியில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையம்;

என மொத்தம் ரூ.183.73 கோடியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தின் மண்டலக் கருத்தரங்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கோயம்புத்தூரில் 19.11.2021 அன்று, நடைபெற்ற இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தின் 53ஆவது மண்டலக் கருத்தரங்கினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

அனைவருக்கும் வணக்கம்.

தென்மண்டலக் கவுன்சிலின் 70ஆவது ஆண்டில் நடைபெறும் உங்களது 53ஆவது மண்டலக் கருத்தரங்கில் ஒரு அங்கமாகக் கலந்துகொள்வது பல வகைகளிலும் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததற்காக முதற்கண் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னிந்தியாவின் உயரிய அறிஞர்கள் கலந்துகொண்டுள்ள இந்தக் கருத்தரங்கைத் துவக்கி வைப்பதை எனக்குக் கிடைத்த பெருமையாக நான் கருதுகிறேன்.

தென்மண்டலக் கவுன்சில் வரலாற்றில் முதன்முறையாக, ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டயக் கணக்கறிஞர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்காக இது அமைந்துள்ளது என்று அறிந்து நான் வியப்படைந்தேன். இதனைத் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் நடத்திக் காட்டிய திரு. ஜலபதி அவர்களுக்கு எனது பாராட்டுகள். நேரில் வந்து உங்களிடையே உரையாற்ற வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். இருப்பினும் மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள மழை வெள்ளப் பாதிப்பு நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளதால், காணொலிக் காட்சி வாயிலாக உங்களிடையே நான் உரையாற்றுகிறேன்.

இதுபோன்ற கருத்தரங்குகளின் முதன்மையான நோக்கம் அவரவர் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பற்றி அறிந்துகொள்வதும் அதற்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்வதும்தான். இக்கருத்தரங்கமும் அந்த நோக்கத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன்.

உங்கள் தென்மண்டலக் கவுன்சிலின் வரலாற்றைப் படிக்கையில், 1998ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தின் பொன்விழாவை எங்கள் தலைவரும் அன்றைய முதலமைச்சருமான தலைவர் கலைஞர்தான் தொடங்கி வைத்தார் என்று அறிந்து மகிழ்ந்தேன். மேலும், இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக உள்ள உங்கள் முன்னாள் தலைவர் திரு. ஜி.ராமசாமி அவர்களும் அன்றைய பொன்விழாவில் துணைத் தலைவர் என்ற வகையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மேடையிலிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் தங்களது தென்மண்டலக் கவுன்சிலின் எழுபதாம் ஆண்டில் நடைபெறும் இக்கருத்தரங்கில் நான் கலந்துகொள்வதில் மனநிறைவடைகிறேன்.

இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தின் சென்னை அலுவலகத்துக்கு வருகை புரிந்த ஒரே முதலமைச்சர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இங்கு நான் பதிவு செய்தாக வேண்டும். 1969ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது அவர் கலந்து கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தின் தென்மண்டல கவுன்சிலில் சென்னையில் ஆராய்ச்சிக்கு எனத் தனியாக ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு பெரும் உதவி புரிந்துள்ளது என்ற செய்தியும் என்னை மேலும் உவகை கொள்ளச் செய்கிறது.

பட்டயக் கணக்கறிஞர்களான உங்கள் மீது எப்போதுமே எனக்குப் பெருமதிப்பு உண்டு. உங்கள் கவுன்சிலின் உறுப்பினர்களில் ஒருவராக விளங்கிய திரு.வி.ஜெகதீசன் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நட்புறவுடன் இருந்தார் என்பதையும் நான் இவ்வேளையில் நினைவுகூர விரும்புகிறேன்.

தடுப்பூசி முகாம்கள் நடத்தியது, நாட்டில் எங்குப் பேரிடர் ஏற்பட்டாலும் பிரதமர் மற்றும் தொடர்புடைய மாநில முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நிதியளிப்பது எனச் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படுபவர்களாகப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகமும் அதன் அங்கமான நீங்களும் இருந்து வருகிறீர்கள். அதேபோல, கொரோனா இன்னும் முழுவதுமாக ஓயாத நிலையில், பெரும்பாலானோர் இணையவழியில் கலந்துகொள்ளும் வகையில் இக்கருத்தரங்கை நீங்கள் நடத்துவதற்கு என்னுடையப் பாராட்டுகள்.

பட்டயக் கணக்கறிஞர்களான உங்களின் அறிவுத்திறன் நாட்டை ஆள்பவர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் சமூகத்தின் இதரப் பிரிவினருக்கும் பல வழிகளிலும் துணையாக உள்ளது.

நிதித்துறை, கார்ப்பரேட் நிருவாகம், கணக்குத் தணிக்கை போன்றச் செயல்பாடுகளில் அரசுக்கு உதவுவதோடு உங்கள் பணி நின்றுவிடுவதில்லை. அவை சார்ந்த சட்டங்களை இயற்றுவதிலும்; வேளாண் வளர்ச்சிச் செயல்பாடுகளிலும், நாட்டின் வளர்ச்சிக்கு நீங்கள் பெரும் பங்காற்றி வருகிறீர்கள். ஆகையால் உங்களை 'நாட்டு வளர்ச்சிக்கான பங்களிப்பாளர்கள்' என்று அழைப்பதுதான் சரியாக இருக்கும். உலக அளவில் நம் நாடு முன்னணியில் இருக்க வேண்டும் என்றால் அதற்கு வலுவான நிதிக் கட்டமைப்புகளும், ஒழுங்குமுறைகளும் தேவை. அதற்கான யோசனைகளை வழங்குவதில் உங்கள் திறமை மீது நாட்டில் உள்ள அனைவருக்கும் பெரும் நம்பிக்கை உள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதிலும், வடிவமைப்பதிலும் பட்டயக் கணக்கறிஞர்களான நீங்கள் முக்கிய பங்காற்றுகிறீர்கள் என்பதை என்னால் ஐயமின்றிக் கூற முடியும். இந்த நற்பெயர் எப்போதும் நிலைத்து நிற்கும் வகையிலும் அரசாங்கத்தின் கரங்களை வலுப்படுத்தும் வகையிலும் உங்கள் பணிகள் அமைய வேண்டும்.

கற்றல் – காலத்துக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் நாள்தோறும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அறிஞர்கள் உங்கள் துறையிலும் அதிகம் உள்ளனர் என்பது சிறப்புக்குரியது.

இதுபோன்ற நிகழ்வுகளில் ஒன்றிய, மாநில அரசு அலுவலர்களையும் நீங்கள் அழைப்பது இருதரப்பிலும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள உதவும். இதனால் சமுதாயம் பயன்பெறும்.

அரசின் உயர் பதவிகளில் உங்கள் துறையைச் சேர்ந்த பலர் உள்ளனர். அரசு அமைக்கும் முக்கியக் குழுக்களிலும் இடம்பெற்றுத் தகுந்த ஆலோசனைகளை வழங்குகின்றனர். இந்தத் தருணத்தில் உங்களுக்கு ஒரு முக்கியச் செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். பொருளாதாரக் குற்றப் பிரிவிலும், ஊழல் தடுப்புப் பிரிவிலும், நிறுவனங்களின் மோசடிகளை விசாரிக்கத் தமிழ்நாடு அரசு புதிய தணிக்கைப் பிரிவுகளை இப்போது தொடங்கியுள்ளது என்பதையும் இந்நிகழ்வில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிதி நிலையைச் சீராக்குவதிலும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு அரசுக்குத் தேவையானப் பரிந்துரைகளை நீங்கள் தெரிவித்தால் உடனடியாக அவற்றில் கவனம் செலுத்தி, நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம் என்பதையும் இந்த நிகழ்வின் வாயிலாக உங்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டயக் கணக்கறிஞர்களைக் கண்காணிப்பவர்களாக மட்டுமே பார்த்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் பொருளாதாரத்தின் பாதுகாவலர்களாகத் தங்களின் அயராத முயற்சிகளின் மூலம் இன்று உயர்ந்துள்ளீர்கள். உங்கள் நற்பணிகளை, சமுதாயத்திற்கு நிதி ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்கும் பணிகளைத் தொடர்ந்து ஆற்றுங்கள், தமிழ்நாடு அரசு உங்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்கத் தயாராக இருக்கிறது என்ற உறுதியை வழங்கி, இந்த இனிய வாய்ப்புக்கு என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

அகில இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பின் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2021 அன்று திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில், அகில இந்திய ஏற்றுமதி நிறுவனங்கள் கூட்டமைப்பு மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்திய கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டார்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில், தமிழக ஏற்றுமதி தொழில் துறைக்கு 100 பில்லியன் டாலர் ஏற்றுமதி வர்த்தக இலக்கு நிர்ணயித்து, அதற்கான திட்டங்களை வகுத்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அகில இந்திய ஏற்றுமதி நிறுவனங்கள் கூட்டமைப்பு மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மேலும், சென்னையில் 22.09.2021 அன்று நடைபெற்ற **"ஏற்றுமதியில் ஏற்றம், முன்னணியில் தமிழ்நாடு"** தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டில், ''தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையை'' வெளியிட்டது ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் சாதகமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்கள். அத்துடன் தமிழ்நாடு அரசு, ஏற்றுமதியை ஊக்குவித்திட அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதையும், அதற்கான கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாகச் செய்து வருவதையும், தேவையான ஒப்பந்தங்கள் மற்றும் ஆணைகள் உடனடியாக பிறப்பிக்கப்படுவதையும், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதையும் பாராட்டினார்கள். இத்தகைய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு ஏற்றுமதி தொழில் துறைக்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டுமென்று ஏற்றுமதியாளர்கள் சங்க நிருவாகிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

இக்கலந்தாய்வு நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது :

உங்களுடைய நன்றிக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் சொன்ன பிரச்சனை மட்டுமல்ல, புதிய பிரச்சனைகள், தீர்க்க முடியாமல் இருக்கும் பல்வேறு பிரச்சனைகள், எதுவாக இருந்தாலும் எந்தநேரமும் இந்த அரசை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், தொழில் துறைச் செயலாளர் இருக்கிறார், முதலமைச்சர் அலுவலகம் இருக்கிறது, என்னுடைய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டால் உடனடியாக அந்தச் செய்தியை என்னிடம் சேர்த்துவிடுவார்கள். எல்லோரும் தமிழ்நாடு சி.எம்.–யை நம்பர் ஒன் சி.எம். என்று சொல்கிறார்கள். அதுபோல் தமிழ்நாட்டை நம்பர் ஒன் மாநிலம் என்று சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் பக்கபலமாக இருந்து உங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூ.517 கோடியில் 20 துணை மின் நிலையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.11.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், எரிசக்தித்துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், ரூ.517.39 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 20 துணை மின் நிலையங்களைத் திறந்துவைத்தார். மேலும், 39 துணை மின் நிலையங்களில் 712 எம்.வி.ஏ. அளவிற்குத் திறன் அதிகரிக்க ரூ.141.61 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 40 எண்ணிக்கையிலான திறன் மின்மாற்றிகளின் செயல்பாட்டினைத் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாட்டில் எவ்விதத் தடையுமின்றி மின்சாரம் கிடைக்கச் செய்யும் நோக்குடன், அதிகரித்து வரும் மின் தேவைக்கு ஏற்றவாறு தற்போது உள்ள மின் கட்டமைப்புப் பலப்படுத்தப்பட்டும், தரம் உயர்த்தப்பட்டும், மின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டும் வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மின் பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின் பராமரிப்புச் செலவினங்களையும் குறைத்து, தேவைப்படுகின்ற உச்சபட்ச மின் தேவைகளை நிறைவுச் செய்யும் வகையிலும், சரியான மின் அழுத்தத்துடன் கூடிய சீரான மின்சாரத்தை வழங்கிடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடுதல் துணை மின் நிலையம் அமைப்பது சீரான மின் விநியோகத்திற்கு அவசியமாகும் என்பதைக் கருத்தில்கொண்டு, தேவைக்கேற்பப் புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்கள் அமைத்தல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடுதல்/மின்மாற்றிகளின் திறன் அதிகரித்தல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், துவாக்குடி, மாம்பலம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மூன்று 230 கி.வோ. துணை மின் நிலையங்கள்; புளியந்தோப்பு, நல்லம்பாக்கம், ஈருடையாம்பட்டு, சன்னதுபுதுக்குடி, வெம்பாக்கம், மேட்டுப்பட்டி, வேங்கைமண்டலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஏழு 110 கி.வோ. துணை மின் நிலையங்கள்; வேதாச்சல நகர், காவனூர், திருமுடிவாக்கம், மரிக்கம்பள்ளி, அரக்கோணம், பூமனூர், திருநீலக்குடி, அடையாளம்பட்டு, அரட்டவாடி, கூடலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பத்து 33 கி.வோ. துணை மின் நிலையங்கள் என மொத்தம் ரூ.517.39 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 20 துணை மின் நிலையங்களையும்,

அரியலூர், இராமாபுரம், அன்னை நகர், கிண்டி, சித்தரசூர், பி.முட்லூர், கள்ளிமந்தையம், வத்தலக்குண்டு, பழையசீவரம், வையாவூர், முசரவாக்கம், குன்னவாக்கம், பூணிமாங்காடு, சிறுசேரி, திருமுடிவாக்கம், தாமல், கள்ளக்குறிச்சி, காரணைபெருச்சானூர், கருங்கல், வேப்பம்பாளையம், பஞ்சப்பட்டி, சூசூவாடி, குருபரப்பள்ளி, கமுதி, கே.ஆர்.தோப்பூர், வண்ணாத்திப்பாறை, பேரளம், கப்பல் நகர், உள்ளிக்கோட்டை, மன்னார்குடி, திருமழிசை, திருவள்ளூர், பண்டி காவனூர், மேலப்பாளையம், கருவலூர், குணசீலம், சாத்தான்குளம், திருப்பாச்சனூர், காரியாப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள 39 துணை மின் நிலையங்களில் 712 எம்.வி.ஏ. அளவிற்குத் திறன் அதிகரிக்க ரூ.141.61 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 40 எண்ணிக்கையிலான திறன் மின்மாற்றிகளின் செயல்பாட்டினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டில் சிலம்பம் சேர்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 23.11.2021 அன்று கோயம்புத்தூரில், மாநில அளவில் சிலம்பப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.வீரமணி, திரு.பாட்ஷா ஆகியோர் சந்தித்து, விளையாட்டு வீரர்களுக்கான, 3 சதவிகித இடஒதுக்கீட்டில், சிலம்பம் விளையாட்டையும் இணைத்து அரசாணை வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டில் சிலம்பம் விளையாட்டைச் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள சிலம்ப விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பெருமளவில் பயன் பெறுவதன் மூலம் தமிழினத்தின் பழங்கால தற்காப்புக் கலைகளில் சிறப்புமிக்க சிலம்பம் விளையாட்டிற்கு மாபெரும் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது சீரிய முயற்சியின்கீழ், ஒன்றிய அரசின் கேலோ இந்தியா திட்டத்தில் சிலம்பம் விளையாட்டு ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 24.11.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், உகாண்டாவில் நடைபெற்றச் சர்வதேச பாரா பாட்மிண்டன் போட்டி 2021இல் பதக்கங்கள் வென்று சாதனைப் படைத்த தமிழக வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் திரு.ருத்திக், திரு.தினகரன், திரு.சிவராஜன், திரு.கரண், செல்வி அமுதா, செல்வி சந்தியா, திரு.பிரேம் குமார், திரு.சீனிவாசன் நீரஜ், போட்டிகளில் பங்கேற்ற வீரர் திரு.தினேஷ், பயிற்சியாளர்கள் திரு.பத்ரிநாராயணன், திரு.இர்பான் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

தமிழ்நாடு கிரிக்கெட் அணிக்குப் பாராட்டு

''சையத் முஸ்டாக் அலி கோப்பை'' கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து 2ஆவது முறையாக வாகை சூடியிருக்கும் தமிழ்நாடு கிரிக்கெட் அணிக்கு என்னுடைய வாழ்த்துகள்!

ஷாருக்கான், சாய் கிஷோர் உள்ளிட்ட இளம் திறமையாளர்கள் சிறப்பான, துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எல்லோரும் மேலும் உயரங்களை அடைய வாழ்த்துகிறேன்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
23.11.2021

1,01,474 பயனாளிகளுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதிய ஆணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ்ப் புதியதாக 1,01,474 பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ்ச் செயல்படுத்தப்பட்டு வரும், இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம், இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், இந்திராகாந்தி தேசிய விதவைகள் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்திட்டம், ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியத் திட்டம், 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் மற்றும் முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஆகிய ஓய்வூதியத் திட்டங்களின் வாயிலாக இதுநாள் வரை 33,31,263 பயனாளிகள் ஓய்வூதியம் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டங்களுக்கென 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4,807.56 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் கோரி புதியதாக வரப்பெற்ற விண்ணப்பங்களில், மாநில அளவில் 1,01,474 தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிடும் விதமாக, இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 48,077 பயனாளிகளுக்கும், இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 1,359 பயனாளிகளுக்கும், இந்திராகாந்தி தேசிய விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 4,346 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 14,739 பயனாளிகளுக்கும், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 28,209 பயனாளிகளுக்கும், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2,397 பயனாளிகளுக்கும், ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 1,732 பயனாளிகளுக்கும், 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 554 பயனாளிகளுக்கும், முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 61 பயனாளிகளுக்கும் என மொத்தம் 1,01,474 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ‘‘பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச நாள்’’ காணொலிச் செய்தி.

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

சமீபகாலமாக நாம் அதிகம் கேள்விப்படும் செய்தி ஒன்று என்னை அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாக்கிக்கொண்டு வருகிறது. பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறையும், அதைத் தொடர்ந்து அவர்கள் தற்கொலை செய்துகொள்வதுமான செய்தியைக் கேள்விப்படும் போது உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் அவமானமாக இருக்கிறது.

அறத்தையும் பண்பாட்டையும் அதிகம் பேசும் ஒரு சமூகத்தில், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னேறிய ஒரு நாட்டில், அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ந்த காலகட்டத்தில், இப்படிப்பட்ட கேவலமான, அருவருப்பான செயல்களும் நடக்கத்தான் செய்கின்றன என்பது வெட்கித் தலைகுனிய வைக்கிறது. இவற்றைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது! விட்றாதீங்கப்பா என்று அந்தக் குழந்தைகள் கதறுவது என் மனதிற்குள் ஒலிக்கிறது.

பள்ளிகளில், கல்லூரிகளில், பணிபுரியும் இடங்களில், பொது வெளிகளில் பெண்களும், குழந்தைகளும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதில் சில சம்பவங்கள்தான் வெளியில் வருகிறது. மற்றவை அப்படியே மறைக்கப்படுகிறது.

அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னால் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு படத்தில், ‘மனசாட்சி உறங்கும் சமயம் பார்த்துத்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது’ என்று எழுதினார். அப்படி மனசாட்சியற்ற மனிதர்களால் பெண் பிள்ளைகள் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்படும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை நாம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பற்றிப் பேசுவதில் எந்தப் பொருளும் இல்லை.

சக உயிராகப் பெண்ணைப் பார்க்கும் எண்ணம் தோன்றாத வரை இதனைத் தடுக்க முடியாது. உடல் ரீதியாக, ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகச் செய்யப்படும் வெளிப்படையான பாலியல் சீண்டல்களுக்கு எதிராக எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு இத்தகைய நபர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று நான் இந்த நேரத்தில் உறுதி அளிக்கிறேன். இப்படியான பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் பெண்கள், குழந்தைகள் அதைப்பற்றி வெளிப்படையாகப் புகார் தருவதற்கு முன் வர வேண்டும்.

பள்ளியின் ஆசிரியர்களிடம், தலைமை ஆசிரியரிடம், பெற்றோர்களிடம், சக அதிகாரிகளிடம், நிருவாகத்திடம் புகார்களைத் தர வேண்டும். அந்தப் புகார் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களும் தயங்கக் கூடாது.

புகாரை வாங்கினால் பள்ளியின் பெயர் கெட்டுப்போகும் என்று பள்ளி நிருவாகமும், தனது மகளுக்கு நடந்ததை வெளியில் சொன்னால் ஊரார் தவறாகப் பேசுவார்கள் என்று பெற்றோரும் நினைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அது உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகமாக ஆகிவிடும். பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படும் பெண், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார். உடல் வலியோடு, உள்ளத்து வலியும் ஏற்படுகிறது. அவமானம் அடைகிறார். ஊக்கம் குறைகிறது, நம்பிக்கை தளர்ந்து போகிறது, சக மனிதர்கள் மீதே வெறுப்பு வளர்கிறது, ஆண்கள் மீதே கோபம் அதிகம் ஆகிறது. கல்வியிலோ வேலையிலோ கவனம் செலுத்த முடியாதவராக ஆகிறார். அந்தப் பெண்ணின் அனைத்துச் செயல்பாடுகளுமே இதனால் தடைப்படுகிறது. அவரது எதிர்காலமே கேள்விக்குறியாகிறது.

இத்தகைய சரிவுகளிலிருந்து பெண் குலத்தைக் காக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது

இதை மற்ற அனைத்துப் பிரச்சினைகளையும் விட மிக முக்கியமான பிரச்சினையாகத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. பாலியல் தொல்லைகள், சீண்டல்கள் குறித்தப் புகார்கள் வந்ததும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீங்களே கடந்த சில நாட்களாக அதனைச் செய்திகளில் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுத்தர இந்த அரசு தயங்காது. **குழந்தைகளுக்கான உதவி எண் 1098 அரசின் நடைமுறையில்**

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 27.11.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012இன் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில், குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தச் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தினார்.*

உள்ளது. எந்தக் குழந்தையாக இருந்தாலும் தனக்கு ஒரு பாதிப்பு என்றால் 1098 என்ற எண்ணுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். இரகசியம் காத்து, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

அதேபோல் சென்னை டிபிஐ அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கல்வித் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் உளவியல் பயிற்சி பெற்ற நிபுணர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். பாலியல் வன்முறை தொடர்பாக மாணவர்களிடம் இருந்து பெறப்படும் புகார்களுக்கு, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

குழந்தைகளின் பாதுகாப்பினைப் பள்ளிகள் உறுதி செய்ய சுய தணிக்கைப் பட்டியல் பள்ளிக் கல்வித்துறையால் கடைப்பிடிக்கப்படுகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு தலைமையகத்தில் இணையதளக் குற்றப்பிரிவு (சைபர் கிரைம்) காவல்நிலையம் அமைக்கப்பட்டுக் காவல் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதியம் ஒன்று செயல்படுகிறது.

போக்சோ சிறப்பு நீதிமன்றங்கள் முறையாகச் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 16 மாவட்டங்களில் போக்சோ நீதிமன்றங்கள் அமைந்துள்ளது. மேலும், 4 மாவட்டங்களில் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்து வழக்குகளையும் விரைந்து முடித்து உண்மைக் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத்தர உத்தரவிட்டுள்ளேன்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

குழந்தைப் பாதுகாப்புக் குறித்துச் சிறப்பாக செயல்படுவதற்கு, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு மாநில குழந்தை பயிற்சி மையம் யுனிசெப் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

குழந்தைகள் பாதுகாப்புக் குறித்த பயிற்சி ஆசிரியர்களுக்கும் காவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் அனைத்துப் பாடப்புத்தகங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பிற்கான மாணவர் உதவி எண்.14417 குறித்த விழிப்புணர்வுச் செய்தி வரும் கல்வியாண்டிலிருந்து அச்சிடப்பட்டு வழங்கப்படும்.

சில நாட்களுக்கு முன்னால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், குழந்தைகளுக்கான கொள்கை – 2021 என்ற கொள்கைக் குறிப்பேட்டைத் தலைமைச் செயலகத்தில் நான் வெளியிட்டேன்.

ஒவ்வொரு குழந்தையையும் அனைத்துவிதமான சுரண்டல்களிலிருந்தும், வன்முறைகளில் இருந்தும் காக்கும் அறிக்கையாக அது அமைந்துள்ளது. குறிப்பாக குழந்தைகளுக்காகப் பாதுகாப்பு அதில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசு காட்டும் அதே அக்கறையைப் பள்ளி, கல்லூரி நிருவாகங்களும் காட்ட வேண்டும். தங்களிடம் பயிலும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பை அவர்கள் உறுதி செய்தாக வேண்டும்.

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளோடு எளிமையாகவும், இனிமையாகவும் பழக வேண்டும். ஒரே வீட்டுக்குள் தனித்தனித் தீவுகளாக வாழ வேண்டாம். அன்புக் குழந்தைகளே, உங்களை அன்போடும், பாதுகாப்போடும் வளர்க்கும் கடமை எங்களுக்கு இருக்கிறது. ஒரு முதலமைச்சராக மட்டுமில்லாமல் ஒரு தந்தையாகவும் இருந்து உங்களைக் காக்கும் பொறுப்பு எனக்கு இருக்கிறது. தயவுசெய்து யாரும் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பெண் குழந்தை தற்கொலை செய்து கொள்கிறாள் என்றால் அவள் இந்தச் சமூகம் மொத்தத்தையும் குற்றம் சாட்டிவிட்டு மரணம் அடைகிறாள் என்று பொருள். வாழ்ந்துதான் போராட வேண்டும். வாழ்ந்து காட்டுவதன் மூலமாகத்தான் உங்களிடம் அத்துமீறிய நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தர முடியும். எனவே, யாரும் தற்கொலை செய்துகொள்ள வேண்டாம் என்று ஒரு தந்தையாக, உங்கள் சகோதரனாக, உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இருந்து கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் இருக்கிறோம்! நான் இருக்கிறேன்! அரசாங்கம் இருக்கிறது! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், குழந்தைகள் மீதான குற்ற நடவடிக்கை தடுப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ரூ.40 இலட்சம் மதிப்பிலான ஒளி, ஒலி கட்டமைப்புடன் கூடிய 2 பல்நோக்குப் பயன்பாட்டு விழிப்புணர்வு வாகனங்களைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

CII CONNECT 2021
20th EDITION

தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலம் தமிழ்நாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னையில் 26.11.2021 அன்று, இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையும், தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனமும், இந்தியத் தொழில் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்திற்கான சர்வதேசக் கருத்தரங்கு (CII CONNECT 2021) மாநாட்டில், தகவல் தொழில்நுட்பத்துறை கண்காட்சியைத் திறந்துவைத்து, தமிழ்நாடு தரவு மையக் கொள்கையை வெளியிட்டு, கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற தொழில்நுட்பத் திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி, சிறந்த தொழில் நிறுவனங்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது உள்ளிட்ட விருதுகளையும் வழங்கி ஆற்றிய உரை :

தகவல் தொழில்நுட்ப இரண்டு நாள் மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் அவர்களே, தகவல் தொழில்நுட்பத்துறையின் செயலாளர் டாக்டர் நீரஜ் மிட்டல் அவர்களே, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (STPI) இயக்குநர் டாக்டர் சஞ்சய் தியாகி அவர்களே, ‘சைன்ட்’ துணைத் தலைவர் B.V.R. மோகன் ரெட்டி அவர்களே, அவர் இங்கே உரையாற்றுகின்றபோது மூன்று ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். நிச்சயமாக இந்த அரசு அதுகுறித்துப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற அந்த உறுதியை முன்கூட்டியே அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனெக்ட் தலைவர் திரு. ஜோஷ் ஃபோல்கர் அவர்களே, இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தமிழகத் தலைவர் டாக்டர் எஸ். சந்திரகுமார் அவர்களே, எல்காட் மேலாண்மை இயக்குநர் திரு. அஜய் யாதவ் I.A.S., அவர்களே, இந்தியத் தொழில் கூட்டமைப்பின் உறுப்பினர்களே, துணைத் தூதர்களே, சிறப்பு அழைப்பாளர்களே, வருகை தந்திருக்கக்கூடிய நண்பர்களே, சகோதர சகோதரிகளே, தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே, அன்பர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்றைய உலகத்தையே ஆட்சி செய்வது ஒரெழுத்து மந்திரம்தான். அதுதான் ‘e’ என்பதாகும். அந்த ஒரெழுத்து மந்திரத்துக்காக நடைபெறக்கூடிய மாநாடு இந்த மாநாடு. எது இல்லாமல் வேண்டுமானாலும் வாழ்ந்துவிடலாம். ஆனால் இண்டர்நெட் இல்லாமல் யாரும் வாழ முடியாது, இருக்க முடியாது என்ற ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. தொழில்நுட்பத்தின் கட்டுப்பாட்டுக்குள் நாம் வந்துவிட்டோம்.

கல்வித்துறை, போக்குவரத்துத்துறை, பொறியியல் துறை, மருத்துவத்துறை, பொழுதுபோக்குத்துறை, வங்கித்துறை, பாதுகாப்புத்துறை, இப்படி எந்தத் துறையாக இருந்தாலும் அது தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்தே இயங்க வேண்டும் என்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதை ஒரு துறையின் மாநாடாக நாம் பார்க்க முடியாது. அனைத்துத் துறைகளினுடைய மாநாடாக இதை நாம் கருதிட வேண்டும்.

இந்த மாநாட்டைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறையின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த இரண்டு நாள் மாநாட்டை ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட

பார்வையாளர்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கருத்துகளை வழங்க இருக்கிறார்கள். உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த நிறுவனங்கள் இந்த இரண்டு நாள் கண்காட்சியில் பங்கெடுத்திருக்கின்றன.

கருத்துரை வழங்கவிருக்கக்கூடிய முக்கியமான பேச்சாளர்களின் பட்டியலை நான் பார்த்தேன். இவை அனைத்தையும் பார்க்கும்போது, எனக்கு 1996ஆம் ஆண்டுதான் நினைவுக்கு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் என்பது அரும்பாக வளர்ந்த காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் அன்றைக்கு அந்தப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அப்போது நான் சென்னை மாநகரத்தினுடைய மேயராக இருந்தேன். தகவல் தொழில்நுட்பத்தைக் கழக ஆட்சியின் மிக முக்கியக் குறிக்கோளாக மாற்றி, 1996ஆம் ஆண்டு ஆட்சியின்போது தகவல் தொழில்நுட்பப் புரட்சியைச் செய்தவர்தான் அன்றைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். IT Professionals என்று சொல்லக்கூடிய தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏராளமாக உருவாகக் காரணமாக இருந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நாடி வந்து தேர்வுசெய்யக்கூடிய முதல் நகரமாகச் சென்னையை மாற்றிக் காட்டிய ஆட்சி தி.மு.க. ஆட்சி. தகவல் தொழில்நுட்பத்துக்காக, தனித் துறையை 1998ஆம் ஆண்டு உருவாக்கிய ஆட்சியும் தி.மு.க. ஆட்சிதான்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், IT Task Force என்ற அமைப்பு அன்று உருவாக்கப்பட்டது. அரசுத் துறையைக் கணினிமயமாக்கினார். பள்ளிக்கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்தார்.

இந்தச் சாதனைகளுக்கான சாட்சிதான் தரமணியில் கம்பீரமாகக் காட்சியளிக்கக்கூடிய டைடல் பார்க் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. 24 ஆண்டுகளுக்கு முன்னால் ரூ.340 கோடி மதிப்பீட்டில் அந்த டைடல் பார்க் கட்டப்பட்டது. சென்னைத் தரமணி முதல் மாமல்லபுரம் வரை இருக்கக்கூடிய சாலையை ஐ.டி. சூப்பர் ஹைவே சாலையாக மாற்றி அமைத்த ஆட்சியும் கலைஞர் தலைமையிலிருந்த தி.மு.க. ஆட்சிதான்.

தமிழ்நெட் என்ற இணையக் கருத்தரங்க மாநாட்டினை 1999ஆம் ஆண்டு நடத்தியிருக்கிறோம். உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை அமைத்தோம். அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி மையம் தொடங்கினோம். 1996க்கு முன்னால் தமிழ்நாட்டிலிருந்த மென்பொருள் நிறுவனங்களின் எண்ணிக்கை 34, தி.மு.க. அரசின் ஐந்தாண்டுக் காலத்தில் அதன் எண்ணிக்கை 666ஆக மாறியது. இத்தகைய சாதனையைத் தமிழ்நாட்டில் நிகழ்த்திக் காட்டிய ஆட்சிதான் கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி.

இத்தகைய மாநாட்டை நடத்துகிறோம் என்றால், அதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னால் அடித்தளம் அமைத்த ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி. அதனால்தான் பெருமிதமாக இருக்கிறது, பூரிப்பாக இருக்கிறது, மகிழ்ச்சியாக இருக்கிறது என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

இது தகவல் தொழில்நுட்ப யுகம் ஆகும். கண்டுபிடிப்புகளின் காலமாகும். தகவல் தொழில்நுட்பம்தான் இன்று காலத்தைச் சுழல வைத்துக்கொண்டு இருக்கிறது. கணினி அறிவியலும், தகவல் தொழில்நுட்பமும் இல்லாமல் எதுவும் இல்லை என்ற ஒரு சூழல் உருவாகி இருக்கிறது. ஒரு மாநிலத்துக்கு மிகப்பெரிய முன்னேற்றங்களையும் முதலீடுகளையும் கொண்டுவருவதில் தகவல் தொழில்நுட்பத்துறைதான் முன்னணி வகிக்கிறது. தேவையையும், தொலைநோக்குப் பார்வையையும், அதன் மூலமாக வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் அதிகரிப்பதாக இந்த மாநாடு அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

இந்தத் துறையில் புதிய முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். பயன்படுத்தப்படக்கூடிய தொழில்நுட்பங்கள் புதியதாக மாற வேண்டும். புதிய திறன்கள் உருவாக வேண்டும். அந்த அடிப்படையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகி, தனிமனிதர்களையும் நிறுவனங்களையும், அதன் மூலமாக மாநிலத்தையும், நாட்டையும் பரவலாக வளர்ப்பதற்கு அது அமைய வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள மனித வளத்தை, அறிவுச் சக்தியாகப் பயன்படுத்திக்கொள்ளத்தக்க உங்களது நிறுவனங்களை வடிவமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் என்பதோடு நிற்காமல், அறிவாளிகளும் திறமைசாலிகளுமே இதற்குத் தேவை. அத்தகைய திறமைசாலியான, கூர்மையான அறிவுத்திறன் படைத்த இளைஞர்களாகத் தமிழ்நாட்டு இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூடுதலான திறன் பயிற்சிகள் கொடுத்து அவர்களை உங்கள் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. உலக அளவில் கவனத்தை ஈர்க்கக்கூடிய மாநிலமாகவும் தமிழ்நாடு இருக்கிறது.

CII CONNECT 2021 20th EDITION

❖ தகவல் தொழில் வன்பொருள் உற்பத்தி, ❖ மென்பொருள் உற்பத்தி, ❖ செல்போன் உற்பத்தி, ❖ அடிப்படைத் தேவையான மின்னணுவியல், ❖ கணினி உற்பத்தி, ❖ கணினித் தயாரிப்புக்குத் தேவையான பொருட்கள்

– என அனைத்திலும் முழுமையான அடித்தளம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. நாட்டிலேயே மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் முக்கிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இந்தியாவின் மொத்த எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியில் 16 விழுக்காட்டைச் சார்ந்தது தமிழ்நாடு. கணினி, மின்னணுவியல் மற்றும் ஆப்டிகல் தயாரிப்புகள் தயாரிப்பில் இந்தியாவில் 2ஆவது இடத்தில் இருக்கிறோம். எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் இந்தியாவில் 3ஆவது இடத்தில் இருக்கிறோம். உற்பத்தித் திறனின் வலுவான முதுகெலும்பில் தமிழ்நாடு இந்தியாவின் மின்னணு உற்பத்திச் சேவை மையமாகவும் உருவெடுத்திருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி, முதல் இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

டேட்டா சென்டர்களை அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. டேட்டா சென்டர்களில் முதலீடுகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு கொள்கை அறிக்கையை நாம் வெளியிட்டிருக்கிறோம். அதேபோல், தரவுகளை அடிப்படையாகக்கொண்ட கொள்கை வடிவமைத்தலில், மாநிலத்தின் திறனை மேம்படுத்தக்கூடிய நோக்கத்தோடு, சென்னைக் கணிதவியல் கழகத்துடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையொப்பம் இட்டுள்ளதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வளர்ந்து வரும் தொழிற்துறை மற்றும் நகர்ப்புற நடவடிக்கைகளுக்கு ஏற்ப மாநிலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்த, புறவழிச்சாலைகள், சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம், புதிய விமான நிலையம் போன்ற குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்புத் திட்டங்களை எங்கள் அரசு முன்னெடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத்துறைகளில் வளர்ந்து வரக்கூடிய தொழில்நுட்பங்களைத் தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், தொழில்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

வேளாண்மை, உற்பத்தி, சேவைத்துறைகள் என ஒவ்வொரு துறையிலும் தொழில்நுட்பத்தின் தேவைகள், தொழில்நுட்பத்தின் பங்கு ஆகியவை அதிகம் இருக்கும்; இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

நவீன ஒற்றைச் சாளர முறை மூலமாக எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்த எங்கள் அரசு பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து ஊராட்சிகளிலும் அகன்ற அலைவரிசை இணைய வசதியை ஏற்படுத்துவதற்காக, இந்திய அரசின் பாரத்நெட் திட்டம், மாநிலத்தின் 12,525 கிராம ஊராட்சிகளையும் குறைந்தபட்சம் 1 GBPS அதிவேக இணைப்புடன் இணைக்கச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், அனைத்துக் கிராம ஊராட்சிகளுக்கும் தரமான டிஜிட்டல் சேவைகள், இணையவழிக் கல்வி, டெலிமெடிசின் மற்றும் டிரிபிள்–ப்ளே சேவைகள் கிடைக்கும். அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அதிவேக இணையச் சேவைகள் கிடைக்கும். இதன்மூலமாக, கிராமப்புறங்கள் வளர்ச்சி அடையும். எங்களின் புதிய கொள்கைகள் மற்றும் முன் முயற்சிகள் தமிழ்நாட்டைச் சர்வதேசத் தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றும் என்று நான் நம்புகிறேன். மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சிக்குத் தடையாக உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் தொழிற்துறையுடன் இணைந்து செயல்படுவோம். தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறையானது நமது இலட்சியமான 1 டிரில்லியன் டாலர் இலக்கை அடைய உதவும் என்பதையும், இந்த முன்னேற்றத்தில் கனெக்ட் மிகவும் வலுவான பங்கை வகிக்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். CONNECT 2021 மாபெரும் வெற்றியடைய வாழ்த்தி விடைபெறுகிறேன்.

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

நவம்பர் 26 : இந்திய அரசமைப்புச் சட்ட நாள்

இந்தியாவை உலக நாடுகளில் முதன்மை நாடாக்கிடச் சபதம் எடுப்போம்



இந்திய அரசமைப்புச்சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்ட நாளை (26.11.2021) முன்னிட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1949ஆம் ஆண்டு இதே நாளில் நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசமைப்புச் சட்டம் நம் உரிமைகளையும், கடமைகளையும் உள்ளடக்கியிருப்பதோடு மட்டுமின்றி, நம் ஜனநாயகத்தின் அனைத்துக் கட்டமைப்புகளையும் கட்டிக் காத்து வருகிறது.

இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்தியக் குடியரசின் அரசமைப்புச் சட்டத்தில் சமூகநீதி, கருத்துச் சுதந்திரம், சகோதரத்துவம் உள்ளிட்ட அனைத்தும் பக்கத்துக்குப் பக்கம் மிளிருகிறது. உரிமைகள் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல் வந்துகொண்டிருக்கிறது எத்தனையோ அரசமைப்புச் சட்டங்கள் உலகளவிலிருந்தாலும், எழுத்துப்பூர்வமான நம் சட்டம், உலகப் புகழ் பெற்றது! அப்படியொரு அரசமைப்புச் சட்டத்தைத் தந்த அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்கள். இந்தியக் குடிமக்கள் அனைவரும் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இச்சட்டத்தை உருவாக்கப் பாடுபட்டதையும், தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து நிறைவேற்றித் தந்துள்ள ஒன்றிய, மாநில அரசு உறவுகள், அதிகாரங்கள், நீதித்துறை சுதந்திரம், சட்டமன்ற, நாடாளுமன்றங்களின் இறையாண்மை, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவரின் செயல்பாடுகள் என்பதோடு, அனைத்திற்கும் முத்தாய்ப்பான "அடிப்படை உரிமைகள்" (Fundamental Rights) "அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்" (Directive Principles of State Policy) "அடிப்படைக் கடமைகள்" (Constitutional Duties) அனைத்தும் நமக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தந்ததவை. இன்றளவும் இந்தியாவைக் கட்டி ஆளும் இந்த அரசமைப்புச் சட்டம்தான், மாநிலத்தில் அன்னைத் தமிழுக்கு ஆட்சி மொழி உரிமையும் அளித்திருக்கிறது. எமக்கு அளித்துள்ள எண்ணிலடங்கா உரிமைகளை நினைத்துப் பார்த்து, எத்தகைய சூழலிலும் அரசமைப்புச் சட்டம் விரும்பிய ஜனநாயகத்தைக் காப்பாற்றிட நாம் அனைவரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டிய தருணமே இந்த அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளாகும்.

சிறப்பு வாய்ந்த இந்த அரசமைப்புச் சட்டத்தின் திறவுகோல்தான் முகவுரை என்றழைக்கப்படும் "Preamble" என்பதை அரசியல் சட்ட நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்று என்று உச்சநீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட இந்த முகவுரையைக் குடிமக்கள் மட்டுமல்ல, ஆட்சியில் இருப்போரும் புடம் போட்ட தங்கம் போல் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருவூலமாகப் பார்க்க வேண்டும். அந்த முகவுரை அடங்கிய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான் நவம்பர் 26ஆம் தேதி. நம் அரசியல் சட்டம் கண்ட இந்தியாவை உலக நாடுகளில் முதன்மை நாடாக்கிடச் சபதம் எடுப்போம்.

இது நம் அரசமைப்புச் சட்டம். அதனை வெளிப்படுத்தவே, அரசியல் சட்டத்தின் முதல் வரியே "We the people of India" என்ற முழக்கத்தை முன் வைக்கிறது. மக்கள் அனைவருக்கும் அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தின நல்வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
வாழ்த்துச் செய்தி

12,959 திருக்கோயில்களில் ஒரு காலப் பூஜைக்காக ரூ.129.59 கோடி வைப்பு நிதி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் போதிய வருமானம் இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒருகாலப் பூஜை நடைபெறுவதற்கு ஏதுவாக வைப்பு நிதியினை ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, மொத்தம் ரூ.129.59 கோடிக்கான காசோலையினைத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.

போதிய வருமானம் இல்லாத திருக்கோயில்களில் ஒரு காலப் பூஜையாவது நடைபெறுவதற்கு ஏதுவாக பெரிய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதியுதவி செய்யும் விதமாக, ஆலய மேம்பாட்டு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியின்கீழ் ரூ.5 கோடி வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையிலிருந்து திருக்கோயில்களுக்கு ஒரு காலப் பூஜை நடைபெறுவதற்கு நிதி உதவி வழங்கிட வழிவகை செய்யப்பட்டது.

தற்போது, ஒருகாலப் பூஜை நடைபெறும் 12,959 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதியாக ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி, மொத்தம் ரூ.129.59 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக வழங்கினார்கள். இதன்மூலம் திருக்கோயில்களுக்குக் கூடுதலாக வட்டித்தொகை கிடைக்கப்பெறுவதால், பூஜை பொருட்களைத் தேவையான அளவு வாங்கிப் பூஜை செய்வதில் நிறைவான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, ஒருகாலப் பூஜை மேற்கொள்ளும் திருக்கோயில்களைச் சேர்ந்த அர்ச்சகர்கள், பட்டாச்சார்யர்கள், பூசாரிகள் ஆகியோர் கூடுதலாக நிதி வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

வீரமரணமடைந்த மூன்று இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.20 இலட்சம் நிவாரண நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இராணுவத்தில் பணியாற்றி வீரமரணமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று போர் வீரர்களின் வாரிசுதாரர்களை நேரில் அழைத்து ஆறுதல் தெரிவித்து, கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து அவர்களது குடும்பத்தினருக்குத் தலா ரூ.20 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

இராணுவத்தில் பணியாற்றி வீரமரணமடைந்த காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கத்தைச் சேர்ந்த படைவீரர் கே.ஏகாம்பரம் அவர்களுடைய மனைவி திருமதி இ.குமாரி, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தைச் சேர்ந்த படைவீரர் கே. கருப்பசாமி அவர்களுடைய மனைவி திருமதி ஆர்.தமயந்தி, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த படைவீரர் பி.பழனிகுமார் அவர்களுடைய மனைவி திருமதி ஜி.பாண்டியம்மாள் ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.20 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும், லடாக் – காரகோரம் கணவாயிலிருந்து மலரி வரை (ஜோஷிமத், உத்ரகாண்ட் மாநிலம்) பனிச்சறுக்கு மூலம் இந்திய இராணுவ வீரர்கள் சென்ற குழுவில் பங்கேற்ற முதல் தமிழ்நாட்டு இராணுவ வீரரான திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கேப்டன் திரு. எஸ்.குபேர காந்திராஜ் அவர்களின் (IC-80931P) சாதனையைக் கௌரவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதியக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில், கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய அலுவலகக் கட்டடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

காட்பாடியில் பொதுப்பணித்துறை கட்டடம் மற்றும் பராமரிப்புக் கோட்ட அலுவலகக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை சார்பில் வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் மற்றும் உபகோட்ட அலுவலகக் கட்டடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில்

மூன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய மூன்று புதிய கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்தார்.

2021–2022ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, கொளத்தூர்; நாமக்கல் மாவட்டம். திருச்செங்கோடு; திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம்; தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஆகிய நான்கு இடங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் B.Com, BBA, BCA, B.Sc. Computer Science ஆகிய நான்கு பாடப் பிரிவுகளுடன் கல்லூரிகள் தொடங்கிட உயர் கல்வித்துறையால் அனுமதி அளிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது.

முதற்கட்டமாகச் சென்னை, கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 02.11.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின் சார்பாக ஒட்டன்சத்திரம், சின்னயகவுண்டன்வலசில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின்கீழ் இணைக்கப்பட்டு அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சமய வகுப்புகளுடன் தற்காலிகக் கட்டடத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்கீழ் இணைக்கப்பட்ட விளாத்திக்குளம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் நிருவாகத்தின் சார்பாகப் பெரியார் பல்கலைக்கழகத்தின்கீழ் இணைக்கப்பட்ட அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுப்புளியம்பட்டி கிராமத்தில் தற்காலிகக் கட்டடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெறுவதற்காகவும், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இக்கல்லூரிகள் பெரிதும் உதவியாக அமையும்.

டிசம்பர் 1 :

எச்.ஐ.வி. உள்ளோரை அன்பால் அரவணைப்போம் ஆதரவுக் கரம் நீட்டுவோம்

தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. என்கின்ற கொடுந்தொற்றுக் கண்டறியப்பட்டு 35 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

நம் மக்களிடம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை விளைவிக்கும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டின் மையக்கருத்து எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களுக்கு ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டுவந்து, அத்துடன் எச்.ஐ.வி./எய்ட்ஸ், கொரோனா பெருந்தொற்றுக்கு முடிவு கட்டுவோம். 'End Inequalities, End AIDS, End Pandemics' என்பதேயாகும்.

தமிழ்நாட்டில் இத்தொற்றினைக் கண்டறிய 2,953 நம்பிக்கை மையங்கள் செயல்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு செலவில் மருத்துவச் சிகிச்சை அளிக்க 55 கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களும், 174 இணைகூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களும் செயல்படுகின்றன. தொற்றுள்ள பெற்றோரின் கருவிலுள்ள குழந்தைகளுக்கு நோய் தொற்றாமல் தடுக்க அனைத்துப் பெண்களுக்கும் சிறப்பு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்டந்தோறும் அரசு மருத்துவமனைகளில் செயல்படும் நம்பிக்கை மையம், கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்கள் ஆகியவற்றின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு, கட்டுப்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றைச் செயல்படுத்த, தொண்டு நிறுவனங்கள், கூட்டமைப்புகள் போன்ற தன்னலமற்றோரின் உண்மையான ஈடுபாடும் மாநில அரசுடன் இணைந்து ஒத்தாசை புரிகிறது. இதன் காரணமாக, 2010, 2011ஆம் ஆண்டு 0.38 விழுக்காடாக இருந்த தொற்று, இப்போது 0.18 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒதுக்கப்படக்கூடாது என்கிற உயரிய நோக்கில், அத்தொற்றால் பாதிக்கப்பட்ட, ஆதரவற்றக் குழந்தைகளுக்கு உதவி செய்ய ரூ.25 கோடி வைப்பு நிதியுடன் தமிழ்நாடு அரசின் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்பு நிதியிலிருந்து வருகிற வட்டித் தொகையால் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாகும். இத்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பணமின்றி மருத்துவமனைக்குப் பயணம் செய்யப் பேருந்து அட்டை வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட இளம் விதவைகளுக்கு வயது வரம்பைத் தளர்த்தி மாத ஓய்வூதியம் தரப்படுகிறது.

நம் தாய்த் திருநாட்டின் 75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு 9ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை விதைக்கும் விதமாக, தன்னார்வக் குருதிக்கொடையை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் போட்டியும், இணையதள வினாடி–வினாப் போட்டிகளும் 'புதிய இந்தியா @ 75' என்கிற தலைப்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தொற்றுக் குறித்த விழிப்புணர்வை முழுமையாக மக்களிடம் ஏற்படுத்தித் தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்று இல்லாத நிலையை உருவாக்கிட உறுதியேற்போம். தொற்றுடன் வாழ்பவரை ஒதுக்கி வைக்காமல் உள்ளன்போடு நடத்தி அன்பையும், ஆதரவையும் அவர்களுக்கு அளித்து, நம்மில் ஒருவராக வாழ வைப்போம் என்றும் உறுதிப் பூண்டிட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

'எச்.ஐ.வி. உள்ளோரை அன்பால் அரவணைப்போம்; ஆதரவுக் கரம் நீட்டுவோம்'.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் "உலக எய்ட்ஸ் நாள்" செய்தி.

வீர்சக்ரா விருதாளருக்குப் பாராட்டு

‘என் வயிறு
புலி தங்கியிருந்த குகை.
என் மகன்
போர்க்களத்தில்தான் இருப்பான்’
என்று புறநானூறு பாடிய
தமிழ் மண்ணின்
வீரம் செறிந்த மகனாகச்
செருக்களம் சந்தித்துத் தாயகம் காத்த
அபிநந்தன் வர்த்தமான் அவர்கள்
வீர்சக்ரா விருது பெற்றதற்குப்
பெருமகிழ்ச்சியோடு
வாழ்த்துகிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
01.12.2021 அன்று சென்னை,
தலைமைச் செயலகத்தில்,
ஹவில்தார் பழனி அவர்கள்
கல்வான் பள்ளத்தாக்கில்
வீரமரணம் அடைந்து,
வீர்சக்ரா விருது பெற்றமைக்காக
அவரது மனைவி
திருமதி வானதி தேவி பழனி
மற்றும் குடும்பத்தினர் சந்தித்தனர்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையை வளமாக்குவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவை புரிந்தவர்களுக்கு மாநில விருதுகளை வழங்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இத்தருணத்தில் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்கள் முன்னேற்றத்திற்குத் தனியாகத் துறையை உருவாக்கி, நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு பதவியேற்றது முதல் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்புத் தொகையான மாதம் ரூ.1,500யை, காத்திருப்போர் பட்டியலிலுள்ள 9,173 தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது; மாற்றுத்திறனாளி மற்றும் அவருடன் செல்லும் ஒரு உதவியாளர் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது; மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென நமது நாட்டில் மட்டுமின்றி, உலகிலேயே முன்மாதிரி திட்டமாக “RIGHTS” என்ற திட்டத்தை ரூ.1,709 கோடி செலவில் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2021 அன்று தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்படவுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாகத் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் விருது வழங்கப்படவுள்ளது.

இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாற்றுத்திறனாளிகள் சிறப்பாகச் செயல் புரிந்தமைக்காக மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து விருது பெறுகின்றனர்.

மாற்றுத்திறனாளிகளின் உயர்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்திப் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து அவர்களின் வாழ்வு செழிக்க இந்த அரசு முனைப்புடன் செயல்படும்.

பல்வேறு வகையான குறைபாடுகள் உடைய மாற்றுத்திறனாளிகளின் ஆக்கப்பூர்வமான திறன்களைக் கண்டறிந்து அதனை வெளிப்படுத்தி, இச்சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் உதவ நாம் வாய்ப்பு வழங்குவோம்! அவர்களின் வாழ்க்கையை வளமாக்குவோம்!!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் வாழ்த்துச் செய்தி
02.12.2021

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர்
திரு. **ராம்நாத் கோவிந்த்** அவர்களிடமிருந்து
மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதாஜீவன் அவர்கள்,
இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த சேவையில்
தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டமைக்கான விருதினைப்
புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில்
பெற்றுக்கொண்டார் – 03.12.2021

திருவண்ணாமலையில் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவை புரிந்தவர்களுக்கு மாநில விருதுகளை வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம், மல்லவாடியில் ரூ.1.64 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு மறுவாழ்வு இல்ல புதிய கட்டடம் மற்றும் பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையத்தையும் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்துவைத்து, அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் பயிற்சி முடித்த பார்வைக் குறைவுடையோருக்குச் சிறப்பு நேர்வாக நூல் கட்டுநர் பணியிடத்திற்கு 17 நபர்களுக்கும், நூல் கட்டும் உதவியாளர் பணியிடத்திற்கு 14 நபர்களுக்கும் என மொத்தம் 31 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறந்த முறையில் சேவை புரிந்ததற்காகச் சிறந்த சமூகப் பணியாளர் விருதினைச் செல்வி ஸ்மிதா சாந்தகுமாரி சதாசிவன் அவர்களுக்கும், சிறந்த நிறுவனத்திற்கான விருதினை விருதுநகர் மாவட்டம் – சப்தகிரி மறுவாழ்வு அறக்கட்டளைக்கும், சிறந்த ஆசிரியருக்கான

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் ,
மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள்
மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்ற விருதினைக்
காண்பித்து வாழ்த்துப் பெற்றார். 06.12.2021

விருதினைச் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்குக் கற்பித்ததற்காகத் திருமதி ரா.ஜெயந்தி அவர்களுக்கும், பார்வைக் குறைவுடையோருக்குக் கற்பித்ததற்காகத் திருமதி ந.மாரியம்மாள் அவர்களுக்கும், சிறந்த பணியாளர்/ சுயதொழில் புரிபவர் விருதினை திரு. சீ.மாதேஸ்வரன், திருமதி மு.ரு.ரேவதி மெய்யம்மை, முனைவர் ர.இராஜா, திரு. வே.தங்ககுமார், திரு. ஜோயல் ஷிபு வர்க்கி, திரு. சு.அப்துல்லத்தீப், செல்வி அனுராதா, செல்வி சே.சரண்யா, திரு. ஜீ.கணேஷ் குமார் ஆகியோருக்கும், ஆரம்பநிலைப் பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதினைத் திருமதி தே. முத்துச்செல்வி, திருமதி கா.சர்மிளா ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஓட்டுநருக்கான விருதினை திரு. ஏ.ரதீஷ் அவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய நடத்துநருக்கான விருதினை திரு.சி.திருவரங்கம் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, பாராட்டினார். மேற்காணும் விருது பெறும் நபர்கள் / நிறுவனங்களுக்குத் தலா 10 கிராம் எடையுள்ள 22 கேரட் தங்கப்பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைத் தலைமைச் செயலகத்தில்,
சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து
மாற்றுத்திறனாளிகள் உரிமை ஏற்றத்திற்கான தேசிய விருது பெற்றத் தமிழகத்தைச் சேர்ந்த
6 மாற்றுத்திறனாளிகள் சந்தித்து, விருதுகளைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர் – 08.12.2021

முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்டத் திட்டத்தின்கீழ் ரூ.225 மானிய விலையில் மாடித் தோட்டத் தளைகளையும், ஊரகப்பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக ரூ.15க்கு 12 வகை காய்கறி விதைத் தளைகளையும், நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த ஊட்டச் சத்துத்தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.25க்கு 8 செடிகள் அடங்கிய ஊட்டச்சத்துத் தளைகளையும் பயனாளிகளுக்கு வழங்கித் தொடங்கி வைத்தார்.

வேளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழக வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை கடந்த 14.08.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தில் அன்றாட தேவைக்கான நஞ்சில்லா காய்கறிகளை மகளிர், தங்களது இல்லங்களிலேயே உற்பத்தி செய்வதற்கும், குழந்தைகள் தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், ஊரகப்பகுதிகளில் 12 வகை காய்கறி விதைகள் அடங்கிய 2 இலட்சம் விதைத்தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், நகர்ப்புறங்களில் 6 வகை காய்கறி விதைகள் கொண்ட 1 இலட்சம் மாடித்தோட்டத்தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்துத்தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 8 வகை செடிகள் கொண்ட 2 இலட்சம் ஊட்டச்சத்துத்தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பிலான ஊக்கத்தொகை / இடுபொருட்கள், காய்கறி குறைவாகச் சாகுபடி செய்யக்கூடிய 2 ஆயிரம் கிராமங்களில் 1,250 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளத்தை மேம்படுத்த இடுபொருட்கள், 638 ஹெக்டேர் பரப்பளவில் பந்தல் அமைப்பதற்கான மானியம், 1,000 ஹெக்டேர் பரப்பளவில் கீரை சாகுபடிக்கான மானியம் உள்ளிட்ட ரூ.95 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின்கீழ், ரூ.6.75 கோடி செலவில், நகரப் பகுதிகளில் ரூ.900 மதிப்புடைய 6 வகையான காய்கறி விதைகள், 6 எண்ணிக்கையிலான செடி வளர்க்கும் பைகள், 6 எண்ணிக்கையிலான இரண்டு கிலோ அளவிலான தென்னை நார்கட்டிகள், 400 கிராம் உயிர் உரங்கள், 200 கிராம் உயிரிக் கட்டுப்பாட்டுக் காரணி, 100 மி.லி. இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் சாகுபடி

முறைகளை விளக்கும் கையேடு ஆகியவை அடங்கிய மாடித்தோட்டத் தளைகள் ரூ.225 என்ற மானிய விலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். இத்திட்டத்தின்கீழ், ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு மாடித்தோட்டத் தளைகள் வரை வழங்கப்படும்.

அதேபோன்று, ஊரகப்பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக, ரூ.90 இலட்சம் செலவில் ரூ.15க்கு கத்திரிக்காய், மிளகாய், வெண்டைக்காய், தக்காளி, அவரை, பீர்க்கன், புடலை, பாகல், சுரைக்காய், கொத்தவரை, சாம்பல்பூசணி, கீரைகள் ஆகிய 12 வகை காய்கறி விதைத்தளைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். இக்காய்கறி விதைத்தளையினை இரண்டு தொகுப்புகள் வரை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம்.

நோய்எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மூலிகைச் செடிகள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தியுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளை வளர்த்துப் பயன்பெற, ரூ.1.50 கோடி செலவில், ரூ.25க்கு பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, திப்பிலி, கற்பூரவல்லி, புதினா, சோற்றுக்கற்றாழை ஆகிய 8 செடிகள் அடங்கிய ஊட்டச்சத்துத் தளைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு தொகுப்பு வழங்கப்படும்.

இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் பொதுமக்கள் https://tnhorticulture.tn.gov.in/kit/ என்ற இணையதள வாயிலாக விண்ணப்பித்து, சத்தான காய்கறிகள், பழங்கள் மற்றும் நோய் எதிர்ப்பு மூலிகைகள் உட்கொள்ளும் வாய்ப்பினையும், ஊக்கம் தரும் பொழுதுபோக்கினையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

திருக்குறளை மனப்பாடமாக ஒப்புவிக்கும் சிறுவனுக்குப் பாராட்டு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூரைச் சேர்ந்த 7 வயது சிறுவன் செல்வன் ராகுல் ராமை நேரில் அழைத்து, 1,330 திருக்குறள், ஆத்திச்சூடி, நாலடியார், குறிஞ்சிப்பாட்டு, 200 உலக நாடுகளின் பெயர்கள், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள், பாரதியார் கவிதைகள் போன்றவற்றை மனப்பாடமாக ஒப்புவிக்கும் அச்சிறுவனது திறமையைப் பாராட்டினார்.

தமிழ் மொழித் தகுதித் தேர்வு கட்டாயம்

- தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவிகிதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்து அரசாணை வெளியீடு.
- தமிழ் மொழித் தகுதித் தாள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வர்கள் அனைவருக்கும் கட்டாயம்.
- தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு தரத்தில் நிர்ணயம்.
- கட்டாயத் தமிழ் மொழித் தாளில் குறைந்தபட்சம் 40 சதவிகித மதிப்பெண் தேர்ச்சி நிர்ணயம்.

ரூ.14.27 கோடியில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சார்பில் சென்னை, மதுரை, கடலூர், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய பதிவு மண்டலங்களில் ரூ.14.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் விருத்தாச்சலம் – ஒருங்கிணைந்த மாவட்ட பதிவாளர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

பொதுமக்களின் சொத்துப் பரிவர்த்தனை தொடர்பான ஆவணப் பதிவுகள், வில்லங்கச் சான்று வழங்குதல், ஆவணத்தின் சான்றிட்ட நகல் வழங்குதல், பல்வேறு திருமணச் சட்டங்களின்கீழ்த் திருமணங்கள் பதிவு செய்தல் போன்ற முக்கியப் பணிகளை ஆற்றிவரும் சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகள் அளித்திடவும், பணியாளர்களின் பணியினை எளிமைப்படுத்தும் வகையிலும், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

சென்னை பதிவு மண்டலம், தாம்பரம் மற்றும் சேலையூர் சார்–பதிவாளர் அலுவலக ஒருங்கிணைந்தக் கட்டடம், ஆலந்தூர் மற்றும் சாலவாக்கம் சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்; திருநெல்வேலி பதிவு மண்டலம் விக்கிரமசிங்கபுரம்; வேலூர் பதிவு மண்டலம், நெமிலி; தஞ்சாவூர் பதிவு மண்டலம், மதுக்கூர்; திருச்சிராப்பள்ளி பதிவு மண்டலம், இரும்புலிக்குறிச்சி; கடலூர் பதிவு மண்டலம், சத்தியமங்கலம்; மதுரை பதிவு மண்டலம், கடமலைக்குண்டு; திருநெல்வேலி பதிவு மண்டலம், புதுக்கோட்டை; வேலூர் பதிவு மண்டலம், களம்பூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள சார் பதிவாளர் அலுவலகங்கள்; கடலூர் பதிவு மண்டலம், விருத்தாச்சலம் ஒருங்கிணைந்த வளாகக் கட்டடத்தில் கட்டப்பட்டுள்ள விருத்தாச்சலம் – ஒருங்கிணைந்த மாவட்ட பதிவாளர் அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் ரூ.14.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் விருத்தாச்சலம் மாவட்ட பதிவாளர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், பதிவுத்துறையின் மென்பொருளோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்துப் பரிவர்த்தனை நடக்கும் போது பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கும், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கும் சொத்து வரி இரசீது, தண்ணீர் வரி இரசீது மற்றும் மின் கட்டண இரசீது தொடர்பான பெயர் மாற்ற விவரங்கள் தானாகவே இணைய வழியாக அனுப்ப ஏதுவாகும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

பதிவுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் அமரத்துவம் அடைந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

விபத்தில் உயிரிழந்த

இந்திய இராணுவத்தின் முப்படைத் தளபதிக்கு அஞ்சலி

நீலகிரி மாவட்டத்தில் 08.12.2021 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த இந்திய இராணுவத்தின் முப்படைத் தலைமைத் தளபதி திரு.பிபின் ராவத் அவர்களின் உடலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்கள் குடும்பத்தினருக்குத் தனித்தனியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து எழுதிய கடிதத்தில், இந்தக் கடினமான நேரத்தில் மக்கள் அனைவரும் உங்களுடன் துணை நிற்கிறார்கள் என்றும் இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பிலிருந்து மீண்டுவர பலத்தையும், தைரியத்தையும் நீங்கள் பெறவேண்டும் எனத் தான் விழைவதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை, தக்ஷின் பாரத், ஜெனரல் ஆபிசர் கமாண்டிங் லெப்டினன்ட் ஜெனரல் திரு. அ.அருண் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில்...

நீலகிரி மாவட்டத்தில் 08.12.2021 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் இந்திய இராணுவத்தினர் 13 பேர் உயிரிழந்த துயரமான நேரத்தில், அவர்கள் குடும்பத்தினருக்குத் தாங்கள் அருகிலிருந்து ஆறுதல் அளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியையும், இதயப்பூர்வமான பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் அறிந்த உடனே, நெஞ்சை நெகிழ வைக்கும் வகையில் தாங்கள் விரைந்து வந்து, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்து, ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள், இராணுவ உயர் அலுவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் இதயத்தில் ஆழமாக இடம்பிடித்து விட்டீர்கள்.

அந்தத் தருணத்தில் எந்த எந்த உதவி முடியுமோ அந்த உதவிகளை எல்லாம் தங்களின் தலைமையின்கீழ் உள்ள தமிழ்நாடு அரசின் மொத்த நிருவாகமும் செய்து தந்தது. இதுபோன்ற ஆதரவுகள்தான் எதிர்காலத்தில் நம் இளைஞர்கள் தாமாக முன்வந்து இராணுவத்தில் சேருவதற்கும், இராணுவ உடை அணிவதற்கும், உற்சாகமூட்டுவதாகவும், ஊக்கமளிப்பதாகவும் அமையும்.

தக்ஷின் பாரத் பகுதியின் தலைமை அலுவலர் என்ற வகையில் தங்களுடைய முன்மாதிரியான ஆதரவுடன் பணியாற்றுவதில் பெருமை கொள்கிறேன். உங்களுடைய இந்தச் செயல், பணியில் இருக்கும் இராணுவ வீரர்களுக்கும், மூத்த இராணுவ வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு நமக்கு ஆதரவாக இருக்கின்றது என்ற உணர்வை ஏற்படுத்தி, ஊக்கத்தை அளிப்பதோடு தேவைப்படும் காலங்களில் அவர்களுக்கு இந்த அரசு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தக் கடினமான சூழ்நிலையில் எங்களுக்கு உறுதுணையாக இருந்ததற்குத் தங்களுக்கும், அனைத்து அரசு அலுவலர்களுக்கும், நம் மாநிலத்திற்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில் திருமண மண்டபங்களில்
மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக திருமணம் நடத்தும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்குத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் இலவசமாகத் திருமணம் நடத்தும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் திருமணம் நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளி மணமகன் மற்றும் மணமகளுக்கு, திருக்கோயிலில் திருமணம் செய்திடக் கட்டணம் இல்லை என்ற உத்தரவினை வழங்கினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், மணமக்களின் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் திருக்கோயிலில் அவர்களுக்கு நடைபெறும் திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது என்றும், திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றால் மண்டபத்திற்கான பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக, சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளி திருமணத்திற்கு மணமகன் எஸ்.சுரேஷ்குமார், மணமகள் எஸ்.மோனிஷா ஆகியோருக்குத் திருக்கோயிலில் திருமணம் செய்திடக் கட்டணம் இல்லை என்ற உத்தரவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும், மணமக்களுக்குத் திருமண வாழ்த்துக்களுடன் பரிசுப் பொருட்களையும் வழங்கி, வாழ்த்தினார்.

இத்திட்டத்தைத் தொடங்கி வைத்ததன்மூலம், இனிவரும் காலங்களில் திருமணம் நடத்தவிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் இலவசமாகத் திருமணம்நடத்தும்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனாவால் உயிரிழந்த குடும்பங்களுக்குத் தலா ரூ.50,000 நிவாரண நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கும் வகையில், சென்னை மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்றால் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.50,000 நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த்தொற்று காரணமாக மார்ச் 2020 முதல் இதுவரை 27,31,945 நபர்கள் பாதிக்கப்பட்டு, 26,87,414 நபர்கள் குணமடைந்துள்ளனர், 36,549 நபர்கள் கொரோனா நோயின் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் ஊரடங்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் துயர் துடைக்கும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு ரூ.4,000 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. 2021–2022ஆம் நிதியாண்டில், கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.8,398.18 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சீரிய நோய்த்தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக 21.05.2021 அன்று 36,184ஆக இருந்த நோய்த்தொற்றுப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 07.12.2021 அன்று 710 ஆகக் குறைந்துள்ளது.

கொரோனா இரண்டாவது அலையினைக் கட்டுப்படுத்தவும், மூன்றாவது அலையினை வராமல் தடுக்கவும், பல்வேறு முனைப்பான முயற்சிகள் மேற்கொண்டதோடு பெருமளவில் தடுப்பூசி முகாம்கள் நடத்தித் தமிழ்நாட்டில் சுமார் 7 கோடி தடுப்பூசிகள் செலுத்தியுள்ள காரணத்தால் கொரோனா நோய்க் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது அண்டை மாநிலங்களில் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய கொரோனா – ஒமைக்ரான் வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தவும் தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பணியிலிருந்தபோது கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்போது கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களது குடும்பங்களின் துயர் துடைக்கும் வகையில் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக உயிரிழந்த நபர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.50,000 என மொத்தம் ரூ.182.74 கோடி நிவாரணத்தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த்தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ள நபர்களது குடும்பத்தினர் கொரோனா நோய்த்தொற்றினால் இறந்ததற்கான இறப்புச் சான்று வைத்திருப்பின் https://www.tn.gov.in இணையவழியாகவும், அருகில் இருக்கும் இ–சேவை மையங்கள் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்களுக்கு நூலுரிமைத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழறிஞர் புலவர் செ.இராசு அவர்களின் மருத்துவச் செலவிற்கு உதவிடும் வகையில் அவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு ரூ.15 இலட்சமும் மற்றும் மறைந்த தமிழறிஞர்களான சிலம்பொலி சு.செல்லப்பன், முனைவர் தொ.பரமசிவன், புலவர் இளங்குமரனார் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.15 இலட்சமும், தமிழறிஞர்கள் திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளிநாயகம் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.10 இலட்சமும் என மொத்தம் ரூ.80 இலட்சம் நூலுரிமைத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், நவிமும்பை தமிழ்ச்சங்கத்திற்குக் கட்டடம் கட்ட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூ.25 இலட்சத்திற்கான காசோலையை அச்சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் வழங்கினார் – 10.12.2021

பாரதி நினைவு நூற்றாண்டு விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 'மகாகவி பாரதியார்' மூத்த ஆய்வாளர்களான திரு. சீனி விசுவநாதன் மற்றும் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் ஆகியோருக்குப் 'பாரதி நினைவு நூற்றாண்டு விருது' மற்றும் விருதுத்தொகை தலா 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், மகாகவி பாரதியார் மூத்த ஆய்வாளர்களான மறைந்த பெரியசாமித்தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர்களது குடும்பத்தாருக்குப் 'பாரதி நினைவு நூற்றாண்டு விருது' மற்றும் விருதுத்தொகை தலா 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்.

மகாகவி பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.09.2021 அன்று ''மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த மூத்த ஆய்வாளர்களான மறைந்த பெரியசாமித்தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் மூத்த ஆய்வாளர்களான திரு. சீனி விசுவநாதன், பேராசிரியர் முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் தலா 3 இலட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் அரசால் வழங்கிக் கௌரவிக்கப்படும்'' என்று அறிவித்தார். அதனடிப்படையில், பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

திருக்குறள் முற்றோதல் பரிசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.12.2021 அன்று, தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து, குறள் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட 219 மாணாக்கர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கிடும் அடையாளமாகச் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 9 மாணாக்கர்களுக்குத் தலா ரூ.10,000 குறள் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார்.

டிசம்பர் 10 :

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 143ஆவது பிறந்தநாள்

தமிழ்நாடு அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 143ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னைப் பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் – 10.12.2021

ரூ.20 கோடியில் பள்ளிக்கரணையில் சதுப்புநிலச் சூழலியல் பூங்கா

கருத்தியல் அடையாளங்கள் மற்றும் மாதிரிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சதுப்புநிலச் சூழலியல் பூங்காவைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

சதுப்புநிலம் என்பது ஆண்டு முழுவதும் ஈரப்பதத்துடன் கூடிய நிலங்களில் சிறு குறு தாவரங்களும், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள் வசிக்கக் கூடிய பகுதியாகும். இச்சதுப்பு நிலம் வெள்ளத்தைத் தணித்தல், நிலத்தடி நீர் சேமிப்பை மேம்படுத்துதல், கரிபொருள் வரிசைப்படுத்துதலுக்கு உதவுதல், உயரிய பல்லுயிர்களை ஆதரித்தல், பொழுதுபோக்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்கு உதவுதல் போன்ற பணிகளுக்கு உதவுகிறது.

தமிழ்நாடு வனத்துறையின் கட்டுப்பாட்டில் 700 ஹெக்டர் பரப்பளவில் பள்ளிக்கரணைச் சதுப்பு நிலப்பகுதி சென்னை மாநகரின் இடையே இயற்கை அழகுடன் காணப்படுகிறது. சென்னை மாநகரத்தில் பெருமழைக்காலத்தில் பள்ளிக்கரணைச் சதுப்பு நிலம் வெள்ளநீர் வடிகால் பகுதியாக இருந்து வருகிறது. இச்சதுப்புநிலம் சுமார் 231 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள நீரை ஒக்கியமடுவு, கோவளம் ஆகிய இரண்டு நீர் வெளியேற்றும் கால்வாய் மூலம் வங்காள விரிகுடாவில் கலக்க உதவுகிறது.

இச்சதுப்புநிலப் பகுதியில் 176 வகையான பறவையினங்கள், 10 வகையான பாலூட்டிகள், 21 வகையான ஊர்வன இனங்கள், 10 வகையான நிலநீர் வாழ்வினங்கள், 50 வகையான மீன் இனங்கள், 9 வகையான நத்தையினங்கள், 5 வகையான ஒட்டுமீன் இனங்கள், 14 வகையான வண்ணத்துப் பூச்சிகள் ஆகிய உயிரினங்களின் வாழ்விடமாகவும், ஒட்டுமொத்தமாக 459 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பரவலுக்கு உதவிகரமாக அமைந்துள்ளது. 2019–2020ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,65,313 பறவைகள் இச்சதுப்பு நிலப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன.

பள்ளிக்கரணைச் சதுப்புநிலத்தின் வடமேற்கு பகுதியில் பள்ளிக்கரணைச் சதுப்புநில சூழலியல் பூங்கா அமைத்திட தமிழ்நாடு அரசால் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச்சதுப்பு நிலத்தினைப் பாதுகாத்திட சுமார் 1,700 மீட்டர் தூரத்திற்குப் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டதுடன், பொதுமக்கள் பார்வைக்காகவும் பள்ளிக்கரணை சதுப்புநிலத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதின் நோக்கத்திற்காகவும் பசுமையான பொது இடம் (PUBLIC GREEN SPACE) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில், பார்வையாளர்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு நடைபாதை, சதுப்புநிலத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் விவரம், மீன் இனங்கள் பட்டாம்பூச்சி வகை, பறவையினங்கள், பல்லுயிர் பரவல் மற்றும் அதன் வளம் குறித்த விவரங்களை விளக்கும் வகையில் கருத்தியல் அடையாளங்கள் மற்றும் மாதிரிகள், சூழலியல் பூங்காவில் அழகியலை மேம்படுத்த வேங்கை, அரசு, செஞ்சந்தனம், சந்தனம், குமிழ், மகாகனி, வேம்பு, நீர்மருது இலுப்பை போன்ற மண்சார்ந்த 5,000 மரக்கன்றுகள் நடைபாதையின் இருபுறமும் நடப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வெள்ளத்தடுப்புப் பணிக்காகத் தற்போது சுமார் ரூ.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிக்கரணைச் சதுப்புநிலப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளிக்கரணைச் சதுப்புநிலத்தினை ''ராம்சார் சாசனத்தின்''–படி ஈரநிலமாக அறிவிக்கை செய்ய ஒன்றிய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் பள்ளிக்கரணை சதுப்புநிலத்திற்கு வருகை தரும் வெளிநாடு மற்றும் உள்ளூர் வலசை பறவையினங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையினைக் கருத்தில் கொண்டு பள்ளிக்கரணைச் சதுப்புநிலத்தினைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ரூ.1,242 கோடி மதிப்பீட்டில் முக்கியத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.12.2021 அன்று சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில், "நமக்கு நாமே திட்டம்", "நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்" ஆகிய புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து, ரூ.38.53 கோடி மதிப்பீட்டிலான 83 முடிவுற்றத் திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.54.01 கோடி மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30,837 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.168.64 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நமக்கு நாமே திட்டம்

மக்களின் சுய உதவி, சுயச்சார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும், பரவலாக்கவும், மக்கள் பங்கேற்புடன் கூடிய நமக்கு நாமே திட்டத்தினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997–1998ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். மக்களின் சுயச்சார்பு தன்மையை ஊக்குவிக்கவும், பலப்படுத்தவும், மக்களுக்குத் தேவையான திட்டங்களை அவர்களது பங்களிப்புடன் செயல்படுத்திப் பொதுச் சொத்துக்களை உருவாக்கிப் பராமரித்து வருவதே நமக்கு நாமே திட்டத்தின் நோக்கமாகும்.

மேலும், இத்திட்டம் வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டமிடுதல் தொடங்கி, வள ஆதாரங்களைத் திரட்டுதல், பணிகளை மேற்கொள்ளுதல், மேற்பார்வை செய்தல் என அனைத்திலும் மக்களை நேரடியாக ஈடுபடுத்துகிறது.

மாநில அளவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளின் மதிப்பீட்டில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்களின் பங்களிப்பு நிதி மற்றும் அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாநில அளவில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நகர்ப்புறங்களில் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதாகும். இயற்கை வள மேலாண்மைப் பணிகள், வெள்ளத் தடுப்புப் பணிகள், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நகர்ப்புற இடத்தைப் பசுமைப்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், சமூக மற்றும் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல், வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துதல், திறனுக்கேற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பொதுச் சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், பசுமை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பு இயற்கை வள மேலாண்மை தொடர்பான பணிகளை மேற்கொள்வது ஆகும்.

முடிவுற்ற திட்டப் பணிகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

- தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, சங்ககிரி, பெத்தநாயக்கன்பாளையம், அயோத்தியாப் பட்டினம், வீரபாண்டி, ஏற்காடு, கொங்கணாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், ஊராட்சிமன்ற அலுவலகங்கள், சமுதாய சுகாதார வளாகக் கட்டடங்கள், பள்ளிக் கூடுதல் கட்டடங்கள், நியாய விலைக்கடை கட்டடங்கள், சிறு பாலம், தடுப்பணைகள் என மொத்தம் ரூ.15.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்.
- ஓமலூரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடம்.
- மேட்டூரில் ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்.

- சந்தியூரில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்.
- தலைவாசல் வட்டம், மும்முடி கிராமத்தில் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்.
- நாழிக்கல்பட்டி, கரியகோவில், கடம்பூர், வெள்ளையூர், உமையாள்புரம் ஆகிய இடங்களில் ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடங்கள்.
- சேலம் மேற்கு வருவாய் வட்டாட்சியருக்கு ரூ.28.81 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்புக் கட்டடம்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

- எடப்பாடி அரசு மருத்துவமனையில் ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 24 படுக்கை வசதிகளுடன் கூடிய பெண்கள் கவனிப்புப் பிரிவு, 24 படுக்கை வசதிகளுடன் கூடிய ஆண்கள் பிரிவு, 4 படுக்கை வசதிகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம் ஆகிய பிரிவுகள் கொண்ட கட்டடம்.
- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆத்தூர் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் புதிய அலுவலகக் கட்டடம்.
- எடப்பாடி வட்டம், மேட்டுப்பாளையத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலையக் கட்டடம்.
- நெடுங்குளம் ஊராட்சி, கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்புக் கட்டடம்.
- நெடுங்குளம் ஊராட்சி, கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ரூ.71.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர்/பணியாளர் குடியிருப்புக் கட்டடம்.
- நெடுங்குளம் ஊராட்சி, கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையக் குடியிருப்புகளுக்கு ரூ.31.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் மற்றும் வாகன நிறுத்தக்கூடம்.

- பகடுப்பட்டு அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளியில் ரூ.94.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் சமையலறைக் கட்டடம்.
- ரூ.2.43 கோடி மதிப்பீட்டில் பம்பாரப்பட்டி, ஒய்.கணேசபுரம், அபிநவம், ஆரியப்பாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சிறுவாச்சூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள ஒரு வகுப்பறை, பேவர்பிளாக் அமைத்தல், பொதுமக்கள் உதவியுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மற்றும் உபகரணங்கள்.

கூட்டுறவுத்துறை

- அருநூத்துமலை பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம்.
- சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள எடை மேடை.

➢ செட்டியப்பனூர், கொல்லத்தெரு, மஞ்சையன்காடு, காரைக்காடு, வால்கரடு, மலமானூர், வெங்கடாசலம் காலனி, போத்தனூர் ஆகிய இடங்களில் ரூ.60.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பகுதி நேர நியாயவிலைக் கடைகள்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

➢ ஒருங்கிணைந்த சேலம் (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலுவலகத்திற்கு ரூ.95.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டம் மற்றும் கோட்ட அலுவலகக் கட்டடம்.

என மொத்தம், ரூ.38.53 கோடி மதிப்பீட்டிலான 83 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

➢ எடப்பாடி வட்டம், கோனேரிப்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மருத்துவ அலுவலர்களுக்கான குடியிருப்புகள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

➢ பெத்தநாயக்கன்பாளையத்தில் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

➢ 14 வட்டாரங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சத்து 450 மரக்கன்றுகள் நடும் பணிகள்.

சேலம் மாநகராட்சி

➢ ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் சூரமங்கலம், அஸ்தம்பட்டி மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலங்களில் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார மையத்திற்குக் கூடுதல் கட்டடம் மற்றும் சானிக்குட்டை மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள்.

பேரூராட்சிகள்

➢ பேளூர், ஏத்தாப்பூர், வீரக்கல்புதூர், வீரகனூர், கன்னங்குறிச்சி, அரசிராமணி, ஆட்டையாம்பட்டி, அயோத்தியாப்பட்டினம், பனமரத்துப்பட்டி, இளம்பிள்ளை, கொங்கணாபுரம், வனவாசி, வாழப்பாடி, காடையாம்பட்டி, கீரிப்பட்டி, கொளத்தூர், நங்கவள்ளி, தெடாவூர், ஓமலூர், செந்தாரப்பட்டி, மேச்சேரி, பி.என்.பட்டி, கெங்கவல்லி, தம்மம்பட்டி, பூலாம்பட்டி, சங்ககிரி, கருப்பூர், மல்லூர், பெத்தநாயக்கன்பாளையம், தேவூர் ஆகிய பேரூராட்சிகளில் ரூ.40.55 கோடி மதிப்பீட்டில் சாலைகள், பாலங்கள், எரிவாயு தகன மேடைகள் மற்றும் வாரச் சந்தை அமைக்கும் பணிகள்.

நகராட்சி நிருவாகம்

➢ ஆத்தூர் மற்றும் மேட்டூர் நகராட்சிகளில் ரூ.5.14 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள்.

என மொத்தம் ரூ.54.01 கோடி மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

புதிய அரசு வாகனங்கள்

சமூகப் பாதுகாப்புத்துறை

➢ குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு நலன் தொடர்பான பணிகளை மேற்கொள்ள மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரின் பயன்பாட்டிற்காக ரூ.7.33 இலட்சம் மதிப்பிலான மகேந்திரா ஈப்பு வாகனம்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

➢ தலைவாசல் வருவாய் வட்டாட்சியருக்கு ரூ.7.23 இலட்சம் மதிப்பிலான ஈப்பு வாகனம்.

➢ தலைவாசல் தனி வட்டாட்சியருக்கு (ச.பா.தி) ரூ.7.23 இலட்சம் மதிப்பிலான ஈப்பு வாகனம்.

என மொத்தம், ரூ.21.79 இலட்சம் மதிப்பீட்டிலான 3 ஈப்பு வாகனங்களை வருவாய்த்துறை பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அரசு நலத்திட்ட உதவிகள்

➢ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பொருளாதாரத்தில் நலிவடைந்த 37 பயனாளிகளுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணை .

➢ பட்டு வளர்ச்சித்துறை சார்பில் 283 பயனாளிகளுக்கு ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மல்பெரி நடவு செய்ய ஊக்கத்தொகை, தனி புழு வளர்ப்புக்கு உதவித்தொகை.

- பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 62 பயனாளிகளுக்கு ரூ.3.34 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை, விலையில்லாச் சலவைப்பெட்டிகள்.
- மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை உருவாக்கும் திட்டத்தின்கீழ் மானியத்திற்கான ஆணை, புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடன் ஒப்புகை ஆணை
- 1,000 பயனாளிகளுக்கு மின்னணுக் குடும்ப அட்டைகள்.
- 59 பழங்குடியினருக்கு வன உரிமை பட்டாக்கள்.
- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 9,009 பயனாளிகளுக்கு உதவித்தொகை.
- 2,189 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள்.
- 261 மலைவாழ் மக்களுக்குச் சாதிச்சான்றிதழ்கள்.
- 42 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்.
- 6 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித்தொகை
- உள்நாட்டு மீனவர்கள் 15 பேருக்கு 40 சதவிகித மானிய விலையில் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டிலான மீன்பிடி வலைகள்.
- வேளாண் மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 259 விவசாயிகளுக்கு ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் இடுபொருட்கள், வேளாண் கருவிகள், விதைகள், நுண்ணீர் பாசனக் கருவிகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்.
- வேளாண் பொறியியல் துறையின் சார்பில் சூரிய ஒளியின் மூலம் இயங்கும் மோட்டார் பம்புகளுக்கு ரூ.14.24 இலட்சம் மதிப்பீட்டில் மானியம்.

- தோட்டக்கலைத்துறையின் சார்பில் 250 நபர்களுக்கு ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் காய்கறிச் சாகுபடிக்கான பந்தல் அமைப்பதற்கு மானியம், வெங்காயச் சேமிப்பு கிடங்குக்கான மானியம், நிழல் வலைக்கூடம் அமைக்க மானியம்.
- சமூக நலத்துறையின் சார்பில் 5,000 நபர்களுக்கு ரூ.20.09 கோடி மதிப்பீட்டில் திருமண நிதியுதவி.
- பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரிந்து பணியிடையே காலமான 2 சத்துணவு அமைப்பாளர்களின் வாரிசுதாரர்களுக்குச் சத்துணவு அமைப்பாளராகக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை.
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 352 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.90.82 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் மாதாந்திர உதவித்தொகை.
- சமூகப் பாதுகாப்புத்துறையின் சார்பில் 146 பயனாளிகளுக்கு ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் கொரோனா தொற்றால் பெற்றோரில் யாரேனும் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி.
- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கண்ணொளிக் காப்போம் திட்டத்தில் 1,344 பயனாளிகளுக்குக் கண்கண்ணாடிகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஸ்மார்ட் கார்டுகள், கோவிட் பெருந்தொற்றுப் பணியில் ஈடுபட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை.
- ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் 21 நபர்களுக்கு ரூ.28.38 இலட்சம் மதிப்பீட்டில் தீருதவித்தொகை.
- முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு விவசாயிகளுக்குத் துரிதமாக மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் 111 விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகள்.
- அமைப்புச் சாரா மற்றும் கட்டடத் தொழிலாளர்களின் 15 குழந்தைகளுக்கு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை.
- ரூ.2.25 கோடி மதிப்பீட்டில், 500 விவசாயிகளுக்குக் கறவை மாடுகளுக்கான மூலதனக்கடன், 100 சாலையோர வியாபாரிகளுக்குக் கடன் தொகை, 25 மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்விப் பயிலக் கல்விக் கடன் உதவிகள்.
- ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 2,251 பயனாளிகளுக்கு ரூ.6.73 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.
- 5,123 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.87 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன்.

- பேரூராட்சிகள் துறையின் சார்பில் கொங்கணாபுரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக ஒரு நபருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை.
- கூட்டுறவுத்துறையின் சார்பில் 2,223 பயனாளிகளுக்கு ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் கடன் உதவி.
- தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 20 வனக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.2 இலட்சம் சுழல் நிதி.
- தாட்கோ சார்பில் 117 நபர்களுக்கு ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் தொழில்முனைவோர் நிதி, வேலைவாய்ப்புத் திட்ட நிதி, மகளிருக்கான மேம்பாட்டு நிதிகள்.

போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 30,837 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.168.64 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

பெரியோர்களே! தாய்மார்களே! மகளிர் சுய உதவிக்குழுவில் இடம்பெற்றிருக்கக்கூடிய அன்பிற்குரிய சகோதரிகளே! வெள்ளம் போல் திரண்டிருக்கக்கூடிய நண்பர்களே! தோழர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான நன்றி. நன்றி மட்டுமல்ல, அதோடு சேர்த்து வணக்கத்தையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சேலத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி எனக்கு ஓர் உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது, ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது என்ன அரசு விழாவா – அல்லது அரசாங்கமே விழாக்கோலம் கொண்டிருக்கிறதா என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்குக் குறிப்பாக இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்கள் முன்நின்று அவருடைய மேற்பார்வையில், இங்கிருக்கக்கூடிய ஆட்சித் தலைவர், அரசு அலுவலர்கள் ஒத்துழைப்போடு இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். நேருவைப் பற்றி நான் பல நேரங்களில் அதிலும் குறிப்பாகத் திருச்சியிலே நடைபெறக்கூடிய அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும், கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் நான் அவரைப் பற்றிக் கூறுகிறபோது அவர், தீரர்கள் உருவாக்கிய ஒரு வீரராக, அந்தக் கோட்டத்தினுடைய தளபதியாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதிலே சாதாரண வெற்றியல்ல, மிகப் பிரம்மாண்டமான வெற்றியைப் பெறக்கூடிய அளவிற்கு நேரு அவர்கள் அந்தக் காரியங்களை ஆற்றுவது உண்டு. அப்படி ஆற்றியிருக்கக்கூடிய அந்தப் பணி இப்போது இந்தச் சேலத்திலும் அடியெடுத்து வைத்திருக்கிறது.

சித்தர்கள் வாழ்ந்த கஞ்சமலை, வள்ளல் பாரியின் மகளுக்கு அவ்வையார் திருமணம் செய்து வைத்து மகிழ்ச்சி அடைந்த உத்தமசோழபுரம் கோவில், ஹைதர் அலியின் ஆளுகையிலிருந்த திருமணி முத்தாறு கோட்டை எனப் பல்வேறு வரலாற்றைப் பெற்றிருக்கக்கூடிய மாவட்டம்தான் இந்த சேலம் மாவட்டம். அதுமட்டுமல்ல, திராவிட இயக்கத்தில் என்ன சொல்லி அடையாளம் காட்டலாம் என்று சொன்னால், திராவிட இயக்கத்தின் வரலாற்றில் இந்தச் சேலம் ஒரு மிகப்பெரிய பங்கைப் பெற்றிருக்கிறது.

அது என்னவென்று கேட்டால், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் அண்ணாதுரை தீர்மானம் என்ற தலைப்பிட்டு வந்த தீர்மானம், அதுதான் நீதிக்கட்சியானது, திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றதும் இந்தச் சேலம் மாநகரில்தான். இதையெல்லாம் தாண்டி இன்னொரு மகத்தான பெருமையும் இந்தச் சேலத்திற்கு உண்டு.

தமிழினத் தலைவர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சில ஆண்டுக் காலம் வாழ்ந்த ஊர்தான் இந்தச் சேலம். 1949–1950ஆம் ஆண்டுகளில் அந்தக் காலக்கட்டத்தில் சேலம் கோட்டைப் பகுதியில் ஹபீப் தெருவில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் நான் என்னுடைய வீட்டுக்கு வந்திருக்கிறேன், அதுதான் எனக்குப் பெருமை.

அருமை அண்ணன் நம்முடைய நெஞ்சில் இன்றைக்கும் ஆழமாகப் பதிந்திருக்கக்கூடிய வீரபாண்டியார் அவர்கள். எத்தனையோ முறை வீரபாண்டியார் அவர்கள் இந்தச் சேலத்திற்குக் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, பொதுக் கூட்டத்தில் பங்கேற்க, மாநாட்டில் பங்கேற்க, அதேபோல், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, துணை முதலமைச்சராக இருந்தபோது அரசு விழாக்களில் பங்கேற்க எத்தனையோ முறை என்னை அழைத்து வந்திருக்கிறார். ஆனால், இன்றைக்கு எல்லாவற்றையும் தாண்டி முதலமைச்சராக இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். எனக்கு என்ன ஏக்கம் என்றால், நான் முதலமைச்சராக வந்திருக்கக்கூடிய இந்த நேரத்தில் நம் வீரபாண்டியார் இல்லையே என்கின்ற வருத்தம், ஏக்கம் என்னுடைய உள்ளத்தில் பதிந்திருக்கிறது. அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, தலைவர் கலைஞர்

அவர்களிடத்தில் முதலமைச்சர் என்கின்ற முறையோடு வாதாடிப் போராடி இந்த மாவட்டத்திற்கு எத்தனையோ திட்டங்களைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். இன்னும் கூட நான் பெருமையாகச் சொல்லவேண்டுமென்றால், அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் அமைச்சர் பொறுப்பில் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது எல்லா மாவட்டத்திற்கும் எல்லா பணிகளும் நடந்திருக்கிறது. ஆனால், எல்லாவற்றையும் முன்நிறுத்தி அவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதில் எந்த மாவட்டம் அதிகமான சலுகையைப் பெற்றது என்றால், இந்தச் சேலம் மாவட்டம்தான் அதிகமான சலுகைகளைப் பெற்றிருக்கின்றது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தச் சேலம் மாவட்டத்துக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டிய ஆட்சிதான் கடந்த காலங்களில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது நடைபெற்றிருக்கிறது என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்ல முடியும்!

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சேலம் உருக்காலை, ஐம்பது ஆண்டுகாலக் கனவாக இருந்த சேலம் இரயில்வே கோட்டம், பெரியார் பல்கலைக்கழகம், சேலத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி, ஆத்தூரில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, சேலம் மாநகராட்சிக்காக ரூ.283 கோடியில் காவிரி தனி கூட்டுக் குடிநீர் திட்டம், சேலம் மாநகரத்துக்கு ரூ.183 கோடி செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டம், சேலம் திருமணி முத்தாறு – வெள்ளக்குட்டை ஓடை தூய்மைப்படுத்த ரூ.36 கோடி ஒதுக்கீடு, சேலத்தில் ரூ.136 கோடி மதிப்பில் அதிநவீன சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, ஏத்தாப்பூரில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ரூ.11 கோடி மதிப்பீட்டில் ஏற்காட்டில் தாவரவியல் பூங்கா, சேலம் மாவட்டத்தில் 9 உழவர் சந்தைகள், சேலம்–ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த்திட்டம், ரூ.38 கோடி மதிப்பீட்டில் சேலம் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ரூ.150 கோடி மதிப்பில் உயர் மற்றும் தாழ்வழுத்த புதை கம்பித் தொடர் மின் பாதைகள், மேட்டூரில் 600 மெகாவாட் அனல் மின் திட்டம், ஆத்தூர், சங்ககிரி, ஓமலூர் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், சேலம் நகரக் காவல் ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம், சேலம்–கிருஷ்ணகிரி நான்கு வழிப்பாதையைப் போட வைத்தது, சேலம்–நாமக்கல் நான்கு வழிப்பாதையை ஏற்படுத்தியது, சேலம்–செங்கப்பள்ளி நான்கு வழிப்பாதையை அமைத்தது, பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த விமானச்சேவை தி.மு.க. ஆட்சியில்தான் மீண்டும் தொடங்கப்பட்டது.

இப்படிக் கணக்கில் அடங்காத வகையில் இந்தச் சேலம் மாவட்டத்திற்குக் கொண்டுவந்து திட்டங்களை நிறைவேற்றிய ஆட்சிதான், நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன், கலைஞருடைய ஆட்சிதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிதான் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரிசையில் இதை விட அதிகமான சாதனைகளைச் செய்து கொடுப்பதற்குக் கழக ஆட்சி தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், அதற்கு எடுத்துக்காட்டுதான் இன்றைக்கு நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சி என்பதையும் நான் பெருமையோடு அடையாளப்படுத்த விரும்புகிறேன்.

மாமலை அளவு பணியானாலும் அதைச் சிறுகடுகாக நினைத்து; எல்லோரையும் ஒருங்கிணைத்து, திறம்படச் செய்துகாட்டும் வல்லமை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களுக்கு உண்டு. ஆகவேதான், அப்படிப்பட்ட ஒரு ஆற்றலாளரைத் தேர்ந்தெடுத்து உங்கள் மாவட்டத்துக்குப் பொறுப்பு அமைச்சராக நாங்கள் நியமித்திருக்கிறோம்.

நேரு வந்தார் – நேரு வென்றார் என்று பெயர் எடுக்கப் போகிறார். நேருவுக்கு நிகர் நேருதான் என்று நான் பலமுறை பல நிகழ்ச்சிகளில் சொல்லி இருக்கிறேன்.

இந்த ஒருமாத காலத்தில் அவர் இந்த மாவட்டத்தில் செய்திருக்கின்ற பணிகளை அடுத்த ஓராண்டுக் காலத்துக்குத் தொடர்ந்தால், ஒரு மாதத்தில் ஆற்றியிருக்கக்கூடிய பணிக்கே இவ்வளவு பெரிய நிகழ்ச்சி, இன்னும் ஓராண்டுக்கு என்னென்ன செய்யப் போகிறார், என்னென்ன நிறைவேற்றப்படும் என்பதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவரைப் பொறுப்பாளராக அறிவித்ததும், இந்த மாவட்டம் முழுக்க முழுக்க சுற்றிச் சுழன்று மக்கள் குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, முகாம்களை நடத்தி, தலைவாசல், ஆத்தூர், பெத்தநாயக்கன் பாளையம், கெங்கவல்லி, வாழப்பாடி, ஏற்காடு, சேலம் தெற்கு, ஓமலூர், காடையாம்பட்டி, மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி ஆகிய பதினாறு வட்டங்களில் இருக்கக்கூடிய மக்களைச் சந்தித்து அவர் மனுக்களைப் பெற்றிருக்கிறார். அதாவது, 35,217 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த மனுக்களின் மூலமாக உங்களது கோரிக்கைகள் எல்லாம் எங்களிடம் வந்து சேர்ந்துள்ளன. இதில் 10,623 மனுக்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்ற மனுக்கள் அரசுத் துறைகளின் மேல் விசாரணையில் உள்ளன, ஆய்வு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் உறுதியோடு சொல்கிறேன், அவற்றில் எதை, எதை நிறைவேற்றப்பட முடியுமோ அத்தனையும் உறுதியாக, நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை அரசின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எங்கு சென்றாலும், எந்த வழியாகச் சென்றாலும், முதலமைச்சராக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, எங்குச் சென்றாலும் மக்கள் எங்களுக்கு மகிழ்ச்சியோடு வரவேற்பு தருகிறார்கள். அவர்கள் முகத்தைப் பார்க்கும்போது, அவர்கள் மகிழ்ச்சியைப் பார்க்கும்போது, அவர்கள் புன்னகையைப் பார்க்கும்போது எங்களுக்கு ஒரு தெம்பு வருகிறது.

ஏற்கெனவே ஒரு ஆட்சி நடந்தது, நான் அரசியலை அதிகம் பேச விரும்பவில்லை, பேசவும் தேவை இல்லை, அது எனக்கு அவசியமும் கிடையாது. எப்போது ஆட்சிக்கு வந்தோமோ, எப்போது நாம் முழுமையாக வெற்றி பெற்றிருக்கிறோம், பெரும்பான்மையாக வெற்றி பெற்றுவிட்டோம், நாம்தான் ஆட்சி என்ற நிலை வந்ததற்குப் பிறகு, அந்த வெற்றியை நம்முடைய கலைஞர் அவர்களுடைய நினைவிடத்திற்குச் சென்று நான் அங்கே வணங்கி அந்த வெற்றிப் பெற்றச் செய்தியை நான் சொல்லச் சென்றபோது, பத்திரிகை நண்பர்கள் மக்களுக்கு என்ன செய்தியைச் சொல்கிறீர்கள் என்று என்னிடத்தில் கேட்டார்கள், ஒரே வரிதான் சொன்னேன். இந்த ஆட்சி வரவேண்டும் என்று வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கு வாக்களிக்காத மக்களையும் கவரக்கூடிய வகையில் என்னுடையப் பணி இருக்கும், அவர்களுக்கும் சேர்த்துதான் இந்த ஆட்சி என்று நான் சொன்னேன்.

அதனால்தான் கடந்த தேர்தல் நேரத்தில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறவேண்டும், அந்த மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து 100 நாட்களில் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று ஒரு நிகழ்ச்சியை நடத்தினோம். அதன் மூலமாகப் பெறப்பட்ட மனுக்களில் இதுவரைக்கும் 50 சதவீதத்திற்கும் மேலான மனுக்கள், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்கிறேன்.

அதனால்தான், தலைவர் அவர்களை நம்மைப் பயிற்றுவிக்கும்போது சொன்னார், ‘சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்’ என்பது தலைவர் கலைஞருடைய வாசகம்.

இன்றைக்கு மட்டும் ரூ.261.39 கோடி மதிப்பில் முடிவுற்றத் திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.38.52 கோடி மதிப்பிலான 83 முடிவுற்றப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 60 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அரசுத் துறைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை அனைத்திற்கும் மேலாக 30,837 பேருக்கு நலத்திட்ட உதவிகள் தரப்பட இருக்கின்றன. 26 அரசுத் துறைகளின் சார்பாக ரூ.168.64 கோடி மதிப்பீட்டில் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. 30,837 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் சென்று சேர ஒரு மகிழ்ச்சியான விழாவாக, நல்ல நிகழ்ச்சியாக இது நடந்து கொண்டிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு தனிமனிதரின் வாழ்க்கை மேம்பாட்டையும் மனதில் வைத்துச் செயல்படும் அரசாக தமிழக அரசு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனிமனிதனின் வாழ்க்கை மேம்பாடுதான் – ஒரு மாவட்டத்தினுடைய வளர்ச்சி, இந்தச் சமூகத்தினுடைய வளர்ச்சி. அந்த வகையில் ஒவ்வொரு தனிமனிதனின் கவலையையும் தீர்ப்பதை எங்களது கடமையாக நாங்கள் கொண்டுள்ளோம்.

அதே போல் ஒட்டுமொத்தமாக இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம்.

இன்றைக்கு மட்டும் ரூ.1,242 கோடி மதிப்பிலான திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு நான் அறிவிக்கப் போகிறேன். அதில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை இல்லாத பகுதிகளில் ரூ.530 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும், சுமார் 520 கிலோ மீட்டர் தூரத்துக்குப் பாதாளச் சாக்கடைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்படும், சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தங்குதடையின்றிக் குடிநீர் கிடைக்கக்கூடிய வகையில் ரூ.158 கோடி செலவில் கூடுதல் குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும், சேலத்தில் உள்ள போடி நாயக்கன்பட்டி ஏரி, மூக்கனேரி, அல்லிக்குட்டை ஏரி போன்ற நீர்நிலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.69 கோடி செலவில் செயல்படுத்தப்படும், சேலம் அம்மாபேட்டை பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் பொதுமக்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று ரூ.120 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும், சேலம் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக ரூ.20 கோடி செலவில் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு அரங்கம் ஒன்று அமைக்கப்படும், சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகள் ரூ.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா ஒன்று விரைவில் அமைய இருக்கிறது, கொலுசு உற்பத்தியில் தலைசிறந்து விளங்கக் கூடிய மாவட்டம் சேலம் மாவட்டம். நூற்றுக்கும் மேற்பட்ட கொலுசு உற்பத்தியாளர்கள் உடனடியாகத் தொழில்

தொடங்குவதற்கு வசதியாக பன்மாடி உற்பத்தி மையம் ஒன்று ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும், இளைஞர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில் கருப்பூரில் டைடல் மென்பொருள் தொழில் பூங்கா ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

இந்த உறுதிமொழிகளை எல்லாம் முதற்கட்டமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடக்கம்தான். இன்னும் பல திட்டங்கள் படிப்படியாக வர இருக்கின்றன.

நான் ஒவ்வொரு ஆலோசனைக் கூட்டத்திலும் வலியுறுத்தி வருவது என்னவென்றால், சமச்சீரான வளர்ச்சி என்பதுதான். இந்தத் தொழில் – அந்தத் தொழில் என்ற எண்ணம் கிடையாது. இந்த மாவட்டம் – அந்த மாவட்டம் என்ற பாகுபாடோ கிடையாது. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சமச்சீர் வளர்ச்சி வரவேண்டுமென்றால், சம உரிமை கொடுக்கக்கூடிய வகையில் திட்டங்களை உருவாக்கித் தரவேண்டும். அந்த வகையில், அனைத்து மாவட்டங்களுக்கும் இது போன்ற ஏராளமான திட்டப்பணிகளைத் தீட்டி நாங்கள் தொடங்கி வைத்துக்கொண்டிருக்கிறோம்.

சில நாட்களுக்கு முன்னால் வறுமை குறைவான மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் இருப்பதாக ஒரு புள்ளிவிவரம் சுட்டிக்காட்டியது.

பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும் ஆட்சிக்கு வந்தபிறகு நிறைவேற்றப்பட்ட சமூகநலத் திட்டங்கள்தான் இதற்குக் காரணம். இது மகிழ்ச்சிக்குரியதாக இருந்தாலும் அந்தப் புள்ளிவிவரம் எனக்கு முழு மகிழ்ச்சியைத் தரவில்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும்.

வறுமையை முழுவதுமாக ஒழிக்க வேண்டும். தமிழ்நாட்டில் பசி என்பதே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். வறுமையே இல்லாத மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலாவதாக இருக்க வேண்டும். அதுதான் நமக்குப் பெருமை. அத்தகைய சூழலை உருவாக்கத்தான் இந்த அரசு முழு முயற்சியோடு களத்தில் இறங்கி இருக்கிறது.

இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதலிடம் என்கிற இலக்கை எட்டும், அதுதான் என்னுடைய இலக்கு. அதற்காகத்தான் நான் நாள் பார்க்கவில்லை, நேரம் பார்க்கவில்லை, உழைத்துக் கொண்டே இருக்கிறேன்.

கலைஞர் அவர்கள் என்னைப்பற்றி அடிக்கடி சொல்கிறபோது, அவர் பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார், 'ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு' என்று. அவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டு நான் நித்தமும் உழைத்துக் கொண்டு இருக்கிறேன்.

முதலில் கொரோனாவை விரட்டினோம்! அதனை வென்றோம்! பிறகு மழை வந்தது, வெள்ளம் வந்தது, அந்தத் துயரத்தையும் துடைத்திருக்கிறோம்! எத்தகைய சோதனைகளையும் வென்று சாதனை படைக்கக்கூடிய நெஞ்சுறுதியை மக்களாகிய நீங்கள்தான் எங்களுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்!

ஏழை, எளிய தாய்மார்கள், என்னைப் பார்த்து மகிழ்ச்சியோடு வணங்கி வாழ்த்தும்போது உலகத்தின் மிகச்சிறந்த விருதைப் பெற்றது போல நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

'ரெண்டு நாளா தண்ணீர் தேங்கி நின்றது, குறிப்பாகச் சென்னை மற்றும் பல மாவட்டங்களில். அதிகாரிகள் எல்லாம் வந்து வேலை பார்த்துச் சரிசெய்து விட்டார்கள்' என்று மக்கள் சொல்கிறார்களே, அதுதான் எனக்குப் பெருமை.

மூன்று நாட்களுக்கு முன்னால் கோவையில் இருந்தேன்! நேற்றைய தினம் சென்னையில் இருந்தேன்! இன்று சேலம் வந்து இருக்கிறேன்! நாளைக்கு மறுபடியும் சென்னை செல்கிறேன்!

இந்தப் பொறுப்பு இருக்கின்ற வரையில் நிச்சயமாக, உறுதியாகச் சொல்கிறேன், ஏதோ மூன்று முறை, ஐந்து முறை, ஆறு முறை வந்துவிட்டேன் என்று சொன்னார்கள், அது போதாது. திட்டத்தைத் துவக்கி வைத்துவிட்டு, இந்த நிகழ்ச்சி இதோடு முடிந்துவிட்டது என்று நான் அமைதியாக இருந்துவிட மாட்டேன். பணிகள் நடந்து கொண்டிருக்கின்றபோது மீண்டும் மீண்டும் நான் வருவேன். அதை முடிக்கும் வரை வந்துகொண்டே இருப்பேன், நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.



நான் வெளிப்படையாகச் சொல்கிறேன், **ஓய்வை நான் என்றைக்கும் விரும்பியது கிடையாது. கலைஞர் சொன்னதுபோல உழைப்பு, உழைப்பு, உழைப்பு. உங்களுக்காகத் தொடர்ந்து உழைப்பேன், உழைத்துக்கொண்டே இருப்பேன்** என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

டிசம்பர் 11: மகாகவி பாரதியார் அவர்களின் 140ஆவது பிறந்தநாள்

பைந்தமிழ்த் தேர்ப்பாகனின் நினைவைப் போற்றிடுவோம்

நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
திறம்பாட வந்த மறவன்!
அறம்பாட வந்த அறிஞன்!
படரும் சாதிப் படைக்கு மருந்தாம்
மகாகவி பாரதியாரின்
140ஆவது பிறந்தநாள் இன்று!
தமிழுக்குத் தொண்டுசெய்த
அப்பைந்தமிழ்த் தேர்ப்பாகனின்
நினைவைப் போற்றிடும்
நமது அரசின் முயற்சிகள்
என்றும் தொடர்ந்திடும்!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்
சமூக வலைதளப் பதிவு

மகாகவி பாரதியார் அவர்களின் 140ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர் - 11.12.2021

கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள்

வடகிழக்குப் பருவமழையினால் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும், கன்னியாகுமரியிலும் மிக அதிகளவில் சாலைகள் உள்ளிட்டப் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்டப் பகுதிகளை நேரில் சென்று தொடர்ந்து ஆய்வு செய்து நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்கள். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் சாலைகள், வடிகால்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கானப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள், டெல்டா மாவட்டங்களில் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பயிர் சேதங்கள் குறித்து ஆய்வு செய்து, விவசாயிகளைச் சந்தித்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டு, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க நியமித்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள் தலைமையிலான குழுவினர் பயிர் சேதங்கள் குறித்த அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தனர். இக்குழுவின் அறிக்கை மீதான விரிவான ஆலோசனைக்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்.

★ அறுவடைக்குத் தயாராக இருந்த குறுவை–கார்–சொர்ணவாரிப் பயிர்கள், முழுமையாகச் சேதமடைந்த இனங்களில் விவசாயிகளுக்கு இழப்பீடாக, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் வழங்கப்படும்.

★ நடப்பு சம்பா பருவத்தில் நடவு செய்து, நீரில் மூழ்கிச் சேதமடைந்த பயிர்களை மறு சாகுபடி செய்திட ஏதுவாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 6 ஆயிரத்து 38 ரூபாய் மதிப்பீட்டில் இடுபொருட்கள் பின்வருமாறு வழங்கப்படும்.

★ ரூ.1,485க்கு மறுசாகுபடி செய்திட 45 கிலோ குறுகிய கால விதை. மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களில் மஞ்சள் நோயைத் தடுத்திட ரூ.1,235க்கு 25 கிலோ நுண்ணூட்ட உரம். ரூ.354க்கு தழைச்சத்து கிடைத்திட 60 கிலோ யூரியா. தழைச்சத்து மற்றும் மணிச்சத்து கிடைத்திட 125 கிலோ டிஏபி உரம். ஆக மொத்தம் ரூ.2,964க்கு இடுபொருட்கள்.

மழை வெள்ளத்தால் மாநிலம் முழுவதும் பாதிப்படைந்த சாலைகள், வடிகால்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சரி செய்ய ரூ.300 கோடி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மணலி புதுநகர்

20.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொசஸ்தலை ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் கரையோர பகுதியான மணலி புதுநகர், வடிவுடையம்மன் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தேங்கியுள்ள வெள்ளநீரை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட மணலி புதுநகர் பகுதி மக்களுக்காக ஜி.ஆர்.டி. விவேகானந்தர் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமைப் பார்வையிட்டு ஆய்வு செய்து அங்கு தங்கியுள்ள மக்களிடம் அவர்களது தேவைகளைக் கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அதன்பின்பு நிவாரண முகாமில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

ஜி.ஆர்.டி. விவேகானந்தர் உயர்நிலைப் பள்ளி நிவாரண முகாம்

24.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

26.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை, புளியந்தோப்பு பகுதியில், மழையால் சேதமடைந்த மழைநீர் வடிகால் சீரமைப்புப் பணிகளையும், திரு.வி.க.நகர், 73ஆவது வார்டு, ஸ்டீபன்சன் சாலையில் பாலப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பணிகளைப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் துரிதமாக முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஜி.ஆர்.டி. விவேகானந்தர் உயர்நிலைப் பள்ளியில் மருத்துவ முகாம்

சிவ இளங்கோ சாலை மற்றும் பெரவள்ளூர் காவல் நிலையம் எதிரில் உள்ள பகுதிகளிலும், அசோகா அவின்யூ பகுதிகளிலும் தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் பம்ப் மூலம் வெளியேற்றும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள குளத்தைச் சீரமைக்கும் பணியினையும், கந்தசாமி சாலையில் மழைநீர் தேங்கியுள்ளதையும் பார்வையிட்டு மழைநீரைத் துரிதமாக வெளியேற்றவும் உத்தரவிட்டார்.

27.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திரு.வி.க.நகர் மண்டலம், டிமெலஸ் சாலை, பட்டாளம் மற்றும் புளியந்தோப்பு நெடுஞ்சாலை பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றிடத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

புளியந்தோப்பு

அதனைத் தொடர்ந்து, இரவு சுமார் 7.30 மணியளவில் கொட்டும் மழையில் சென்னை, தியாகராய நகர், விஜயராகவாச்சாரி சாலைப் பகுதிகளில் கால்வாயில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளநீர் வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், ஜி.என். சாலை, பசுல்லா சாலை, திருமலை சாலை ஆகிய பகுதிகளில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரைக் கொட்டும் மழையில் பார்வையிட்டு ஆய்வு செய்து, தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றிடத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

புளியந்தோப்பு நெடுஞ்சாலை...



தியாகராய நகர், பசுல்லா சாலை...

பூவிருந்தவல்லி அம்மன் கோயில் தெரு...

“நேரம், காலம் பார்க்காது பணியாற்றி வரும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகளுடன் நானும் களத்தில் நிற்கிறேன்; நிற்பேன் !”

சென்னையில், கடந்த 200 ஆண்டுகளில் ஒரே மாதத்தில் 1000 மி.மீ. மழைப் பதிவாவது இதுதான் நான்காவது முறை என்கிறார்கள் வானிலை வல்லுநர்கள். இத்தகைய கடும் மழைப்பொழிவிலும் உயிர்ப்பலிகளைத் தடுத்து; முடிந்தவரை உடமைச் சேதங்களைக் குறைத்து; பாதிப்புகள் விரைந்து சரி செய்யப்பட்டு; நிலைமை கட்டுக்குள் இருப்பதை உறுதிசெய்துள்ளதற்கு முழு முதற்காரணம், ஓய்வுறக்கமின்றி நாள் முழுவதும் கொட்டும் மழையில் பணியாற்றிவரும் மாநகராட்சி, மின்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, காவல்துறை, உள்ளிட்ட அனைத்துத்துறை அதிகாரிகள்தான். அவர்களுக்கு நாம் எத்தனை நன்றி கூறினாலும் போதாது !

அடுத்த சில நாட்களுக்கும் மிக அதிகமழை தொடரும் என அறிவிக்கப்பட்டிருப்பதால், மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அனைவரும் நேரம், காலம் பார்க்காது களத்திலேயே இருந்து பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்களோடு முதலமைச்சராகிய நானும் களத்தில் நிற்கிறேன்; நிற்பேன் ! என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

28.11.2021

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, பத்மாவதி நகரில் வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், பத்மாவதி நகரிலிருந்து வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வரை 2 கி.மீ. நடந்தே சென்று வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

திருவேற்காடு நகராட்சி, வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி நிவாரண முகாமினைப் பார்வையிட்டு, அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள 300க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்கள். மேலும், வேலப்பன்சாவடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

பூவிருந்தவல்லி நகராட்சி, அம்மன் கோவில் தெரு, காவலர் குடியிருப்பில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டு, தேங்கியுள்ள மழைநீரை விரைந்து அகற்றிடத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

ஆவடி மாநகராட்சி, ஸ்ரீராம் நகர் மற்றும் திருமுல்லைவாயல், கணபதி நகர் ஆகிய பகுதிகளில் கனமழையின் காரணமாக வெள்ளம் தேங்கியுள்ள மழைநீரை இயந்திரம் மூலம் வெளியேற்றும் பணிகளை ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்ட அனைத்து இடங்களிலும் சாலை மற்றும் தெருக்களில் பெருந்திரளாக நின்றிருந்த பொதுமக்களிடம், மழைக்காலங்களில் நோய்த்தொற்று ஏற்படாவண்ணம் எச்சரிக்கையாக

இருக்கவேண்டும் என்றும், கொரோனா காலத்தில் அனைவரும் முகக்கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்றும், கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் பரிவுடன் எடுத்துரைத்தார்.

கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடச் செல்லும் வழியில், ஆவடி மாநகராட்சி, மூர்த்தி நகர், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் சாலையோரக் கடையில் தேநீர் அருந்தி, பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிவாரண உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

சென்னை, வில்லிவாக்கத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு அருகில் நடைபெற்ற கொரோனா சிறப்புத் தடுப்பூசி முகாமை பார்வையிட்டு, மருத்துவ அலுவலர்களிடம், “இன்று எவ்வளவு நபர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்கள்?” எனக் கேட்டறிந்து, முகாமிற்கு வரும் பொதுமக்கள் அனைவருக்கும் மாலை வரை இருந்து தடுப்பூசி செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

29.11.2021

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட பி.டி.சி. குடியிருப்புப் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக வரதராஜபுரம் ஊராட்சி, வேல்ஸ் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

குன்றத்தூர் வட்டம், வரதராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட பரத்வாஜ் நகர், பி.டி.சி குடியிருப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 4 அடி உயரத்திற்குத் தேங்கியிருந்த மழைநீரை மோட்டார் பம்புகள் மூலம் அகற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்வையிட்டார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 25 முகாம்களில் சுமார் 930 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வடகிழக்குப் பருவமழை சார்ந்த புகார்களைத் தெரிவிக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் தனிக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர் ஊராட்சிக்குட்பட்ட அமுதம் நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, சீரமைப்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார்.

வேலப்பன் சாவடி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி சிறப்பு முகாம்...

வேலப்பன் சாவடி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி மருத்துவ முகாம்...

திருமுல்லைவாயில் கணபதி நகரில்...

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் சாலையோர கடையில் தேநீர் அருந்துதல்...

காஞ்சிபுரம் மாவட்டம், பி.டி.சி. குடியிருப்புப் பகுதி...

காஞ்சிபுரம் மாவட்டம், பி.டி.சி. குடியிருப்புப் பகுதி...

காஞ்சிபுரம் மாவட்டம், வேல்ஸ் பள்ளி நிவாரண முகாம்...

செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர், ஜோதி நகர்...

மேலும், தாம்பரம் மாநகராட்சி, வானியன்குளம், இரும்புலியூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்புப் பணிகள் குறித்த விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முடிச்சூர், ஜோதி நகர் பகுதிகளைப் பார்வையிட்டு, அங்கு தேங்கியுள்ள மழைநீரைத் துரிதமாக அகற்றிட மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டு, பொதுமக்களிடம் தேவைப்படும் நிவாரண உதவிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கனமழையால் அதிகமாகப் பாதிக்கக்கூடியப் பகுதிகளான முடிச்சூர், தாம்பரம், இரும்புலியூர், கூடுவாஞ்சேரி, தாழம்பூர், பெரும்பாக்கம், ஊரப்பாக்கம் ஆகிய பகுதிகளைக் கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் 7 சிறப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு நிவாரணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவமழை சார்ந்த புகார்களைப் பொதுமக்கள் தெரிவிக்க செங்கல்பட்டு மாவட்ட நிருவாகத்தின் சார்பில் 24 மணி நேரமும் செயல்படும் வாட்ஸ்அப் மற்றும் இலவச தொலைபேசி எண்கள் விளம்பரப்படுத்தப்பட்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 44 முகாம்களில் சுமார் 2,313 நபர்கள் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலை, தீட்டி தோட்டம் 4ஆவது தெரு மற்றும் ராஜன் நகரில் நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாம்களைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து, சிகிச்சை பெறவந்த மக்களுக்கு மருந்து, மாத்திரைகள் வழங்கினார்.

கிருஷ்ணா நகரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, அப்பகுதி குடியிருப்புச் சங்கங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 27 கண்காணிப்புக் கேமராக்களின் (CCTV) இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், குமரன் நகர், உண்ணாமலை தெரு, ஸ்ரீநகர் காலனி, பூம்புகார் நகர், ரெட்டேரி, அம்பேத்கர் நகர் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, முதலமைச்சர் அவர்களே நேரடியாக மழை வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்டுச் சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொண்டு வருவது மனநிறைவை அளிப்பதாகவும், சிறந்த முறையில் ஆட்சி நடைபெற்று வருவது மகிழ்ச்சியளிப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தார்கள்.

மேலும், தணிகாச்சலம் கால்வாயில் கனமழையால் ஏற்பட்ட வெள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டார். சாந்தி நகர், துர்கா காலனி மற்றும் நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

30.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, செம்மஞ்சேரியில் மழை வெள்ளத்தால்

தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து...

பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், அப்பகுதியில் மழைநீரை வெளியேற்றும் பணிகளைப் பார்வையிட்டு, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட அப்பகுதிகளுக்கு நடந்து சென்று, அப்பகுதி மக்களிடம் அவர்களது தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். அத்துடன் மழைநீர் சூழ்ந்திருக்கும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

செம்மஞ்சேரி, குமரன் நகரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் கோவிட் தடுப்பூசி முகாம்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர், ஒக்கியம் மேட்டில் உள்ள காரப்பாக்கம் ஏரியில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

கொளத்தூர் மெயின் ரோடு, பூம்புகார் நகரில் சிறப்பு மருத்துவ முகாம்...

01.12.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட செம்மஞ்சேரி பகுதிகளில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து செம்மஞ்சேரி, சுனாமி குடியிருப்பில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். மேலும் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செம்மஞ்சேரியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளைப் பார்வையிடச் செல்லும் வழியில், அலர்மேல்மங்காபுரத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் பகுதியில் மழைநீர் தேங்கியுள்ளதாகவும், மழைநீர் வடிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர். அக்கோரிக்கையின் அடிப்படையில், அவர்களுக்குத் தேவைப்படும் பால், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களை வீடு வீடாகச் சென்று வழங்குவதற்கும், மழைநீர் வடிவதற்கும் துரித நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார் அலர்மேல்மங்காபுரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்விற்குச் சென்றபோது, அங்குத் தேங்கியுள்ள மழைநீர் வடிவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும், நிவாரண உதவிகளை வழங்கியமைக்கும் அப்பகுதி மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

செம்மஞ்சேரி அலர்மேல்மங்காபுரம்...

பின்னர், மேடவாக்கம்–சோழிங்கநல்லூர் சாலையில் மழைநீர் வெளியேற 9 மீட்டர் அகலத்தில் உள்ள பாலத்தை 70 மீட்டர் அகலத்தில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலமாக அமைக்கும் பணியையும், பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியிலிருந்து நேரடியாக பக்கிங்காம் கால்வாயை இணைக்கும் வகையில் ரூ.47 கோடி செலவில் மழைநீர் வடிகால் (Macro Drain) அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை, செம்மஞ்சேரி...

மேடவாக்கம், சோழிங்கநல்லூர் சாலையில் கூடுதல் கண்களுடன் புதிய பாலம் அமையும் இடம் பார்வையிடல்...

02.12.2021

மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும், மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

தூத்துக்குடி பிரையண்ட் நகர்...

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பிரையண்ட் நகரில் கனமழையால் ஏற்பட்டுள்ள சேதங்களையும், சாலைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டு, ஆய்வு செய்து, வெள்ளநீரை அகற்றும் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள, அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், பிரையண்ட் நகரில் தேங்கியிருந்த மழைநீரில் நீண்டதூரம் நடந்தே சென்று பாதிப்புகளைப் பார்வையிட்டு, அப்பகுதி மக்களிடம் பாதிப்புகளின் விவரங்கள் மற்றும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆய்வின்போது...

அம்பேத்கர் நகர், ரஹ்மத் நகர் ஆகிய பகுதிகளில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, வெள்ளநீரை அகற்றும் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், எட்டையபுரம் மதுரை சாலையில் உள்ள ஏ.வி.எம். மஹாலில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 3,000 நபர்களுக்கு ரூ.42.60 இலட்சம் மதிப்பிலான அரிசி, மளிகைப் பொருட்கள், பெட்ஷீட், பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை நிவாரண உதவிகளாக வழங்கினார்.

முன்னதாக, தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வெள்ளப் பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஆய்வின்போது...

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த சிறப்பு மருத்துவ முகாம்களைத் தொடர்ந்து நடத்திடவும், மாவட்டத்தில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றிட ஒருங்கிணைந்த திட்டத்தைத் தயாரிக்கவும், நீர்வழிப் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட உடனடி நடவடிக்கை எடுத்திடவும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சீர்செய்து, மக்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், தரைப்பாலங்களை மறுசீரமைத்து, மேம்பாலங்களாக அமைத்திடவும், நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு, குழந்தைகளுக்குத் தேவையான பால் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களைத் தங்குதடையில்லாமல் வழங்கிடவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கனமழையால் தூத்துக்குடி மாவட்டத்தில் 41 வீடுகள் முழுமையாகவும், 532 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தன.

மௌலிவாக்கம், மாங்காடு சுரங்கப்பாதைப் பகுதியில்...

அய்யப்பன்தாங்கல், போரூர் ஏரி கலங்கல் பகுதியில்..

அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர் பகுதியில்
நிவாரண உதவி...

திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலை ஆற்றுப்பகுதியில்...

வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு ரூ.25,04,900 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 28 கால்நடைகள் இழப்பிற்கு ரூ.3,38,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் உயிரிழந்த 6 நபர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.4 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தம் 387 இடங்களில் தேங்கியுள்ள மழைநீரானது, 422 மின்மோட்டார்கள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதில் தூத்துக்குடி மாநகராட்சியில் மட்டும் 355 இடங்களில் தேங்கியுள்ள மழைநீரானது 390 மின்மோட்டார்கள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 87 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன. அதில் 34 நிவாரண முகாம்களில் 2,184 நபர்கள் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு மற்றும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

04.12.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், அய்யப்பன்தாங்கல், போரூர் ஏரி கலங்கல் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மௌலிவாக்கம், மாங்காடு சுரங்கப்பாதை பகுதியில் போரூர் ஏரியின் உபரிநீர் வாய்க்காலில் கனமழையால் ஏற்பட்ட மழைவெள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், அய்யப்பன் தாங்கல், பரணிபுத்தூர் சாலைப் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கி, பொதுமக்களிடம் பாதிப்புகளின் விவரங்கள் மற்றும் தேவைகளைக் கேட்டறிந்தார்.

இறுதியாகத் தனலட்சுமி நகர்ப் பகுதியில் மழை வெள்ளத்தால் சூழப்பட்ட குடியிருப்புப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, பொதுமக்களிடம் பாதிப்புகளின் விவரங்கள் குறித்துக் கேட்டறிந்து, அப்பகுதியில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

06.12.2021

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை, மணலி புதுநகர், வடிவுடையம்மன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். அப்போது அப்பகுதி மக்கள், சீரமைப்புப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாகவும், அத்தியாவசியப் பொருட்கள் தடையில்லாமல் கிடைத்து வருவதாகவும், நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஆய்வு செய்வது தங்களுக்கு மனநிறைவைத் தருவதாகவும் தெரிவித்தனர். பின்னர், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வெள்ளிவாயல் ஊராட்சி, கொசஸ்தலை ஆற்றுப் பகுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, கொசஸ்தலை ஆற்றிலிருந்து உபரிநீர் குடியிருப்புப் பகுதிகளில் புகாதவண்ணம் நடவடிக்கை எடுத்திட நீர்வளத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தாம்பரம் நகராட்சி, இரும்புலியூர் பகுதியில்...

வரதராஜபுரம் பி.டி.சி. குடியிருப்பு...

சென்னை, பாடிகுப்பம் இரயில் நகர் தரைப்பாலப் பகுதி...

சென்னை, பாடிகுப்பம் இரயில் நகர் தரைப்பாலப் பகுதி...

07.12.2021

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனமழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் நகராட்சி, இரும்புலியூர், வன்னியன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பகுதி மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளின் விவரங்கள் மற்றும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

முடிச்சூர் ஊராட்சி, அமுதம் நகரில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அமுதம் நகரில் தேங்கும் மழைநீரை அடையாறு ஆற்றுப் பாலத்தில் சேர்க்கும் வகையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கால்வாயினை நிரந்தரமாக அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முடிச்சூர் ஏரியிலிருந்து வரும் கூடுதல் நீரை சிக்கனா ஏரி வழியாக அடையாறு ஆற்றில் இணைக்கும் வகையில் திறந்தவெளிக் கால்வாய் அமைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் ஊராட்சி, பிடிசி குடியிருப்புப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பகுதி மக்களிடம் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், மகாலட்சுமி நகர் மேம்பாலப் பகுதியில் நீர்வள ஆதாரத்துறையால் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மண்ணூறான் குளத்தில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தாம்பரம் மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளையும் இச்சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைத்து முழுத் திறனுடன் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

08.12.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கனமழையால் பாதிக்கப்பட்ட பாடிக்குப்பம் இரயில் நகர் தரைப்பாலம், கொரட்டூர் ஏரி மற்றும் அம்பத்தூர் வடிநீர்க் கால்வாய் மற்றும் ஏரி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பாடிக்குப்பம் இரயில் நகரில் அமைந்துள்ள தரைப்பாலப் பகுதியில் வெள்ளத்தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு, பழுதடைந்துள்ள தரைப்பாலத்தைச் சீரமைத்திடவும், நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.16 கோடி மதிப்பீட்டில் 93 மீட்டர் நீளம் கொண்ட உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கான நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

பின்னர், கருக்குப் பிரதான சாலை, DTP காலனியில் கொரட்டூர் ஏரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்புப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அம்பத்தூர், டி.டி.பி. காலனி பகுதியில்...

கொளத்தூர், சபாபதி தெரு...

கொளத்தூர், வள்ளியம்மை தெரு...

கொளத்தூர், வெங்கடேஸ்வரா நகர்...

மேலும், கொசஸ்தலையாற்று வடிநிலைப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள இரயில்வே பாதையின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் கான்கிரீட் தரைத்தளத்துடன் கூடிய வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணியினை ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மழைக் காலங்களில் அம்பத்தூர் பகுதியில் மழைநீர் தேங்காவண்ணம் உபரிநீரைக் கொரட்டூர் ஏரிக்குள் கொண்டு செல்லக் கூடுதலாக ஒரு சிறு பாலம் அமைக்க பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கும் மற்றும் இரண்டு வெள்ள சீராக்கி (Flood Regulator) அமைக்கப் பொதுப்பணித் துறைக்கும் உத்தரவிட்டார்.

10.12.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. மண்டலத்தைச் சேர்ந்த சபாபதி தெருவில் 23.11.2021 அன்று இரண்டு மாடி குடியிருப்பு வீட்டின் முதல் தளம் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் காயமடைந்த திருமதி ஜெயலட்சுமி, திருமதி சுதா மற்றும் திருமதி மோகனா ஆகியோரது இல்லத்திற்கு நேரில் சென்று, நிதியுதவி வழங்கி, உடல்நலம் குறித்து விசாரித்து, ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வள்ளியம்மை தெருவில் பொதுமக்களைச் சந்தித்து, அவர்களது தேவைகளைக் கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார். அப்போது அப்பகுதி மக்கள் வெள்ளத் தடுப்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டு, தேங்கிய மழைநீரை விரைவாக அகற்றியதற்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும், அப்பகுதியில் உள்ள கழிவுநீர் தொடர்பான பிரச்சினையைச் சீர்செய்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். அப்பகுதி மக்களின் கோரிக்கையினைத் துரிதமாகக் களைவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், ஜி.கே.எம். காலனி 11ஆவது தெருவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களைச் சந்தித்து, அவர்களது தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், சிவ இளங்கோ சாலையில் உள்ள வண்ணான்குட்டையைப் பார்வையிட்டு, குட்டையில் கழிவுநீர் கலக்காமல் இருக்கவும், அப்பகுதியில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், கொளத்தூர், வெங்கடேஸ்வரா நகரிலுள்ள ஸ்கை மஹால், லஷ்மணன் நகர், அக்பர் சதுக்கம் மற்றும் ஜெயராம் நகர் 1ஆவது பிரதான சாலை ஆகிய இடங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டு

மகாகவியின் புகழ்பாடும் ஓராண்டுத் தொடர் நிகழ்ச்சிகள்

சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் 04.12.2021 அன்று பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளைப் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தேசப் பற்று, தெய்வப் பற்று, தமிழ்ப் பற்று, மானுடப் பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் மகாகவி பாரதியார் அவர்கள். நாட்டு விடுதலைக்காகப் போராடியவராக மட்டுமே இருந்திருந்தால் அதற்காக மட்டுமே அவர் நினைவு கூறப்பட்டிருப்பார். அதையும் தாண்டி சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியதால்தான் பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார்.

பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அதில், பாரதி நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்குச் சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித்துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில் தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசியதாவது ;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு மகாகவியின் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கோட்டையில் சுதந்திரத் தின விழாவில் உரையாற்றிய போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சிலைக்கெல்லாம் மலர் மாலை அணிவித்திட வேண்டும் என்று சொல்லி செய்தித் துறைக்கு உத்திரவிடப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டது. அந்த வகையில் பெரும்புலவன் பாரதியாரின் நினைவு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாவைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமையடைகிறேன்.

பாரதியார் அவர்கள் குறைந்த வயதில் துர்பாக்கிய வசமாக காலமானார். அவர் இன்னும் சில காலம் உயிரோடு இருந்திருந்தால் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்திருப்பார். அவர் வாழ்ந்த இந்தக் காலத்தில் இந்த மண்ணுக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் அவருடைய கவிதைகள் விளங்குகின்றன. அந்தளவிற்கு அவர் தன்னுடைய வாழ்க்கையைப் பதிவு செய்துவிட்டு மறைந்துள்ளார். மனதை உற்சாகப்படுத்துகின்ற அவரது

பாடல் வரிகள் நம்முடைய வாழ்க்கையில் ஒரு உந்துதலை ஏற்படுத்தும் வகையில் மனதில் உறுதி வேண்டும்; வாக்கினிலே இனிமை வேண்டும்; நினைவு நல்லது வேண்டும்; நெருங்கின பொருட்கள் கைப்பட வேண்டும்; கனவு மெய்ப்பட வேண்டும் போன்ற செய்திகளை ஆணித்தரமாக இந்த மக்களுக்கு எடுத்துரைத்தார். இந்த மண் உள்ளவரை, மனிதன் உள்ளவரை அவருடைய இந்தக் கவிதை நிலைக்கும். விடுதலைப் போராட்டத்திற்காக அவர் கொடுத்த குரல் இன்றைக்கு விடியலை ஏற்படுத்தியுள்ளது. ஓங்கி ஒலிக்கிறது.

மேலும், வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த எத்தலப்ப நாயக்கர் இந்தத் தாய் மண்ணைக் காப்பாற்றுவதற்கு எத்தனை தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதை நினைவுகூறும் வகையில் அவர்களுக்கு நினைவரங்கம், திருவுருவச் சிலை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தியாகிகள் மற்றும் பெண் தியாகிகளை நினைவுகூறும் வகையில் சென்னைக் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் புகைப்படக் கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ''பண்டிகைக் காலத்தில் வெளியூர் சென்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் அக்கண்காட்சியைக் கண்டது மகிழ்ச்சியை அளிக்கின்றது. நம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்குத் தங்களது இன்னுயிரை நீத்தவர்களைப் போற்றக்கூடிய நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களைப் போலவே தமிழ்நாட்டில் இன்றைக்கு ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், தமிழ்மொழி காத்த தியாகிகளுக்கும், திருவுருவச் சிலையும் மற்றும் நினைவு மண்டபமும் அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள்'' என்று கூறினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள், கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி உட்பட பொதுமக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் திரு. வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. தி.அம்பலவாணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் மங்கள இசை மற்றும் தனியார் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்துள்ளவாறு, பெரும்புலவன் பாரதியின் நினைவு நூற்றாண்டையொட்டி, மகாகவியின் புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக மகாகவி பாரதியாரின் பிறந்தநாளான 11.12.2021 அன்று, சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் வானவில் பண்பாட்டு மையம் சார்பில் ''வாரம்தோறும் பாரதி'' நிகழ்ச்சியில் ''இன்று புதியதாய்ப் பிறந்தோம்'' என்ற தலைப்பில் பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி பாரதி பாஸ்கர் அவர்கள் உரையாற்றினார்.

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2021

புதுடெல்லியில் நடைபெறும் 40ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2021 முன்னிட்டு ''லால்சவுக்'' அரங்கில் 16.11.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு (2021) நடைபெறும் 40ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியினை கடந்த 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாண்புமிகு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் திரு. பியூஸ்கோயல் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்றுத் தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் ''சுயச் சார்பு இந்தியா'' (ஆத்ம நிர்பார் பாரத்) – Self Reliant India ஆகும். இதன்மூலம் நம் இந்தியத் திருநாட்டையும், இந்திய மக்களையும் அனைத்திலும் சுயச் சார்புடையதாகவும் தன்னிறைவுப் பெற்றிடச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுற்றுலாத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற அரசு மற்றும் அரசுச் சார்புத் துறைகள் பங்கேற்று, தங்கள் துறையின் சாதனைகள், வளர்ச்சித் திட்டங்கள் குறித்தப் புகைப்படங்கள் மற்றும் செயல் விளக்க மாதிரிகளைச் சிறப்பான முறையில் நேரடிக் காட்சியாகப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்துள்ளனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் குறித்தப் புகைப்படங்கள், உற்பத்திப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்றுத் தமிழரின் தொன்மையான பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் சிவகங்கை மாவட்டம் கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த மாதிரி வடிவம் மக்களை மிகவும் கவர்ந்து தமிழர்களின் பண்பாட்டையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

விளக்கும் குறும்படங்களும் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகின்றது. மேலும், அரங்கிற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு, அரங்கில் இடம் பெற்றுள்ள துறைகளின் சாதனைகள் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தக் கண்காட்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசியதாவது, “தமிழ்நாடு அரசின் சார்பில் பத்திரிகையாளர்களுக்குத் தேசிய பத்திரிகையாளர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு துறைகள் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி வைத்துள்ளனர். தொழிற்துறை, வேளாண்மைத்துறை, செய்தித்துறை சார்பில் மற்றும் 75ஆவது சுதந்திரத் திருநாளை முன்னிட்டு விடுதலைப் போரில் தமிழகம் என்கிற புகைப்படக் கண்காட்சியில் விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்றத் தியாகிகளின் புகைப்படங்களும், அவர்களைக் குறித்தச் செய்திகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்டப் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாடு பல்வேறு வகையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்”.

75ஆவது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா (Azadi Ka Amrit Mahotsav) தமிழகத்திலும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண்கள் ஏற்றும் சொல்லொணாத் தொல்லைகட்கு ஆட்பட்டத் தீரத் தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுக் கூர்ந்து போற்றும் வகையில் விடுதலைப் போரில் தமிழகம் எனும் மகத்தானப் புகைப்படக் கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, சென்னைக் கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலைய வளாகத்தில் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்ட மாபெரும் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.11.2021 அன்று பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்து வைத்தார்கள். அதன் அடிப்படையில் இந்த வர்த்தகப் பொருட்காட்சியின் தமிழ்நாடு அரங்கில் விடுதலைப் போரில் ஈடுபட்டத் தமிழகத்தைச் சேர்ந்த பெண் தியாகிகளின் புகைப்படங்கள் மற்றும் முக்கியத் தியாகச் சீலர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வரங்குகளில், சுதந்திரத்திற்காகப் போராடியத் தமிழ்நாட்டுத் தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துரைக்கும் குறும்படங்கள், அரசு சாதனைகளை

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினைச் சிறப்புடன் கொண்டாடின. அந்த வகையில் தமிழ்நாடு நாள் விழா 16.11.2021 அன்று பிரகதி மைதானத்தில் உள்ள “லால்சவுக்” அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நவம்பர் 16:

தேசிய பத்திரிகை தினம்

மக்களின் குரலாய் ஒலிக்கும் ஊடகங்கள்

துணிவுடன் அறம் காக்கப் போராடும்
பத்திரிகையாளர்களைப் போற்றும் நாள் இன்று!
உண்மையின் பக்கம் நின்று மக்களின் குரலாய் ஒலிக்கும் ஊடகங்கள்
மக்களாட்சியின் நான்காவது தூணாக விளங்குகின்றன!
நேர்மையும், நெறியும் தவறாது பணியாற்றும்
பத்திரிகையாளர்கள் அனைவருக்கும்
தேசிய பத்திரிகை தின (National Press Day)
வாழ்த்துகள்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

டிசம்பர் 10 : உலக மனித உரிமைகள் நாள்

சுயமரியாதையைப் பாதுகாத்திட உறுதியேற்போம்

சாதி, மதம், இனம், நிறம், பாலினம் மற்றும் பிறப்பு அடிப்படையிலான எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்குமான அடிப்படை உரிமைகளும் அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே மனித உரிமைத் தத்துவமாகும். 1948ஆம் ஆண்டு மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொது அவை ஏற்றுக்கொண்டதை நினைவுகூர்ந்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 அன்று உலக மனித உரிமைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

நம்மிடம் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என நினைக்கிறோமோ, அதுபோல நாம் மற்றவர்களிடமும் நடந்துகொள்ள வேண்டும் என்பதே மனித உரிமையின் அடிப்படைத் தத்துவமாகும்.

அவ்வகையில் All Human, All Equal என்பதை இந்த ஆண்டுக்கான மனித உரிமைகள் நாள் முழக்கமாக ஐ.நா., அவை அறிவித்துள்ளது. இதைத்தான் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்றும் “யாவரும் கேளிர்” என்றும் தமிழ் நிலம் தாங்கி நின்றது.

இதைத்தான் ‘சுயமரியாதை’ எனும் பெயரில் இந்தத் தமிழ் மண் அரசியல் – சமூக – பண்பாட்டுத் தளத்தில் தொடர்ந்து வளர்த்து வந்துள்ளது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டிடவும், ஒவ்வொருவரின் சுயமரியாதையையும் பாதுகாத்திடவும் இந்த மனித உரிமைகள் நாளில் உறுதியேற்போம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

INTERNATIONAL
HUMAN RIGHTS
DAY

டிசம்பர் 6 :
பாபாசாகேப் அம்பேத்கர் நினைவு நாள்

அறிவுச்சுடர்

ஒடுக்கப்பட்டோரின்
குரலாய் ஒலித்து, அவர்தம்
உரிமைக்காகவும்
விடுதலைக்காகவும்
வாழ்நாளெல்லாம் பாடுபட்ட
அறிவுச்சுடர் நினைவுநாளில்,
அவர் காட்டிய வழியில்
சமத்துவமும் சமூகநீதியும்
மேலோங்கி நிற்கும்
இந்தியாவைப் பாதுகாக்க
உறுதியேற்போம்!

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் தலைவர் மாண்பமை மேனாள் நீதியரசர் திரு.சிவகுமார் அவர்கள், சென்னை இராஜா அண்ணாமலைபுரம் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் – 06.12.2021

காமராஜர் நினைவு இல்லத்தில் ஆய்வு

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், 19.11.2021 அன்று சென்னை தியாகராய நகரில் உள்ள காமராஜர் நினைவு இல்லத்தை ஆய்வு செய்தார். நினைவில்லத்திலுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

டிசம்பர் 11: மகாகவி பாரதியார் அவர்களின் 140ஆவது பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் 140ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் - 11.12.2021

எல்லாரும் இந்நாட்டு மன்னர்...

எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் -ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

- மகாகவி

ஜனவரி 17: பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாள்

நட்புணர்வு

“தனிப்பட்ட முறையில் எனக்கும், எம்.ஜி.ஆருக்கும் இருந்த நட்புணர்வை என்னையும், அவரையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள்தான் தெரிந்திருக்க முடியும். புரிந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தவர்கள், தொலைவிலே இருந்தவர்கள், செய்திகளை மாத்திரம் மேடைகளிலே கேட்டறிந்தவர்கள், ஏடுகளிலே படித்தறிந்தவர்கள் அதைப் புரிந்துகொள்ள இயலாது. உண்மையிலேயே அந்த நட்பை உணர்ந்தவன். அதற்கு மதிப்பளிப்பவன்.”

*– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் (17.01.1990 அன்று சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலிருந்து...)*

ஜனவரி 23: நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள்

விடுதலைச் சேனையின் தளபதி

“இந்தியச் சுதந்திரச் சங்கம், ஆஸாத் ஹிந்த் இராணுவம் ஆகிய இரண்டு அமைப்புகளின் நலனை முன்னிட்டு இந்தியத் தேசிய இராணுவப் படையின் தலைமை அதிகாரத்தை இன்று முதல் நானே நேரடியாக ஏற்றுக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி எனக்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கிறது. இந்திய விடுதலைச் சேனையின் தளபதியாக இருப்பதைவிட ஓர் இந்தியனுக்கு வேறு என்ன பெருமை வேண்டும்? என் தேச மக்கள் 38 கோடிப் பேருக்கும் நான் ஒரு ஊழியன். அந்த 38 கோடி மக்களுக்கும் பாதுகாப்பளிக்கவும், ஒவ்வொரு இந்தியருக்கும் என்மீது பூரண நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளவும் நான் உறுதி பூண்டிருக்கிறேன்.”

– நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

(25.08.1943 அன்று இந்தியத் தேசிய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக நேதாஜி பொறுப்பேற்றுக் கொண்டு வெளியிட்ட விசேஷ தனி உத்தரவு)
நன்றி: நேதாஜியின் வீரவரலாறு என்னும் நூலிலிருந்து...

ஜனவரி 30 :
அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள்

தியாகச் சுடர்

இந்தியாவினுடைய தேசப்பிதா
என்று அழைக்கப்பட்டவரும்,
சாதிமத வெறியர்களுடைய
தாக்குதலுக்குத்
தன் உயிரைத் தியாகம் செய்து,
அந்நாளை இன்று இந்தியா முழுமையும்
“தீண்டாமை ஒழிப்பு நாள் –
மதவெறியை மாய்க்கும் நாள்”
என்று கொண்டாடுகின்ற வகையில்
தன்னுயிரை இந்த நாட்டிற்காக,
சுதந்திரத்திற்காகத் தந்த
மிகப்பெரிய தியாகச்சுடர் உத்தமர்
காந்தியடிகள் ஆவார்கள்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

தமிழரசு

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு (தமிழ்) மாத இதழ்		
தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,000 (10 ஆண்டுகள்)

தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்		
தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,400 (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ **இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113** என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித் தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.12.2021 அன்று தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பிரையண்ட் நகரில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, அப்பகுதி மக்களிடம் பாதிப்புகளின் விவரங்கள் மற்றும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.12.2021 அன்று நீலகிரி மாவட்டம், வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில், ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த இந்திய முப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் திரு. பிபின் ராவத் அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,